வள்ளுவ ஆண்டு 2057 – புரட்டாசி – 19 – செவ்வாய்க்கிழமை – 06.10.2026 | பக்கங்கள் – 36 | இதழ் – 08

BEHIND ME MEDIA

WE SEE BOTH AHEAD AND BEHIND

web : behindmenews.org

குறள் 8 : அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது

பொருள் : அறக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு அல்லாமல், மற்றவர் பொருளும் இன்பமுமாகிய மற்றக் கடல்களைக் கடக்க முடியாது.

# தமிழ் இனப்படுகொலை நினைவுத்தூபி கனடா ஸ்கார்பரோவில் அமைக்கப்படும் - ஒலிவியா சௌ

கனடாவின் ஸ்கார்பரோவில் இரண்டு வருடங்களுக்குள் தமிழ் இனப்படுகொலை நினைவுத் தூபி நிறுவப்படும் என டொரண்டோ மேயர் ஒலிவியா சௌ வாக்குறுதியளித்துள்ளார்.

டொரண்டோ மேயர் தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் 26ம் திகதி இடம்பெறவுள்ள வேளையில் பேட்டியொன்றில் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் சமூகத்துடன் இணைந்து பணியாற்றும் மிக அற்புதமான வாய்ப்பாக இருக்கிறது. பல ஆண்டுகளாக நாங்கள் மிக நெருக்கமாக பணியாற்றி வருகிறோம். 2009-இல் நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, என் மறைந்த கணவர் ஜாக் லேட்டனுடன் சேர்ந்து போர் நிறுத்தம், பொறுப்புக்கூறல் மற்றும் உண்மைக்காக குரல் கொடுத்தோம். இப்போது அதிக வீடுகள், அதிக வேலைவாய்ப்புகள் உருவாக்குவது, தமிழ் சமூக மையம் உட்பட சமூகத்தை ஆதரிப்பது... போன்ற முக்கிய விடயங்கள் எனது தேர்தல் வாக்குறுதிகளில் உள்ளன.



தற்போதைய பிரதமருடனும் முதல்வர் டக் ஃபோர்டுடனும் எனக்கு நல்ல உறவு இருக்கிறது. எனக்கு பொது பாதுகாப்பு அமைச்சர் கெரி ஆனந்தசங்கரியின் ஆதரவும் கிடைத்திருப்பது பெரிய அதிர்ஷ்டம்.

நீங்கள் தனியாகச் சமூக சேவை செய்ய முடியாது. அதனால்தான் அதனால் நான் தமிழ் வணிகர்களை ஒன்றிணைத்தேன் - சிறிய, நடுத்தர, பெரிய வணிகங்கள் கூட. டொராண்டோ நகரத்திற்கு டொராண்டோ குளோபல் என்ற அமைப்பு இருக்கிறது. அது வணிகங்களுக்கு வர்த்தகம் செய்ய உதவுகிறது. தமிழ் வணிகங்களுக்கு மற்ற நாடுகளுடன் வர்த்தகம் செய்ய அதிக வாய்ப்புகளை உருவாக்குவதும், தமிழ் நிறுவனங்கள் டொராண்டோவில் முதலீடு செய்வதும் முக்கியம்.

தமிழ் சேம்பர் ஆஃப் காமர்ஸுடன் மிக நெருக்கமாக இணைந்து பணியாற்றுவது என் பணியின் முக்கிய அங்கம்.

ஸ்கார்பரோவில் தமிழ் இனப்படுகொலை நினைவுத்தூபி ஒன்றை இரண்டு வருடங்களுக்குள் கட்டுவோம். இது குறித்துத் தற்போது பேசிக் கொண்டிருக்கிறோம். இடத்தை முடிவு செய்ததும் கட்டுமானம் தொடங்கும் என்று நிச்சயமாக என்னால் வாக்குக் கொடுக்க முடியும் எனவும் தெரிவித்த அவர்,

கனடிய தமிழ் சமூகத்திற்குக் குறிப்பாக இளைஞர்களுக்கு இங்கே நான் குறிப்பிட விரும்புவது நாங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டால்... இப்போது பள்ளிகளில் காலை உணவு இருக்கிறது. மதிய உணவும் வழங்குவோம்.

அதுவும் உங்கள் பணத்தை மிச்சப்படுத்தும். பொதுப் போக்குவரத்து பயன்படுத்துபவர்களுக்கு - வாரம் பத்து பயணங்களுக்குப் பிறகு மீதமுள்ளவை இலவசம். வார இறுதிகள், இரவு நேரங்கள் இலவசம். ஆயிரக்கணக்கான டொலர்கள் இதனால் மிச்சமாகும்.

மேலும் நான்கு வருடங்கள் மேயராக சமூகத்திற்கு சேவை செய்ய விரும்புகிறேன். தமிழ் சமூகத்தின் ஆதரவை எதிர்பார்க்கிறேன்.

முன்கூட்டிய வாக்குப்பதிவு இந்த வாரம் தொடங்குகிறது இன்று அக்டோபர் 6 முதல் அக்டோபர் 11 வரை. இந்த வார இறுதி, நன்றி செலுத்தும் விடுமுறை. காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை. நான் வாக்குச் சீட்டில் எண் 9. அவர்களின் ஆதரவைப் பெற்று தொடர்ந்து சமூகத்திற்கு சேவை செய்ய விரும்புகிறேன் என ஒலிவியா சௌ மேலும் தெரிவித்திருக்கின்றார்.

## தியாக தீபம் திலீபனின் சிலை அகற்றப் பட்டதை கண்டித்து பிரித்தானியாவில் போராட்டம்




தியாக தீபம் திலீபனின் திருவுருவச் சிலை அகற்றப்பட்டதைக் கண்டித்தும், சிலையை மீளவும் அதே இடத்தில் நிறுவக் கோரியும் மாபெரும் கண்டனப் போராட்டம் ஒன்று பிரித்தானியாவில் இடம் பெற்றது.

குறித்த போராட்டமானது கடந்த 3ஆம் திகதி முன்னெடுக் கப்பட்டது.

P- 20

## பாரிஷ் மற்றும் குரோம்பி: மிஸ்ஸிசாகாவின் தேர்தலை வடிவமைக்கும் கடுமையான மறுபோட்டி

பெரும்பாலான முனிசிபல் தேர்தல்களில் தற்போது பதவியிலிருப்பவர் புதிய வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிடுவதைக் காணலாம், ஆனால் தற்போதைய மேயருக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பதவியிலிருந்து விலகியவருக்கும் இடையிலான ஒரு போட்டியை நீங்கள் எவ்வளவு அடிக்கடி பார்க்கிறீர்கள்?

அதுதான் மிஸ்ஸிசாகாவில் நடக்கிறது, அங்கு தற்போதைய மேயர் கரோலின் பாரிஷ் முன்னாள் மேயர் போனி குரோம்பியை எதிர்கொள்கிறார். அதிக வாக்குகளைப் பெற்ற கவுன்சிலர்களான ஆல்வின் டெட்ஜோ மற்றும் தீபிகா தமர்லா ஆகியோரும், மேலும் 10 வேட்பாளர்களுடன் சேர்ந்து நகரத்தின் உயர்பதவிக்காகப் போட்டியிடுகின்றனர். பல வேட்பாளர்களும், முக்கிய வேட்பாளர்களுக்கு இடையே பிரபலமான போட்டியும் நிலவும் நிலையில், இந்தத் தேர்தல் களம் உண்மையிலேயே மக்களை வாக்களிக்கச் செய்யுமா என்பதே இந்தத் தேர்தலின் முக்கியக் கேள்வியாக உள்ளது.



“பொதுவாக, போட்டித்தன்மை வாய்ந்த தேர்தல்களில் அதிக வாக்குப்பதிவு இருக்கும்” என்று டொராண்டோ மிஸ்ஸிசாகா பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் இணைப் பேராசிரியரான ராண்டி பெஸ்கோ கூறினார். ”ஏனெனில் பல வேட்பாளர்கள் தங்கள் வாக்காளர்களை வெளியே கொண்டுவரக் கடுமையாக முயற்சிக்கிறார்கள். ஆனால் வாக்காளர்களின் கண்ணோட்டத்தில் பார்த்தால், போட்டித்தன்மை இருந்தால், உங்கள் வாக்கிற்கு மதிப்பு உள்ளது என்று அர்த்தம்.”

“ஊடகங்களில் அல்லது விளம்பரப் பலகைகளில் அதற்கான பல ஆதாரங்களை அவர்கள் பார்த்தால், வழக்கமாக வாக்குப்பதிவு சற்றே அதிகமாக இருக்கும் என்று அர்த்தம்.”

P- 20

## தியாகதீபம் திலீபனின் சிலை யாழ். நீதிமன்றக் கட்டுக்காவலில் பாரப்படுத்தப்பட்டது

நல்லூரில் இருந்து அகற்றப்பட்ட தியாகதீபம் திலீபனின் சிலை நேற்று (05) பொலிஸாரால் யாழ். நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டது. நல்லூரில் நினைவேந்தலுக்காக வைக்கப்பட்ட திலிபனின் சிலை கடந்த 27 ஆம் திகதி பொலிஸாரால் வலுக்கட்டாயமாக அகற்றப்பட்டு, பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டது.



குறித்த விடயம் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்த யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார், சிலையை நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கான அனுமதி கோரப்பட்ட போதும் அதற்கான அனுமதியை நீதிமன்றம் வழங்க மறுத்திருந்தது.

P- 20

## தியாக தீபம் திலீபனின் சிலை அகற்றம் Ontario மாகாணசபை உறுப்பினர் லோகன் கணபதி கண்டனம்



யாழ்ப்பாணத்தில் தியாகி திலீபனின் சிலை அகற்றப்பட்டமை தொடர்பில் கடும் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ள ஒன்றாரியோ மாகாண சட்டமன்ற உறுப்பினர் லோகன் கணபதி, இலங்கை மற்றும் இந்திய அரசுகள் திலீபனின் தியாகத்தைப் புரிந்து கொள்ளாமல் புறக்கணிப்பது கவலைக்கும், கண்டனத்துக்கும் உரியதாகும் எனத் தெரிவித்துள்ளார்.

P- 22

## பிளேக் நோய் அச்சத்தில் உலக நாடுகள்!

ரஷ்யாவின் சைபீரிய பிராந்தியத்தில் பிளேக் நோய் தொடர்பான பெண் ஆராய்ச்சியாளர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

P- 22

## நாமல் ராஜபக்ஷவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!



சர்ச்சைக்குரிய “கிரிஷ்“ நிதி முறைகேடு தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் கிரிஷ் குழுமத்தின் முன்னாள் நிர்வாகப் பணிப்பாளரும் வர்த்தக பிரமுகருமான ஜானகி சிறிவர்தன ஆகியோரை எதிர்வரும் அக்டோபர் 16 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றம் இன்று (06) செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு தலைமை நீதிவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கப்பட்டது.

P- 22

## இலங்கையில் மார்பகப் புற்றுநோயால் தினமும் மூவர் உயிரிழப்பு!

இலங்கையில் மார்பகப் புற்றுநோய் காரணமாக நாளொன்றுக்கு மூன்று பேர் உயிரிழப்பதாக தேசிய புற்றுநோய் தடுப்புத் திட்டம் தெரிவித்துள்ளது.

P- 22

## சுரேஷ் சலே மீண்டும் CID பொறுப்பில்!

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளரும் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரலுமான சுரேஷ் சலே, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைகளை நிறைவு செய்து வெளியேற முடியும் என 10 வைத்தியர்கள் அடங்கிய குழாம் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. இதனடிப்படையில், சுரேஷ் சலே இன்று மாலை மீண்டும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பில் எடுக்கப்படுவார்.

P- 22

# அனோஜன் கை, கால்களில் கனமான இரும்புச் சங்கிலி?! மரண தண்டனைச் சிறைக்கு மாற்றம்!



சவுதி அரேபிய நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள அனோஜன் தற்போது மரண தண்டனை விதிக்கப்படும் சிறைச் சாலைக்கு மாற்றப்பட்டுப் பலத்த காவலுக்கு மத்தியில் தங்கவைக் கப்பட்டுள்ளார்.

இன்னும் மூன்று வாரங்களுக்குள் உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அனோஜனிடம் சவூதி அரேபிய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பொதுவாக கொலை, கொள்ளை, கற்பழிப்பு, போதைவஸ்து கடத்தல் மற்றும் விற்பனை போன்ற குற்றங்களில் ஈடுபட்ட கைதிகளின் கைகளையும் கால்களையும் கனமான இரும்புச் சங்கிலியால் பிணைத்தே சவுதி சிறையில், இருட்டறைகளில் வைத்திருப்பார்கள். அவர்கள் வெளியுலகத்தோடு தொடர்பில் இருப்பதும் மறுக்கப்படும்.

இந்த வகையில் அனோஜனின் தற்போதைய நிலைமை மிகவும் கடினமானது என்றே தெரிய வருகின்றது.

இதற்கேறப, அனோஜனின் தம்பியாகிய ஹம்சிதன் என்பவரும், “இரண்டு நாட்களாக அண்ணன் தொலைபேசி எடுக்கவில்லை. முந்தைய நாள் இரவு அவரை அழைத்துச் சென்றுள்ளார்கள். அவர் நேற்று முன்தினம்தான் அழைத்தார். மரண தண்டனை கொடுக்கப்படும் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றுள்ளார்களாம். இந்தச் சிறைச்சாலையில் தொலைபேசி வசதிகள் இல்லையாம். அதனால், தொலைபேசியூடாகக் கதைக்க முடியாது என்றும், எல்லோருக்கும் இந்த விஷயத்தை கூறுமாறும் சொன்னார். அரசு செய்ய வேண்டிய முயற்சிகளைச் செய்யுமாறு சொல்லிவிட்டு தொலைபேசியை வைத்து விட்டார்” என ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

ஆக, நகரும் ஒவ்வொரு நிமிடமும் அனோஜனை மரண தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்கு முக்கிய பங்கு வகிப்பவை என்பதை இந்த விடயத்தைக் கையாள்வோர் சிந்தித்துச் செயற்பட வேண்டுமென்று பலரும் கருத்துத் தெரிவிக்கின்றார்கள்.

# சிவராசா அனோஜனை விடுவிக்க அரச தலையீடு கோரி ஜனாதிபதியிடம் மகஜர்



சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிவராசா அனோஜனை விடுவிப்பதற்குத் தேவையான அரச தலையீட்டை மேற்கொள்ளுமாறு கோரி, ராமாஞ்ஞ மற்றும் அமரபுர பீடங்களின் மகாநாயக்க தேரர்களால் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கு மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

அதற்கமைய, இலங்கை ராமாஞ்ஞ பீடத்தின் மகாநாயக்க அக்கமகா பண்டித அதிவணக்கத்திற்குரிய மகுலேவே விமல நாயக்க தேரர் மற்றும் அமரபுர பீடத்தின்மகாநாயக்க கரகொட உயன்கொட மைத்திரிமூர்த்தி மகா நாயக்க தேரர் ஆகியோரினால் அனுப்பப்பட்டுள்ள குறித்த மகஜர், தென்னிலங்கை பிரதான சங்கநாயக்க கலாநிதி வணக்கத்திற்குரிய ஓமல்பே சோபித தேரரினால் கடந்த 30 ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே விடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இதுதவிர, இந்து மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி இந்து குருமார் சங்கத்தின் தலைவரும், அகில இலங்கை இந்து கலாசார சபையின் தலைவருமான கலாநிதி சிவாஸ்ரீ கே.வி.கே. வைதீஸ்வர குருக்களினாலும் அண்மையில் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

# பிரித்தானியாவில் பொதுவெளியில் மோசமாக செயற்பட்ட இலங்கையர் சிறையில் அடைப்பு

பிரித்தானியாவில் தொடருந்தில் பயணித்துக் கொண்டிருந்த பெண்ணிடம் அநாகரியமான முறையில் நடந்து கொண்ட இலங்கையருக்கு எட்டு மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஆல்ட்ரிஞ்சாம் பகுதியைச் சேர்ந்த 39 வயதான நிஷான் பெர்னாண்டோ என்ற இலங்கையருக்கு, மன்செஸ்டர் கிரவுன் நீதிமன்றம் 8 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்துள்ளது. நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது தன் மீதான குற்றச்சாட்டுகளை இலங்கையர் ஒப்புக்கொண்ட நிலையில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் பத்து வருடங்களுக்கு பொது போக்குவரத்தில் பெண்களுக்கு அருகில் அமர்ந்திருந்த பயணம் செய்யவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதி ஸ்டோக்கில் இருந்து மன்செஸ்டர் நோக்கிச் சென்று கொண்டிருந்த தொடருந்தில் இந்த சம்பவம் பதிவாகி உள்ளது.

கையடக்க தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்த பெண்ணிடம் அத்துமீறி செயற்பட்டதுடன், மிகவும் அருவருக்கத்தக்க வகையில் செயற்பட்டதாகவும் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

BEHIND ME MEDIA

# நல்லூரில் திலீபன் சிலை விவகாரம் : 8 பேரிடம் வாக்குமூலம் பதிவு



நல்லூர் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அவரது உருவச்சிலையை வைத்தமை தொடர்பில் சுமார் எட்டு பேரிடம் யாழ்ப்பாண குற்ற தடுப்பு பிரிவினர் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் புதிதாக சிலை ஒன்று வைக்கப்பட்டது.

குறித்த சிலையானது கடந்த 27ஆம் திகதி யாழ்ப்பாண பொலிஸாரால் எடுத்து செல்லப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் ஏற்கனவே யாழ்ப்பாண மாநகர முதல்வர் மற்றும் ஆணையாளரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்ட நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஆறு பேரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டது.

குறித்த வாக்குமூலங்களை யாழ்ப்பாண குற்ற தடுப்பு பிரிவினர் பெற்ற நிலையில் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஷிரான் பாசிக் உள்ளிட்டோருக்கு எதிரான பூர்வாங்க விசாரணை

கொக்கேயின் போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள முக்கிய போதைப்பொருள் கடத்தல்காரரான ஷிரான் பாசிக் உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கின் பூர்வாங்க விசாரணைப் பணிகளை எதிர்வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைத்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நயோமி விக்ரமசேகர முன்னிலையில் இன்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பொலிஸ் மத்திய குற்ற விசாரணைப் பணியகத்தின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள முதன்மைப் பிரதிவாதி ஷிரான் பாசிக், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கு விசாரணையின் போது, பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட வேண்டிய ஆவணங்கள் அடங்கியக் கோப்புகளை அரசத் தரப்பு சட்டத்தரணி நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளிடம் ஒப்படைத்தார்.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி டிலான் ரத்நாயக்க, சட்டத்தரணிகளான சமிந்த அத்துகோரல மற்றும் வசந்த பிட்டிகல ஆகியோர், குறித்த ஆவணங்களை ஆராய்ந்து அதில் ஏதேனும் விடுபடல்கள் அல்லது குறைபாடுகள் இருப்பின் அதனை அடுத்த வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தின் கவனத்திற்குப் கொண்டுவருவதாகத் தெரிவித்தனர்.

தொடர்ந்து சான்றுப் பொருட்கள் தொடர்பில் மன்றில் தெளிவுபடுத்திய அரசத் தரப்பு சட்டத்தரணி, இந்த வழக்கில் சான்றுகளாகப் பறிமுதல் செய்யப்பட்டுள்ள போதைப்பொருள் தொகுதி தற்போது அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பொறுப்பில் இருப்பதாகத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த நீதிபதி, குறித்த சான்றுப் பொருட்களை நீதிமன்றத்திற்கு எடுத்துவர நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தபோதிலும், தற்போது மேல் நீதிமன்றத்தின் சான்றுப் பொருட்கள் அறை சேதமடைந்து இடிந்து விழுந்துள்ளதால், சான்றுப் பொருட்களை மன்றுக்கு அழைப்பது தொடர்பில் தற்போது எவ்வித கட்டளையும் பிறப்பிக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் பரிசீலித்த நீதிபதி, வழக்கின் மேலதிக பூர்வாங்க விசாரணைப் பணிகளை எதிர்வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.




# அரசை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்டமூலம் அதிகாரங்களை இராணுவத்திற்கு வழங்குகின்றது!

அரசாங்கம் வர்த்தமானியில் வெளியிட்டுள்ள அரசை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்டமூலம் பொலிஸ் மற்றும் சட்ட அமுலாக்கல் அதிகாரங்களை இராணுவத்திற்கு வழங்கும் நடைமுறையை தொடர்கின்றது என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் செப்டம்பர் மாதம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அரசை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாப்பதற்கான சட்டமூலம் குறித்து தனது ஆழ்ந்த கரிசனையை வெளியிடுகின்றது.

2026ம் ஆண்டின் அரசை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்டமூலம் முன்னைய சிக்கல் நிறைந்த பயங்கரவாத தடைச்சட்டத்தின் மீதே கட்டியெழுப்பபடுகின்றது.

இதன் காரணமாக அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதிக்கு அமைய உத்தேச அரசை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்டமூலத்தை வாபஸ்பெறவேண்டும் பயங்கரவா தடைச்சட்டத்தை முற்றாக நீக்கவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

2026 அரசை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்டமூலத்தில் பயங்கரவாதம் குறித்த வரைவிலக்கணம் தொடர்ந்தும் பரந்துபட்டதாக காணப்படுகின்றது. இதன் காரணமாக இத்தகைய குற்றங்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் அல்லது நிரூபிக்கப்பட்ட நபர் எவரும் வழமையான சட்டங்களை விட கடும் சட்டங்களை எதிர்நோக்கவேண்டியிருக்கும்.




சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரங்களை இராணுவத்திற்கு வழங்கும் நடைமுறை இந்த சட்டமூலத்தின் மூலம் தொடர்கின்றது. இந்த சட்டமூலம் சந்தேகநபர்களை வழக்கு விசாரணைக்கு முன்னர் தடுப்புக்காவலில் வைப்பதற்கு அனுமதியளிக்கின்றது.மேலும் இந்த சட்டமூலம் கருத்து சுதந்திரம்,ஒன்று கூடல் சுதந்திரத்தின் மீது கடும் கட்டுப்பாடுகளை விதிக்கின்றது.

அரசாங்கம் முன்மொழிந்துள்ள இந்த சட்டமூலம் பயங்கரவாத தடைச்சட்டத்தில் காணப்படும் ஆழமான அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வை காணவில்லை, மேலும் ஜனாதிபதியும் தேசிய மக்கள் சக்தியும் பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதாக வழங்கிய வாக்குறுதிகளின் அணுகுமுறைக்கு முற்றிலும் முரணானது என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

# Majestic Asian உணவுத் திருவிழா!

BEHIND ME MEDIA

**Scarborough-வில்**
**நடைபெறவுள்ள**
**Majestic Asian Food Festival-இல்**
**மறக்க முடியாத உணவுத் திருவிழாவில்**
**கலந்து மகிழ்ந்து களிப்பாகக் கொண்டாடத் தயாராகுங்கள்!**

**Hosted by:**
## Behind Me Media




**SAVE THE DATES :**

October 10th | 11AM – 11PM

October 11th | 11AM – 11PM

October 12th | 11AM – 8PM

LOCATION : Majestic City, Scarborough

ஒரே கூரையின் கீழ் 60-க்கும் மேற்பட்ட உணவு விற்பனையாளர்கள், நேரடி கலாசார நிகழ்ச்சிகள் மற்றும் அனைத்து வயதினரையும் மகிழ்விக்கும் பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

ஆண்டின் மிகப்பெரிய கலாசார நிகழ்வுகளில் ஒன்றில் உங்கள் திறமையையும் சிறப்பு உணவுகளையும் ஆயிரக்கணக்கான உணவு ஆர்வலர்களுக்கு அறிமுகப் படுத்தும் அரிய வாய்ப்பை தவறவிடாதீர்கள்.

Scarborough, Majestic City-ல் நடைபெறவுள்ள Majestic Asian Food Festival - க்கான விற்பனையாளர் விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப் படுகின்றன!




நிகழ்வின் முதல்நாள் 10ஆம் திகதி காலை 11 தொடக்கம் கொண்டாட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்பதோடு உத்தியோக பூர்வ அங்குரார்ப்பண அம்சங்கள் கனேடியன் நேரம் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த வேளையில் கனேடிய அரசியல் மற்றும் ஏனைய பல்துறைப் பிரமுகர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

கனேடிய மற்றும் தமிழ்த் தேசிய கீதங்கள் உடன் நிகழ்வு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்படும். பல் கலாசார இசை மற்றும் நடனக் கலைஞர்களின் விசேட நிகழ்வுகள் உணவுக் கொண்டாட்டப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு மேடை வரை செல்லவுள்ளது. உலகின் பல பாகங்களதும் கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் ஆடல் பாடல் களியாட்ட நிகழ்வுகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




Long Weekend இனைச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்வதற்குப் பொருத்தமான ஒரு இடமாக Majestic Asian உணவுத் திருவிழா அமையும் என்பதில் சந்தேகமில்லை!

























BEHIND ME MEDIA

# மத்தல விமான நிலையத்தின் ஊடாக இலங்கைக்குள் சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட பெருமளவு தங்கம்




முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது பதவிக்காலத்தில் – 2013ம் ஆண்டு மத்தல விமானநிலையத்தினை பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட பாரிய கடத்தல் நடவடிக்கைகள் குறித்த விபரங்கள் கசியத்தொடங்கியுள்ளன.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது.

2013ம் ஆண்டு மத்தல விமானநிலையத்தின் ஊடாக மிகப்பெருமளவு தங்கத்தையும் தங்க நகைகளையும் இலங்கைக்குள் கொண்டுவந்தனர்.

மத்தல விமானநிலையத்தில் 2013 ஜூன் 12 ம் திகதி தரையிறங்கிய யுசி827 விமானத்தின் ஊடாகவே தங்கம் மற்றும் தங்க நகைகளை நாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

சமீபத்தில் தற்கொலை செய்து கொண்ட அம்பாந்தோட்டையின் முன்னாள் மேயர் எராஜ் பெர்ணாண்டோவே இந்த தங்கம் மற்றும் நகைகளை இறக்குமதி செய்தார் என்பது தெரியவந்துள்ளது.

அவ்வேளை நிதியமைச்சராகவும் பணியாற்றிய மகிந்தராஜபக்ச உத்தரவு ரவு பிறப்பித்ததை தொடர்ந்து அதிகாரிகள் தங்கம் மற்றும் தங்க நகைகளை நாட்டிற்குள் கொண்டுவர அனுமதித்தனர்.

நடைமுறைகளை பின்பற்றாமல் வழக்கமான சுங்க பரிசோதனைகளை மேற்கொள்ளாமல் தங்கம் மற்றும் தங்க நகைகளை இலங்கைக்கு கொண்டுவருவதற்கு அனுமதிக்குமாறு சுங்க அமலாக்க பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஜகத்வீரவீரவிற்கு கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

# கனடா ஏன் அமெரிக்கப் படையெடுப்பிற்குத் தயாராகிறது?

BEHIND ME MEDIA




ஒரு காலத்தில் நினைத்துக்கூட பார்க்க முடியாத அமெரிக்கப் படையெடுப்பு எனும் சூழ்நிலைக்குத் தான் தயாராகியிருப்பதாகப் பிரதமர் மார்க் கார்னி கடந்த வாரம் ஒப்புக்கொண்டார்.

ஆபத்து குறைவு மற்றும் இதன் சாத்தியக்கூறு மிகவும் குறைவு என்பதைக் குறிப்பிட்ட அவர், டொனால்ட் டிரம்பின் அதிபர் பதவியின் கீழ் அமெரிக்க-கனடா உறவு மறுவரையறை செய்யப்படுவதால், அனைத்து சாத்தியக்கூறுகளையும் கருத்தில் கொள்ள வேண்டிய பொறுப்பு தமக்கு இருப்பதாக நியூயார்க் டைம்ஸிடம் கூறினார்.

“இது வெறும் இடர் மேலாண்மை மட்டுமே” என்று கார்னி கூறினார்.

டிரம்பின் உலகளாவிய தீர்வைகள் மற்றும் கனடாவை 51-வது மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற அவரது அடிக்கடி கூறப்படும் விருப்பம், கனடாவை அமெரிக்கர்களின் தாக்குதல் குறித்து போர்ப்பயிற்சி செய்யத் தூண்டியுள்ளது.

அமெரிக்கா ஒருபோதும் கனடாவிற்கு எதிராகப் படைகளைப் பயன்படுத்துவதற்கு “வாய்ப்பில்லை” என்று அமெரிக்க அதிபர் 2025 இல் கூறினார். அதற்கு பதிலாக, தனது அரசியல் இலக்குகளை அடைய அவர் தொடர்ந்து பொருளாதார அழுத்தங்களை பிரயோகிப்பார் என்று கூறினார்.

“கனடாவின் சிறந்த மக்களைப் பாதுகாக்க அதிபர் டிரம்ப் எவரையும் விட அதிகமாகச் செய்துள்ளார்,” என்று வெள்ளை மாளிகை இந்த வாரம் பிபிசிக்கு அளித்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பிபிசியிடம் பேசிய ராணுவ நிபுணர்களும் படையெடுப்பு சாத்தியமில்லாத ஒன்று என நினைக்கின்றனர், மேலும் பாதுகாப்பு விஷயங்களில் இரு நாடுகளும் இணைந்து செயல்படும் பல வழிகளை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆனால் இந்த விவகாரம் கனடியர்களின் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது என்பது தெளிவாகிறது.

வெனிசுலாவில் நிக்கோலஸ் மதுரோவை அமெரிக்கா சிறைபிடித்த பிறகு, ஜனவரி மாதத்தில் நடத்தப்பட்ட லெஜர் கருத்துக் கணிப்பு, 30% க்கும் மேற்பட்ட கனடியர்கள் அமெரிக்கப் படையெடுப்பு நிகழக்கூடும் என நம்புவதாக சுட்டிக்காட்டியது.

கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான ஒரு போர் சிக்கலானதாகவும் கற்பனை செய்து பார்க்க கடினமானதாகவும் இருக்கும் என்று ராயல் கனடியன் விமானப்படையில் 34 ஆண்டுகள் பல்வேறு மூத்த பதவிகளை வகித்த முன்னாள் ராணுவ அதிகாரி லெப்டினன்ட்-ஜெனரல் கிறிஸ்டோபர் கோட்ஸ் கூறினார்.

“எனது ஒட்டுமொத்தப் பணிக்காலத்திலும் நான் ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளேன், மேலும் அமெரிக்கப் பிரதேசத்திலிருந்து ஒரு ராணுவத் தாக்குதல் வரும் என்ற சாத்தியத்தை நாங்கள் ஒருபோதும் கருத்தில் கொண்டதில்லை” என்று அவர் பிபிசியிடம் கூறினார்.

நேட்டோ பணிகளில் பணியாற்றியுள்ள கோட்ஸ், ராணுவப் பாதுகாப்பின் பல அம்சங்களில் கனடாவும் அமெரிக்காவும் ஒத்துழைக்கின்றன என்பதைக் குறிப்பிட்டார்.

இரண்டு நாடுகளும் வடக்கு அட்லாண்டிக் பாதுகாப்புக் கூட்டணியின் உறுப்பினர்களாக உள்ளன, இது ஒரு உறுப்பு நாடு தாக்கப்படும்போது மற்ற உறுப்பு நாடுகள் அதைப் பாதுகாக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறது.

இரண்டு நாடுகளும் வட அமெரிக்க விண்வெளிப் பாதுகாப்பு அமைப்பின் (NORAD) கீழ் கூட்டு ஆர்க்டிக் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்கின்றன, மேலும் அடிக்கடி உளவுத்துறை தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றன.

இதன் காரணமாக, கனடா மீதான அமெரிக்காவின் தாக்குதல் ஆயுதமேந்திய தாக்குதலுடன் தொடங்காமல், இணையவழிப் போர் போன்ற மிகவும் மறைமுகமான வழிகளில்தான் தொடங்கும் என அவர் நம்புவதாக கோட்ஸ் கூறினார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, கனடாவும் அமெரிக்காவும் 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயல்பான நட்பு நாடுகளாக மாறின, மேலும் பொருளாதாரம், ராணுவம் மற்றும் கலாச்சார ரீதியாக அதிக அளவில் ஒன்றிணைந்துள்ளன.

ஆனால் அது எப்போதும் இப்படி இருந்ததில்லை. 18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் அமெரிக்க விரிவாக்கத்தை எதிர்ப்பதே கனடாவின் அடையாளத்தின் மையக் கொள்கை என்று கனடியப் போர் அருங்காட்சியக ஆராய்ச்சியாளரான டிம் ஃபோரன் கூறினார்.

“கனடா என்ற அரசியல் திட்டத்திற்கு அமெரிக்கா மீதான அச்சமே அடிப்படையாகும்” என்று அவர் கூறினார்.

நவீன கால அமெரிக்காவின் குடியேற்றங்கள் கிளர்ச்சி செய்தபோது பிரிட்டிஷ் அரசிற்குக் விசுவாசமாக இருந்த பிரிட்டிஷ் வட அமெரிக்கக் குடியேற்றங்களின் தொகுப்பாகவே கனடா உருவாக்கப்பட்டது.

கனடா உருவாக்கப்படுவதற்கு முன்பு, அமெரிக்கா பிரிட்டிஷ் வட அமெரிக்கக் குடியேற்றங்கள் மீது படையெடுக்க முயன்றது, 1775 இல் மாண்ட்ரீலைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து கியூபெக் நகரத்தையும் கிட்டத்தட்ட கைப்பற்றியது.

1812 ஆம் ஆண்டுப் போரில், அமெரிக்கர்கள் அப்போது அப்பர் கனடா, லோயர் கனடா மற்றும் கடல்சார் குடியேற்றங்கள் என அழைக்கப்பட்ட பகுதிகளில் மீண்டும் மீண்டும் படையெடுத்தனர், இது ஒரு முட்டுக்கட்டையில் முடிந்தது. அந்தப் போரின்போது, பிரிட்டிஷ் துருப்புக்கள் பதிலடியாக வெள்ளை மாளிகையை எரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

“ கனடிய வீரர்களும் கடுமையாகப் போராட முடியும் ” என்று அவர் கூறினார்.

அந்த நேரத்தில், பின்னர் கனடாவாக மாறிய குடியேற்றங்கள் தங்கள் பாதுகாப்பிற்காக கிரேட் பிரிட்டன் மற்றும் அதன் ராயல் கடற்படையையும், முக்கிய போர்களில் தளபதிகளாகப் பணியாற்றிய பழங்குடியின மக்களையும் சார்ந்திருந்தன என்று ஃபோரன் கூறினார்.

முதல் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்காவின் வளர்ந்து வரும் சக்தி மற்றும் செல்வாக்கிற்கு பதிலளிக்கும் விதமாக கனடா மீண்டும் அதனுடன் போரைப் பற்றி சிந்தித்தது.

கனடிய ராணுவத் தளபதிகள் எல்லை நகரங்களுக்கு மேற்கொண்ட ரகசியப் பயணங்களின் அடிப்படையில் ஒரு திட்டத்தை அது உருவாக்கியது. இவர்கள் சுற்றுலாப் பயணிகளைப் போல் சென்று உளவுத்துறைக்காகப் பாலங்கள் மற்றும் நெடுஞ்சாலைகளின் புகைப்படங்களை எடுத்தனர்.

அந்த நேரத்தில் போர் நிகழ வாய்ப்பில்லாத ஒரு காட்சியாக இருந்தது என்று கனடியப் போர் அருங்காட்சியகத்தில் 20 ஆம் நூற்றாண்டு கனடா குறித்து நிபுணத்துவம் பெற்ற ஆராய்ச்சியாளரான ஆண்ட்ரூ பர்ட்ஸ் கூறினார், ஆனால் கனடியர்கள் இன்னும் தயாராக இருக்க விரும்பினர்.

“இது ராணுவங்கள் செய்யும் காரியங்களின் ஒரு பகுதி” என்று அவர் கூறினார். “அவர்கள் பல்வேறு வகையான சூழ்நிலைகளை கற்பனை செய்து பார்க்கிறார்கள்.”

இந்த ஆண்டின் தொடக்கத்தில் குளோப் அண்ட் மெயில் நாளிதழில் வெளியான செய்தியின்படி, கனடிய ராணுவம் பயன்படுத்திய மாதிரியின் அடிப்படையில், ஒரு அமெரிக்கத் தாக்குதல் ஒரு வாரத்திற்குள் கனடாவின் மூலோபாய நிலைகளை முறியடித்துவிடும்.

அதன் ராணுவம் விரைவில் எண்ணிக்கையில் குறைந்துவிடும், இதனால் தங்கள் எதிரிகளை அடக்க முயற்சிப்பதற்காக கொரில்லா போர் முறையை நாட கனடியப் படைகள் கட்டாயப்படுத்தப்படும்.

கனடாவிற்கு ஆதரவு மற்றும் பாதுகாப்பை வழங்க பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் போன்ற நட்பு நாடுகள் அழைக்கப்படும் என்று மூத்த அரசாங்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி நாளிதழ் ஜனவரி மாதம் செய்தி வெளியிட்டது.

இந்த தத்துவார்த்த மாதிரி, ஒரு நூற்றாண்டில் முதல் முறையாக அமெரிக்கத் தாக்குதலுக்கு கனடா திட்டமிட்டுள்ளது என்று நம்பப்படுகிறது.

இந்த மாதிரி வடிவமைப்பு, ராணுவப் போர்த் திட்டமிடலின் ஒரு சிறிய கட்டம் என கோட்ஸ் கூறினார்.

நேட்டோ நட்பு நாடுகளைப் போலல்லாமல், எந்தவொரு தரைப் படையெடுப்பு ஏற்பட்டாலும் அதற்கான பதிலளிப்புத் திட்டத்தைக் கொண்டிருப்பதில் கனடா பின்தங்கியுள்ளது என்றும், கணிக்க முடியாத புவிசார் அரசியல் நிலவும் இந்தக் காலத்தில் அது இப்போது அதைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அதன் ஒரு பகுதி, ராணுவத்தின் அளவை பெருமளவில் அதிகரிக்க வேண்டும் என கனடாவின் பாதுகாப்புத் தலைவர் சமீபத்தில் விடுத்த அழைப்பின் மூலம் தெளிவாகத் தெரிந்தது என்று அவர் கூறினார். இதில் 300,000 லேசான பயிற்சி பெற்ற குடிமக்கள்-சிப்பாய்களைச் சேர்ப்பதும் அடங்கும்.

அமெரிக்காவின் பார்வையில் கனடா மீதான படையெடுப்பு எளிதானதாக இருக்காது.

அமெரிக்கா தனது மிகப்பெரிய ராணுவத்தைக் கொண்டிருந்தாலும், கனடாவுடனான போருக்கு ஒப்புதல் பெறுவது கடினமாக இருக்கும் என்று ஷ்மிட் கூறினார்.

“கனடா மீது படையெடுக்க உத்தரவிடப்பட்டால், அதிக எண்ணிக்கையிலான அமெரிக்க அதிகாரிகள் ராஜினாமா செய்வார்கள் என்று நான் நினைக்கிறேன்” என்று அவர் கூறினார்.

“அவர்கள் அதை ஒரு சட்டவிரோதமான மற்றும் ஒழுக்கக்கேடான உத்தரவாகப் பார்ப்பார்கள்.”

கனடிய வீரர்களும் அமெரிக்க வீரர்களும் வழக்கமாக ஒன்றாகப் பயிற்சி பெறுகிறார்கள், மேலும் பரஸ்பர மரியாதையைப் பகிர்ந்து கொள்கிறார்கள் என்று ஷ்மிட் கூறினார்.

அமெரிக்காவிற்கு அதிக ராணுவத் திறன் இருப்பதை அவர் ஒப்புக்கொண்டாலும், “அதே அளவுக்கு இணையாக” கனடிய வீரர்களும் கடுமையாகப் போராட முடியும் என்று அவர் கூறினார்.

BEHIND ME MEDIA
2026 October, 06
219, Kandy Road Jaffna.
Tel : +94762390159,
+14376883493
Email:
info@behindmemedia.com,
website:
www.behindmenews.org

# பீடத்தில் படிந்த நிழல்கள்: நல்லூரில் நிலவும் சீற்றம்

நல்லூர் கடும் சீற்றத்துடன் காணப்படுகின்றது. 1987 செப்டம்பரில் வரலாற்று சிறப்புமிக்க பன்னிரண்டு நாட்கள் இந்த மண் ஒரு தியாகியின் கடைசி மூச்சின் பாரத்தை தாங்கியது - ஆயுதம் ஏந்துவதற்கு பதிலாக வன்முறையற்ற முறையில் உண்ணா விரதத்தை தேர்ந்தெடுத்து தனது மக்களுக்கான சுயமரியாதையையும் சுயநிர்ணய உரிமையையும் மட்டுமே கேட்ட இளைஞன்.

ஒரு வெண்கல சிலையை அகற்றுவதன் மூலம் ஒரு பிராந்தியத்தின் கூட்டு நினைவை அழித்துவிடலாம் என்பது போல கைகள் வேகமாகச் செயல்பட்டு அதை எடுத்துச் சென்றன. ஆனால் நினைவுகள் வெண்கலத்தில் வார்ப்படவோ கல்லில் செதுக்கப்படவோ இல்லை அவை இந்த வீதிகளில் நடமாடும் ஒவ்வொரு தாயின் ஒவ்வொரு பெரியவரின் ஒவ்வொரு குழந்தையின் அமைதியான மன உறுதியிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

ஒரு சிலையை அகற்றுவது என்பது அது கொண்டிருக்கும் அளப்பரிய சக்தியை ஒப்புக்கொள்வதாகும். அது நினைவு கூருதலைப் பற்றிய ஆழமான பயத்தையும் ஒரு அமைதியான உருவம் வார்த்தைகளை விட உரக்கப் பேசும் என்ற கவலையையும் வெளிப்படுத்துகிறது.

அதிகாலை வாகனங்கள் சென்று மறைந்து வெறும் காற்றை மட்டுமே விட்டுச் சென்றபோது அவை வரலாற்றை அழித்துவிடவில்லை. மாறாக அந்த வெறுமையான பீடத்தை இன்னும் உரக்கப் பேசும் ஒரு நினைவுச்சின்னமாக மாற்றின.

ஒரு சிலை கைப்பற்றப்பட்டு கனமான கதவுகளுக்குப் பின்னால் பூட்டப்படலாம். ஆனால் ஒரு தியாகத்தின் பாரம்பரியத்தை உங்களால் பறிமுதல் செய்ய முடியாது. துக்கம் அனுசரிக்கும் நினைவுகூரும் அர்ப்பணிப்பு மற்றும் தளராத மன உறுதியை கௌரவிக்கும் ஒரு சமூகத்தின் உரிமையை உங்களால் முடக்க முடியாது.

இன்று அந்த பீடம் காலியாக இருக்கலாம் ஆனால் நினைவில் வைத்திருப்பவர்களின் இதயங்களில் அந்த நினைவுச்சின்னம் அசையாததாகவும் நித்தியமானதாகவும் என்றும் நிலைத்திருக்கும்.

# திலீபனின் சிலை அகற்றம் :- நினைவேந்தலை தடுப்பது உயிரிகளின் மாண்புக்கு எதிரானது - சர்வமத பேரவை

ஆன்மிக அடிப்படையில் நினைவேந்தலை தடுப்பது, குழப்புவது, எடுப்பார் கைப்பிள்ளையாக்க முனைவது உயிரிகளின் மாண்புக்கு எதிரானதாகும் என யாழ். மாவட்ட சர்வமத பேரவை தெரிவித்துள்ளது.

நல்லூரில் உள்ள தியாக தீபத்தின் நினைவாலயத்தில் இருந்து தியாக தீபத்தின் சிலை அகற்றப்பட்டமை தொடர்பில், சர்வமத பேரவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலையே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> பேராசை, சர்வாதிகாரம், இனவாதம், மதவாதம் போன்றவை களையப்பட அகிம்சை ரீதியான முன்னெடுப்புகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற யாழ் மாவட்ட சர்வ மத பேரவை விரும்புகின்றது, உழைக்கின்றது.
> இந்த அடிப்படையில் வன்முறையை கடந்து வாழ்வை உறுதி செய்ய தனது உயிரை காணிக்கையாக்கிய திலீபனை நாம் மதிப்புடன் குறிப்பிடுகிறோம்.

குறித்த அறிக்கையில் மேலும், பேராசை, சர்வாதிகாரம், இனவாதம், மதவாதம் போன்றவை களையப்பட அகிம்சை ரீதியான முன்னெடுப்புகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற யாழ் மாவட்ட சர்வ மத பேரவை விரும்புகின்றது, உழைக்கின்றது. இந்த அடிப்படையில் வன்முறையை கடந்து வாழ்வை உறுதி செய்ய தனது உயிரை காணிக்கையாக்கிய திலீபனை நாம் மதிப்புடன் குறிப்பிடுகிறோம்.




அகிம்சைக்காக ஆகுதியான இவரை அவமதிப்புக்கு உள்ளாக்கும் அனைத்து சக்திகளையும் வலிமையாக கண்டிக்கிறோம்.

வரையறைகளை புரிந்து, கட்டமைப்புகளை அறிந்து, பன்மைத்துவத்தை மதித்து, அனைவரும் அனைத்து உரிமைகளுடனும் அவரவது வரலாற்று அடையாளத்துடனும் வாழ தடுப்பது மாண்பை நிராகரிப்பதாகும். அது ஆரோக்கியமானதல்ல.

அத்துடன் மாண்பு, சமத்துவம் ஒற்றுமை போன்றவற்றை வலியுறுத்தும் மக்கள் அரசியலை இருட்டடிப்பு செய்யும் கட்சி அரசியலை அதன் வரையறைக்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என அனைத்து கட்சிகளுக்கும் ஒரு வேண்டுகோளை விடுக்கிறோம். சமய நோக்கைக் கடந்து, நினைவேந்தல் ஒரு மனித உரிமை என்பது இற்றைப்படுத்தப்பட்ட உண்மை.

நினைவுகூரும் உரிமை என்பது, கலாசார வாழ்வில் பங்கேற்பதற்கான உரிமையை அனைவருக்கும் உத்தரவாதம் அளிக்கும் ‘பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையின் 15ஆவது பிரிவில் வேரூன்றியுள்ளது. ஆன்மிக அடிப்படையில் நினைவேந்தலை தடுப்பது, குழப்புவது, எடுப்பார் கைப்பிள்ளையாக்க முனைவது உயிரிகளின் மாண்புக்கு எதிரானதாகும்.

வாழ்வை உறுதி செய்ய ஒரு விடுதலைப்போராட்டம் அகிம்சை ரீதியாக முன்னெடுக்கப்பட்டது எமது யாழ் மண்ணின் வரலாறு. அந்த வரலாற்றின் ஒரு முக்கிய ஆளுமையான அகிம்சைவாதி திலீபன் அவர்களுக்கு அவமானம் ஏற்படுத்தும் அனைத்து நடவடிக்கைகளையும் அனைத்து தரப்பும் கைவிட்டு, சாதாரண மக்கள் நினைவேந்தல் நடைபெற உரிய ஒத்துழைப்பை அனைவரும் ஆரோக்கியமான முறையில் வழங்க அனைவரிடமும் வேண்டுகிறோம் என்றுள்ளது.

BEHIND ME MEDIA

# “கனடா ஐயா எங்களை மன்னியுங்கள்” என்று சொல்லும் - டிரம்ப்



கனடியப் பொருட்களுக்கான இறக்குமதித் தடைகள் அமலுக்கு வரச் சில மணிநேரங்களுக்கு முன்பாக, வரவிருக்கும் வாரங்களில் கனடாவுடன் வர்த்தக ஒப்பந்தத்தைச் செய்ய முடியும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.

ஓவல் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப், அடுத்த மூன்று அல்லது நான்கு வாரங்களில் கனடா தரப்பு தன்னைத் தொடர்பு கொள்ளும் என்றும், அமெரிக்கா “அனைத்தையும் வெல்லும்” என்றும் தான் நினைப்பதாகக் கூறினார்.

“அவர்கள் உள்ளே வந்து, ‘ஐயா, எங்களை மன்னியுங்கள்’ என்று சொல்வார்கள்,” என்று டிரம்ப் கூறினார். “அவர்கள் அமெரிக்காவை மிக மிக மோசமாக நடத்தியிருக்கிறார்கள். ஒரு ஒப்பந்தம் செய்யப்படும் என்று நான் நினைக்கிறேன், ஆனால் அது நியாயமானதாக இருக்கும்.”

டிரம்பின் தடைகள் - முக்கியமாகச் சில மதுபானங்கள், பால் பொருட்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களைப் பாதிக்கின்றன - செவ்வாய்க் கிழமை கிழக்கு நேரப்படி நள்ளிரவு 12:01 மணிக்குத் தொடங்க உள்ளன.

கடந்த மாதம் இரு நாடுகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் கசப்புடன் முடிந்த பிறகு, வர்த்தகப் போரின் சமீபத்திய தீவிரமடைதல் இதுவாகும்.

கனடா-அமெரிக்க வர்த்தக அமைச்சர் டொமினிக் லெப்லாங்கின் அலுவலகம் திங்களன்று, “நிர்வாகத்தால் முன்னதாக அறிவிக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் அமலுக்கு வருவதைக் கவனத்தில் கொள்கிறோம்” என்று தெரிவித்தது.

“கடந்த 18 மாதங்களாக இருந்தபடியே, இந்த நியாயமற்ற நடவடிக்கைகளிலிருந்து கனடிய தொழிலாளர்கள், விவசாயிகள், குடும்பங்கள் மற்றும் வணிகங்களைப் பாதுகாப்பதும் ஆதரிப்பதும் எங்கள் முதல் முன்னுரிமையாக உள்ளது,” என்று லெப்லாங்கின் செய்தித் தொடர்பாளர் கேப்ரியல் புரூனெட் கூறினார்.

“எங்கள் முக்கிய கவனம் எங்களால் கட்டுப்படுத்தக் கூடியவற்றின் மீதே உள்ளது: உள்நாட்டில் பலத்தைக் கட்டுதல், வெளிநாடுகளில் எங்கள் பங்களிப்புகளைப் பல்வகைப்படுத்துதல் மற்றும் அனைத்து கனடியர்களுக்காகவும் கனடாவை வலுவாக உருவாக்குதல்.”

கனடியப் பொருட்கள் மீதான வர்த்தகக் கட்டுப்பாடுகள் குறுகிய காலத்தில் கனடாவின் பொருளாதார வளர்ச்சியை கணிசமாகப் பாதிக்க வாய்ப்பில்லை என்றாலும், ஒட்டாவாவுக்கும் டிரம்ப் நிர்வாகத்திற்கும் இடையிலான உறவில் ஏற்பட்ட சமீபத்திய முறிவையே இது பிரதிபலிக்கிறது.

கனடாவின் விவசாய வரிகள் பற்றிய தனது தவறான கோரிக்கைகளையும், கனடாவின் குடிவரவு முறை ஆட்களைச் சரிபார்ப்பின்றி உள்ளே அனுமதிக்கிறது என்ற தனது சமீபத்திய குற்றச்சாட்டுகளையும் டிரம்ப் திங்களன்று மீண்டும் வலியுறுத்தினார்.

டிரம்பின் சிரேஷ்ட வர்த்தக ஆலோசகரான பீட்டர் நவாரோ செய்தியாளர்களிடம் பேசுகையில், கனடியர்கள் “மிகக் கடினமான மற்றும் அகங்காரமான வர்த்தகர்கள்” என்று கூறினார்.

கடந்த வாரம் வாஷிங்டனில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கை டிரம்ப் உபசரித்த போதிலும், ஒட்டாவா பீஜிங்குடன் “நெருக்கம் காட்டுகிறது” என்று அவர் குற்றம் சாட்டினார்.

அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி ஜேமிசன் கிரியர் கடந்த வாரம் பேசுகையில், “உண்மை என்னவென்றால், கனடா விஷயத்தில் நாம் இருக்கும் நிலை குறித்து அதிபர் டிரம்ப் வசதியாக உணர்கிறார்” என்று கூறியதுடன், “எங்கள் தரப்பில் எந்த அவசரமும் இல்லை” என்றும் சேர்த்துக் கொண்டார்.

அமெரிக்காவுடனான வர்த்தகப் பேச்சு வார்த்தைகள் ஆகஸ்ட் மாத பிற்பகுதியில் முறிந்தன, மேலும் இரு நாடுகளும் மற்றொன்று ஒப்பந்தத்தில் கடைசி நிமிட மாற்றங்களைச் சேர்த்ததாகக் குற்றம் சாட்டின.

பிற வர்த்தக ஒப்பந்தங்களைப் பேசுவதற்கான கனடாவின் திறனைக் கட்டுப்படுத்த அமெரிக்கப் பேச்சாளர்கள் முயல்வதாகவும், கனடாவின் மொழி மற்றும் கலாச்சாரப் பாதுகாப்புகளைக் கட்டுப்படுத்த முயல்வதாகவும் பிரதமர் மார்க் கார்னி குற்றம் சாட்டினார்.

பேச்சுவார்த்தைகள் முடக்கப்பட்ட சில மணி நேரங்களில், அமெரிக்கா 1930 ஆம் ஆண்டின் வரிச் சட்டத்தின் பிரிவு 338 ஐப் பயன்படுத்திப் பல்வேறு கனடியப் பொருட்கள் மீது 50 சதவீத வரிகளை விதித்தது. ஒட்டாவா சில வாரங்களுக்குப் பிறகு தனது சொந்த வரிகளுடன் பதிலளித்தது.

அதற்குப் பதிலளிக்கும் விதமாக, கொள்முதல் பட்டியல்களிலிருந்து கனடியப் பொருட்களை அகற்றுமாறு சில கூட்டாட்சி முகமைகளுக்கு உத்தரவிடும் ஆணையில் டிரம்ப் கையெழுத்திட்டார், மேலும் இறக்குமதித் தடைகளை விதிக்கும் மற்றொரு ஆணையிலும் கையெழுத்திட்டார். அந்தத் தடை செய்யப்பட்ட ஏற்றுமதிப் பொருட்களின் மதிப்பை பிஎம்ஓ (BMO) சுமார் 1 பில்லியன் அமெரிக்க டாலர் என மதிப்பிட்டுள்ளது.

அதிபர் அண்டாரியோ ஏரியின் (Lake Ontario) பெயரை ‘அமெரிக்கா ஏரி’ (Lake America) என மாற்றுவதற்கான நிர்வாக உத்தரவிலும் கையெழுத்திட்டார்.

வாஷிங்டனை தளமாகக் கொண்ட கேட்டோ இன்ஸ்டிடியூட்டின் வர்த்தகக் கொள்கை ஆய்வாளர் அல்ஃபிரெடோ கரில்லோ ஒப்ரேகன் பேசுகையில், பெருந்தேக்க காலத்துச் சட்டத்தை - வரலாற்றி லேயே முதன்முறையாக - வரிகளை விதிக்கவும் இறக்குமதியைத் தடை செய்யவும் டிரம்ப் நிர்வாகம் பயன்படுத்தியிருப்பது “கனடா - அமெரிக்க உறவுகளின் தொடர்ச்சியான சீரழிவைக் காட்டுகிறது” என்று கூறினார்.

இதன் தாக்கம் நோக்கத்தில் வரம்பிற்குட்பட்டதாக இருக்கலாம் என்றாலும், ஒப்ரேகன் கூறுகையில், “இருதரப்பு பேச்சு வார்த்தைகளில் கனடா விடமிருந்து சலுகைகளைப் பெற, டிரம்ப் நிர்வாகம் தன் வசம் உள்ள வர்த்தகக் கொள்கைக் கருவிகளை அதிகம் பயன்படுத்தத் தயாராக உள்ளது என்பதை வெளிப்படுத்தும் வரையில் இந்த நடவடிக்கை குறியீடான ஒன்றாகும்.”

தனது வடக்கே உள்ள அண்டை நாட்டிடமிருந்து அமெரிக்காவிற்கு எதுவும் தேவையில்லை என்று டிரம்ப் உரிமை கோரினாலும், கனடா அமெரிக்காவின் இரண்டாவது பெரிய வர்த்தகப் பங்காளியாகும் மற்றும் வட அமெரிக்கச் சந்தை மிகவும் ஒருங்கிணைக் கப்பட்டுள்ளது என்று ஒப்ரேகன் கூறினார்.

“இரு தரப்பும் இறுதியில் இந்த மோதலுக்கு ஒரு தீர்வைப் பேசும் என்று நான் நம்புகிறேன், ஆனால் அதே நேரத்தில், ஒரு ஒப்பந்தத்தை எட்டுவது என்பது இரு தரப்பினரும் பகிரங்கமாகச் செய்ய மனமில்லை என்று சுட்டிக்காட்டிய சலுகைகளை வழங்குவதை உள்ளடக்கியதாக இருக்கும்,” என்று ஒப்ரேகன் கூறினார். “எனவே தற்போதைய இதே நிலைமை சிறிது காலம் நீடிக்கக்கூடும்.”

விநியோகச் சங்கிலிகளில் கட்டாய உழைப்புடன் தொடர்புடையது என்று டிரம்ப் நிர்வாகம் உரிமை கோரும் 10 சதவீத வரிகளாலும் கனடா பாதிக்கப்பட்டு வருகிறது. CUSMA என அறியப்படும் கனடா - அமெரிக்கா - மெக்சிகோ வர்த்தக ஒப்பந்தத்திற்கு இணங்கும் பொருட்களுக்கு அந்த வரிகள் பொருந்தாது.

மேலும், அலுமினியம், ஆட்டோமொபைல் மற்றும் அலமாரிகள் போன்ற கனடியத் தொழில்கள் டிரம்பின் தனிப்பட்ட துறைசார் வரிகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகின்றன.

---

# ஒன்டாரியோ மருத்துவ அவசர விமானம் 6 பயணிகளுடன் அமெரிக்கக் கடற்பகுதியில் மாயம்

பெர்முடாவில் இருந்து பாஸ்டன் நோக்கி 6 பேருடன் பயணித்த ஒன்டாரியோ மாநிலத்திற்குச் சொந்தமான மருத்துவ அவசர விமானம், நான்டக்கெட் கடற்பகுதி யில் மாயமாகியுள்ளதாகப் புகாரளிக்கப்பட்டுள்ளது.

பெர்முடாவில் இருந்து பாஸ்டன் நோக்கி 6 பேருடன் சென்ற ஒன்டாரியோ மருத்துவ அவசர ஜெட் விமானம் நான்டக்கெட் கடற்பகுதியில் மாயமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானத்துடனான தொடர்பை இழந்துவிட்டதாக அமெரிக்க ஃபெடரல் விமானப் போக்குவரத்து நிர்வாகம் அளித்த தகவலைத் தொடர்ந்து, சனிக்கிழமை அதிகாலை முதல் அந்த விமானத்தைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்கக் கடலோரக் காவல் படை தெரிவித்துள்ளது.

6 பேருடன் சென்ற ‘கல்ஃப்ஸ்ட்ரீம்’ ரக விமானத்தை @uscg தேடி வருகிறது. சனிக்கிழமை அதிகாலை விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதாக @FAANews தெரிவித்துள்ளது. விமானத்தைத் தேடும் பணியில் #USCG வான் மற்றும் கடல்வழிப் படைகள் களமிறக்கப்பட்டுள்ளன. தகவல்கள் கிடைக்கப் பெறும்போது புதுப்பிப்புகள் இங்கு வழங்கப்படும்...

அந்த ‘கல்ஃப்ஸ்ட்ரீம் ஜி100’ (Gulfstream G100) ரக விமானம், ஹேமில்டன் நகரைச் சேர்ந்த ‘லாட்டிட்யூட் ஏர் ஆம்புலன்ஸ்’ (Latitude Air Ambulance) நிறுவனத்திற்குச் சொந்தமானது என்று அந்நிறுவனத்தின் செயல்பாட்டு மேலாளர் கிளாரன்ஸ் டோகரெட்ஸ் தெரிவித்துள்ளார்.



‘ஃப்ளைட்அவேர்’ (FlightAware) தகவலின்படி, அந்த விமானம் பெர்முடாவின் ‘எல்.எஃப். வேட் சர்வதேச விமான நிலையத்திலிருந்து’ பாஸ்டன் ‘லோகன் சர்வதேச விமான நிலையத்திற்கு’ சுமார் இரண்டு மணி நேர இரவுப் பயணத்திற்காகப் புறப்பட்டுச் சென்றுள்ளது. விமானத்தைத் தேடும் பணியில் வான்வழி மற்றும் கடல்வழி மீட்புக் குழுவினர் ஈடுபடுத்தப்பட்டு ள்ளதாகக் கடலோரக் காவல் படை தெரிவித் துள்ளது.

# வர்த்தக மோதல் அதிகரிப்பு: அமெரிக்கா - கனடா புதிய இறக்குமதித் தடைகள் அமுல்

BEHIND ME MEDIA

1 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள கனடிய இறக்குமதிகளுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது அமலுக்கு வருகிறது.

ஏற்கனவே பதற்றமாக இருக்கும் அமெரிக்கா - கனடா உறவுகள், செவ்வாய்க்கிழமை அதிகாலை அமெரிக்கா சுமார் 1 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள கனடிய இறக்குமதிகளுக்குத் தடை விதிக்கும் முடிவை அமல்படுத்தியதைத் தொடர்ந்து மேலும் மோசமடைய வாய்ப்புள்ளது. இந்தத் தடையில் மதுபானங்கள், பால் பொருட்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் அடங்கும்.

இரு நாடுகளுக்கு இடையிலான 880 பில்லியன் டாலர் ஆண்டு வர்த்தகத்தில் இந்தத் தடை சிறிய அளவிலான பாதிப்பையே ஏற்படுத்தும். ஆனால், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தனது இரண்டாவது ஆட்சிக் காலத்தில், நாட்டின் நெருங்கிய தோழமையுள்ள மற்றும் வர்த்தகப் பங்காளியான கனடாவுக்கு எதிராகத் தொடங்கிய வர்த்தகப் போரின் மற்றொரு தீவிரமான நடவடிக்கையாக இது பார்க்கப்படுகிறது.



“இந்த இறக்குமதித் தடை அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையிலான வர்த்தகப் பதற்றத்தைத் தணிக்க எந்த வகையிலும் உதவாது” என்று வர்த்தக வழக்கறிஞரும் முன்னாள் அமெரிக்க வர்த்தக அதிகாரியுமான பேட்ரிக் சைல்ட்ரெஸ் கூறினார்.

டிரம்ப், கிரேட் டிப்ரஷன் (பெருந்தேக்க) காலத்து சட்டத்தைப் பயன்படுத்தி, சுமார் $20 பில்லியன் மதிப்புள்ள கனடிய இறக்குமதிகள் மீது 50 சதவீத வரியை விதித்தபோது இந்தத் தகராறு கோடைகாலத்தில் தொடங்கியது. பால், ஆட்டோமொபைல் மற்றும் மதுபான உற்பத்தியாளர்களுக்கு எதிராக கனடா பாகுபாடு காட்டுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

அதற்குப் பதிலடியாக கனடா 15%, 25% அல்லது 50% வரிகளை உடனடியாக விதித்து, அமெரிக்க இறக்குமதிகளுக்கு நிகராக வரிச் சுமையை ஏற்படுத்தியது.

தனது வரிகளுக்குப் பதிலடி கொடுத்த கனடாவைத் தண்டிக்க, செவ்வாய்க்கிழமை கிழக்கு நேரப்படி நள்ளிரவு 12:01 மணி முதல் கனடியப் பொருட்களின் பட்டியலுக்குத் தடை விதிக்க டிரம்ப் முடிவெடுத்தார்.

தடையில் உள்ள பொருட்கள் ஏற்கனவே டிரம்பின் வரிகளை எதிர்கொண்டு வந்ததாக சைல்ட்ரெஸ் குறிப்பிட்டார். “இவற்றில் பெரும்பாலான பொருட்களுக்கு, 50 சதவீத வரியே கனடாவில் இருந்து அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்வதைப் பொருளாதார ரீதியாகச் சாத்தியமற்றதாக்கி ஒரு மறைமுகத் தடையாகச் செயல்பட்டு வந்தது” என்று அவர் கூறினார்.

2025 ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்களின் அடிப்படையில், இந்தத் தடை $967 மில்லியன் மதிப்புள்ள கனடிய இறக்குமதிகளைப் பாதிக்கும் என்று ‘அமெரிக்கன் ஆக்சன் போரம்’ சிந்தனைக் குழுவின் வர்த்தகக் கொள்கை இயக்குநர் ஜேக்கப் ஜென்சன் கணக்கிட்டுள்ளார். அதில் 87 சதவீதம் மதுபானங்கள் ஆகும். டிரம்பின் நடவடிக்கைகளுக்குப் பதிலளிக்கும் விதமாக சில கனடிய மாகாணங்கள் அமெரிக்க மதுபானங்களை விற்பனை அலமாரிகளிலிருந்து அகற்றியதால் அமெரிக்கா மதுபானங்களைக் குறிவைத்துள்ளது.

மேலும், மோர் உள்ளிட்ட சில பால் பொருட்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. கனடா தனது பால் வளத் துறையைப் பாதுகாப்பதற்காக, ஒதுக்கீட்டைத் தாண்டி வரும் பால் இறக்குமதிகளுக்குக் அதிக வரிகளை விதிப்பது குறித்து இரு நாடுகளுக்கும் இடையே நீண்டகாலமாக மோதல் நிலவி வருகிறது.

இந்தத் தடையில் மோட்டார் சைக்கிள்களும் அடங்கும். கியூபெக்கைச் சேர்ந்த பாம்பார்டியர் ரிக்ரியேஷனல் டக்ட்ஸ் நிறுவனம், தனது மூன்று சக்கர ‘Can-Am Spyder’ மற்றும் ‘Canyon’ மோட்டார் சைக்கிள்கள் அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படாமல் தவிர்க்கப்படும் என்பதை உறுதிப்படுத்தியது. ஆனால், நடப்புப் பருவத்திற்கான பெரும்பாலான உற்பத்திகளையும் ஏற்றுமதியையும் முடித்துவிட்டதால், இதன் தாக்கம் அடுத்த ஆண்டு வரை தெரியாது என்று BRP தெரிவித்துள்ளது.

“இது வர்த்தகப் போரில் மற்றொரு தீவிரத்தைக் குறிக்கிறது, இது கனடா தரப்பில் இருந்து மேலும் பதிலடிக்கு வழிவகுக்கலாம்” என்று ஜென்சன் கூறினார். பாதிக்கப்பட்ட கனடிய ஏற்றுமதியாளர்களும் அமெரிக்க இறக்குமதியாளர்களும் இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காண இருதரப்பு வர்த்தக அதிகாரிகளிடம் கோரிக்கை வைப்பார்கள் என்று அவர் எதிர்பார்க்கிறார்.

இந்த முட்டுக்கட்டை, கனடா - அமெரிக்கா - மெக்சிகோ ஒப்பந்தத்தை புதுப்பிக்கும் முயற்சிகளை அச்சுறுத்துகிறது. இந்த ஒப்பந்தம் வட அமெரிக்க எல்லைகளில் பெரும்பாலான பொருட்கள் வரி இன்றிச் செல்ல அனுமதித்தது. ஆனால், கடந்த ஆண்டு வெள்ளை மாளிகைக்குத் திரும்பியதில் இருந்து, டிரம்ப் அறிவித்த தொடர் வரிகள் இந்த பிராந்திய வர்த்தகத்தின் எதிர்காலத்தை மேகமூட்டமாக்கியுள்ளன.

டிரம்ப் தனது கோபத்தின் பெரும்பகுதியைக் கனடாவின் மீது திருப்பியுள்ளார். அவர் கனடிய உற்பத்தியை அமெரிக்காவிற்கு ஈர்க்க முயல்கிறார். மேலும், கனடாவை அமெரிக்காவின் 51வது மாநிலமாக மாற்ற வேண்டும் என்று பலமுறை கூறி கனடாவில் பொதுமக்களின் எதிர்ப்பைக் கிளறியுள்ளார்.

டிரம்பை எதிர்த்து நிற்பேன் என்ற வாக்குறுதியுடன் பிரதமர் மார்க் கார்னி கடந்த ஆண்டு ஆட்சிக்கு வந்தார். டிரம்பின் வரிகளுக்குப் பதிலடி கொடுப்பதுடன், அமெரிக்கா மீதான கனடாவின் சார்ந்திருப்பைக் குறைக்க கார்னி முயன்று வருகிறார். கடந்த ஆண்டு கனடாவின் ஏற்றுமதியில் 70 சதவீதத்திற்கும் அதிகமானவை அமெரிக்காவிற்கே சென்றன.

அடுத்த பத்தாண்டுகளில் அமெரிக்கா அல்லாத பிற நாடுகளுடனான வர்த்தகத்தை இரட்டிப்பாக்க பிரதமர் விரும்புகிறார். கனடா ஐரோப்பிய யூனியனின் முதல் இணை பங்குபினராக மாறுவதற்கான வாய்ப்பை கார்னி வரவேற்றுள்ளார்.

மேலும், இந்தியாவுடனான வர்த்தகப் பேச்சு வார்த்தைகள் “நல்ல முன்னேற்றம்” அடைந்து வருவதாகவும், டிசம்பர் பாதியில் நடைபெறும் G20 உச்சிமாநாட்டிற்குள் பேச்சுவார்த்தைகளை முடிக்க இரு நாடுகளும் இலக்கு வைத்துள்ளதாகவும் அவர் கடந்த வாரம் கூறினார். கனடிய கனோலா மீதான வரிகளைச் சீனா குறைப்பதற்கு ஈடாக, குறைந்த எண்ணிக்கையிலான சீன மின்சார வாகனங்களை கனடாவிற்குள் அனுமதிக்க சீனாவுடன் கார்னி ஒப்பந்தம் செய்தார்.

“நிர்வாகத்தின் வர்த்தக நடவடிக்கைகள் அமலுக்கு வருவதைக் கவனத்தில் கொள்கிறோம்,” என்று கனடா-அமெரிக்க வர்த்தக அமைச்சர் டொமினிக் லெப்லாங்கின் செய்தித் தொடர்பாளர் கேப்ரியல் புருனெட் கூறினார். “நியாயமற்ற இந்த நடவடிக்கைகளிலிருந்து கனடிய தொழிலாளர்கள், விவசாயிகள், குடும்பங்கள் மற்றும் வணிகங்களைப் பாதுகாப்பதும் ஆதரவளிப்பதும் எங்கள் முதல் முன்னுரிமையாகும்.”

கனடியர்கள் பணிந்து விடுவார்கள் என்று டிரம்ப் நம்பிக்கை தெரிவித்தார். “அவர்கள் வந்து ‘ஐயா, நாங்கள் மன்னிக்கவும்’ என்று சொல்வார்கள்,” என்று அவர் திங்களன்று செய்தியாளர்களிடம் கூறினார். இந்த முட்டுக்கட்டை வாரக்கணக்கில் இல்லாமல் பல மாதங்களுக்கு நீடிக்க வாய்ப்புள்ளதாக வர்த்தக வழக்கறிஞர் சைல்ட்ரெஸ் கூறினார். “தற்போதைய இறக்குமதித் தடைகளும் வரிகளும் எந்தவொரு தரப்பையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரும் அளவுக்குப் பொருளாதாரப் கொந்தளிப்பை ஏற்படுத்தாது” என்று அவர் கூறினார்

## சாகித்யம் நுண்கலைக் கழகத்தில் புதிய மாணவர் சேர்க்கை

கொழும்பு, வெள்ளவத்தையில் கர்நாடக சங்கீத ஆசிரியை திருமதி சாகித்யா கஜமுகனால் நிர்வகிக்கப்பட்டுவரும் சாகித்யம் நுண்கலைக் கழகத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி விஜயதசமியன்று புதிய மாணவர்கள் சேர்க்கை நடைபெறவுள்ளது.

புதிய மாணவர்கள் நேரடியாகவும் வெளிநாடுகளில் வசிக்கும் மாணவர்கள் இணையத்தின் ஊடாகவும் இணைந்து கொள்ளலாம்.

தகவல் மற்றும் தொடர்புகளுக்கு :
Sahithyam Academy
No 74, 37th Lane, Wellawatta,
Colombo – 06
0094 777 955 862




## டயர்களுக்கு புதிய தரநிலைகள்!

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பயணிகள் கார்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கான டயர்களுக்கு புதிய இலங்கை தரநிலைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் 2026 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் கீழ் குறித்த புதிய ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் 2024 மே 17 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2384/35 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த தர நிர்ணயம் மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் மேலும் திருத்தப்பட்டுள்ளன.

## வைத்திய நிபுணர் சயந்தன் பேராசிரியராகப் பதவியுயர்வு!

சத்திரசிகிச்சைத் துறையில் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றுள்ள வைத்திய நிபுணர் பா.சயந்தன் அவர்களுக்கு வாழ்த்துகள்

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் சத்திர சிகிச்சைத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும், குழந்தைகள் மற்றும் சிறுவர் சத்திரசிகிச்சை நிபுணருமான வைத்திய நிபுணர் பா.சயந்தன் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

# தியாக தீபம் நினைவேந்தும் உரிமையை உறுதிப்படுத்துங்கள் ஐநா மனித உரிமைகள் ஆணையாளருக்கு மகஜர்!

BEHIND ME MEDIA

தியாக தீபம் நினைவேந்தும் உரிமையை உறுதிப்படுத்துமாறு கோரி ஐநா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்க்கர் டுர்க்கிடம் 15 பொது அமைப்புக்கள் கையெழுத்திட்ட மகஜர். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பிராந்தியக் காரியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டது.

குறித்த மஜகரில் தெரிவிக்கப்பட்டதாவது தமது அரசியல் தலைவிதியைத் தாமே தீர்மானித்துக் கொள்வதற்கான மக்களின் சுயநிர்ணய உரிமை சர்வதேச மனித உரிமைச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமையாகும்.

சர்வதேச குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையின் பிரிவு 1, அனைத்து மக்களுக்கும் தமது அரசியல் நிலையைச் சுதந்திரமாகத் தீர்மானித்துக்கொள்வதற்கும், தமது பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு வளர்ச்சியை முன்னெடுப்பதற்குமான சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை உறுதிப்படுத்துகின்றது.

இலங்கையில் தமிழ் மக்களும் தமது அரசியல் உரிமைகள் மற்றும் அரசியல் எதிர்காலம் தொடர்பான கோரிக்கைகளை வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு வழிமுறைகளில் வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

அவற்றுள் அகிம்சை வழியிலான அரசியல் போராட்டமும் முக்கியமான ஓர் அங்கமாக அமைந்துள்ளது. அதன் குறிப்பிடத்தக்க வரலாற்று அடையாளங்களில் ஒருவராகவே தியாகதீபம் தமிழ் மக்களின் கூட்டு நினைவில் நிலைத்திருக்கின்றார்.

1987 ஆம் ஆண்டு, இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில், ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, நீராகாரம் மற்றும் உணவு எதனையும் உட்கொள்ளாது மேற்கொண்ட உண்ணாநோன்புப் போராட்டம் அவரது உயிரிழப்புடன் முடிவடைந்தது.

தனது அரசியல் கோரிக்கைகளை ஆயுதமின்றி, தனது உடலையே போராட்டத்தின் ஊடகமாக்கி வெளிப்படுத்திய இந்நிகழ்வு தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றிலும் கூட்டு நினைவிலும் ஆழமான இடத்தைப் பெற்றுள்ளது.

உலகிற்கு அகிம்சைப் போராட்டத்தின் வலிமையை எடுத்துக்காட்டிய மகாத்மா காந்தியின் தேசமான இந்தியாவின் அமைதிப்படையிடம் முன்வைக்கப்பட்ட இந்த அகிம்சை வழிப் போராட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அமைந்துள்ளது.

அதனாலேயே தியாகதீபம் தமிழ் மக்கள் நீண்டகாலமாக நினைவுகூர்ந்து வருகின்றனர். இந்த நினைவேந்தல் என்பது தனிநபர் ஒருவரை நினைவுகூரும் செயற்பாடு மட்டுமல்ல் ஒரு சமூகத்தின் கூட்டு நினைவு, வரலாறு, அரசியல் வெளிப்பாடு மற்றும் பண்பாட்டு அடையாளம் ஆகியவற்றுடனும் தொடர்புடையதாகும்.

மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தின் பிரிவுகள் 19 மற்றும் 20, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் அமைதியான ஒன்றுகூடல் உரிமையையும் அங்கீகரிக்கின்றன.



அதேபோன்று, இலங்கையும் அரசுத் தரப்பாக உள்ள ICCPR-இன் பிரிவுகள் 19 மற்றும் 21, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் அமைதியான ஒன்றுகூடல் உரிமையையும் பாதுகாக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவின் General Comment No. 37 அமைதியான ஒன்றுகூடல் உரிமையின் பாதுகாப்பையும், அதன்மீதான கட்டுப்பாடுகள் சட்டபூர்வமானவையாகவும் அவசியமானவையாகவும் அளவானவையாகவும் இருக்க வேண்டியதையும் வலியுறுத்துகின்றது.

மேலும், கடந்தகால மனித உரிமை மீறல்கள் மற்றும் மோதல்களுக்குப் பிந்தைய சூழல்களில் நினைவுகூரல் என்பது உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள்நிகழாமைக்கான உத்தரவாதங்களுடன் தொடர்புடைய முக்கியமான செயல்முறையாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பொறிமுறைகளால் அணுகப்பட்டுள்ளது.

எனவே, அமைதியான நினைவேந்தலை அரசினால் வழங்கப்படும் ஒரு "அனுமதி" அல்லது "சலுகை" என்ற அடிப்படையில் மட்டும் அணுக முடியாது அது கருத்து வெளிப்பாடு, அமைதியான ஒன்றுகூடல் மற்றும் கூட்டு நினைவு ஆகிய மனித உரிமைகளின் அடிப்படையில் அணுகப்பட வேண்டும்.

இந்தப் பின்னணியில், தியாகதீபம் நினைவாலயம் தொடர்பான அரச நிர்வாகப் பின்னணியும் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

குறித்த நினைவாலயத்தை அமைப்பதற்காக இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அரச நிதி ஒதுக்கப்பட்டு, உரிய அரச நிர்வாக நடைமுறைகளின் ஊடாக அந்நிதி விடுவிக்கப்பட்டு, அதனைப் பயன்படுத்தியே குறித்த நினைவாலயம் மீள்நிர்மாணப் பணிகளின் ஆவண ஆதாரங்கள் காணப்படுகின்றன.

எனவே, குறித்த நினைவாலயம் அரச நிர்வாக நடைமுறைகளுக்கு முற்றிலும் புறம்பாக உருவாக்கப்பட்ட ஒன்றாக மட்டும் சித்தரிக்கப்பட முடியாது.

இத்தகைய பின்னணியில், தமிழ் மக்களின் கூட்டு நினைவில் அகிம்சை வழிப் போராட்டத்தின் முக்கிய அடையாளமாக விளங்கும் தியாகதீபம் திலீபனின் திருவுருவச்சிலை குறித்த நினைவாலயத்திலிருந்து அகற்றப்பட்டமை, தமிழ் மக்களின் நினைவு, அரசியல் வெளிப்பாடு மற்றும் அமைதியான நினைவேந்தல் உரிமைகள் தொடர்பில் தீவிரமான கவலையை ஏற்படுத்துகின்றது.

அதேவேளை, தமிழ் மக்கள் கடந்த காலங்களில் தமது நினைவேந்தல்களை எவ்வித தடைகளுமின்றி மேற்கொண்டனர் என்ற தோற்றத்தையும் உருவாக்கக்கூடாது. பல்வேறு சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தல்கள், கண்காணிப்புகள், தடைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் குறித்த அச்சங்களுக்கு மத்தியிலேயே தமிழ் மக்கள் நினைவேந்தல்களை முன்னெடுத்து வந்ததாக மனித உரிமை அமைப்புகளும் பாதிக்கப்பட்ட சமூகங்களும் தொடர்ச்சியாகக் கூறிவந்துள்ளன.

எனவே, எமது கோரிக்கை கடந்த காலத்தில் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் ஓர் "அனுமதியை மீண்டும் வழங்குங்கள்" என்பதல்ல. மாறாக, தமிழ் மக்கள் தமது இறந்தவர்களையும், தமது வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றவர்களையும், தமது கூட்டு வரலாற்று அனுபவங்களையும் அச்சுறுத்தல், கண்காணிப்பு, தேவையற்ற தலையீடு மற்றும் தடைகள் இன்றி அமைதியாகவும் சுதந்திரமாகவும் நினைவுகூரக்கூடிய மனித உரிமைச் சூழல் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதாகும்.

ஆகவே, தியாகதீபம் திருவுருவச்சிலை அகற்றப்பட்டமை தொடர்பில் உரிய கவனம் செலுத்துமாறும், தமிழ் மக்களின் அமைதியான நினைவேந்தல் உரிமை மதிக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறும், ஐக்கிய நாடுகள் சபை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம், சம்பந்தப்பட்ட ஐ.நா. விசேட நடைமுறைகள், சர்வதேச நாடுகள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் ஆகியவற்றை விநயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பாக, நினைவேந்தல்களின் போது அச்சுறுத்தல், கண்காணிப்பு மற்றும் தேவையற்ற தலையீடுகள் இடம்பெறாத சூழலை உறுதிப்படுத்தவும் அமைதியான நினைவேந்தல்களின் மீதான எந்தவொரு கட்டுப்பாடும் சர்வதேச மனித உரிமைச் சட்டத்தின் சட்டபூர்வத்தன்மை, அவசியம் மற்றும் அளவுத்தன்மை ஆகிய நியமங்களுக்கு உட்பட்டதாக இருப்பதை உறுதிப்படுத்தவும்.

அகற்றப்பட்ட தியாகதீபம் திருவுருவச்சிலையை அதன் நினைவாலயத்தில் மீள நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துமாறு சர்வதேச சமூகத்திடம் வேண்டுகின்றோம்.

நினைவேந்தல் என்பது அரசினால் வழங்கப்படும் ஒரு சலுகையாக மட்டும் அணுகப்பட வேண்டியதல்ல் அது கருத்து வெளிப்பாடு, அமைதியான ஒன்றுகூடல் மற்றும் ஒரு சமூகத்தின் கூட்டு நினைவு ஆகிய மனித உரிமைகளுடன் நெருங்கிய தொடர்புடையதாகும்.

தமிழ் மக்கள் தமது வரலாற்றையும் நினைவுகளையும் அச்சமின்றி, அமைதியாகவும் சுதந்திரமாகவும் நினைவுகூரக்கூடிய சூழலை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

இவ்விடயத்தில் தங்களது தலையீடும் தொடர்ச்சியான அவதானிப்பும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு முக்கியமான பங்களிப்பாக அமையும் என நம்புகிறோம் என குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# ஆசிய அரங்கில் திறமையை வெளிப்படுத்திய மேடையில் நிராகரிக்கப்பட்ட சனித்மா சினாலி!

மேடையில் நிராகரிக்கப்பட்ட சனித்மா சினாலி ஆசிய அரங்கில் திறமையை வெளிப்படுத்தினார்!

ஒரு காலத்தில் தனது நியாயமான அங்கீகாரத்திற்காக பள்ளி மேடையில் துணிச்சலுடன் குரல் எழுப்பிய அந்தச் சிறுமி சாணித்மா சினாலி!

,ன்று அதே துணிச்சலுடன் ஆசிய விளையாட்டு அரங்கில் களமிறங்கி, சீனாவின் Liu Ziyi-ஐ கடுமையான போராட்டத்துக்குப் பிறகு 3–2 என்ற கணக்கில் வீழ்த்தியுள்ளார்!

11–9 ' 6–11 ' 3–11 ' 11–4 ' 11–4

முதல் சுற்றில் வெற்றி...

அடுத்த இரண்டு சுற்றுகளில் பின்னடைவு...

வெற்றி கைவிட்டுப் போகும் நிலை வந்தும் அவள் விட்டுக்கொடுக்கவில்லை!

ஒரு மேடையில் கிடைக்காமல் போன அங்கீகாரத்திற்கு பதிலாக, இன்று முழு ஆசியாவே அவளுடைய திறமையைப் பார்த்திருக்கிறது.





# இந்த வாரம்

BEHIND ME MEDIA





## 6-10-26


சர்வ ஏகாதசி

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். கன்னி மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 ஆஷ்வினம் 14
பெருமாளுக்கு துளசி மாலை சாற்றி எம்பெருமானை வழிபட்டு துன்பம் தீர்க்கும் சர்வ ஏகாதசி விரதம் இன்று.
தசமி கா.03.22 வரை, பின்பு ஏகாதசி - பூசம் கா.01.05 வரை, ஆயில்யம் மா.11.54 வரை, பின்பு மகம்.

ஸ்ரீ பராபவ புரட்டாசி **19** | **OCT - TUE** செவ்வாய் | ரபிஉல்ஆகிர் **24** | தேய்பிறை 279 / 086

தேய். ஏகாதசி 48.38 (கா. 01.29) ஆயில்யம் 44.39 (மா. 11.54) தியாஜ் 18.05 சித்த யோகம். **சர்வ ஏகாதசி**. சுவாமிமலை ஸ்ரீமுருகப் பெருமானுக்கு பேராயிரம் நாமாவளி கொண்ட தங்கப் பூமாலை சூடியருளல். மதுரை ஸ்ரீகூடலழகர், திருமாலிருஞ்சோலை ஸ்ரீகள்ளழகர் புறப்பாடு. சிறிய நகசு.

| | நல்லநேரம் | கௌ.ந.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.45-8.45 | 10.45-11.45 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை | 4.45-5.45 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |

சூலம் : வடக்கு | பரிகாரம் : பால் | கன்னியா லக்கனம் இருப்பு நா. 2 வி. 00 | சந்திராஷ்டமம் பூராடம் உத்திராடம்
கரணம் : 7.30-9 | சூரிய உதயம் : 6.02

சனி | ரா | 3 கட-செ | 8 துலா-புத | செவ்வி | கே | பு சு | சூ | கீழ் ↓ | திதி ஏகாதசி

**கைப்பொருள் இல்லாதவனை கட்டினவளும் மதியாள்**

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | தாமதம் |
| ரிஷபம் | அச்சம் |
| மிதுனம் | எதிர்ப்பு |
| கடகம் | வரவு |
| சிம்மம் | நட்பு |
| கன்னி | நன்மை |
| துலாம் | செலவு |
| விருச்சி | ஆதரவு |
| தனுசு | மகிழ்ச்சி |
| மகரம் | சுகம் |
| கும்பம் | ஆதாயம் |
| மீனம் | சுபம் |

## 7-10-2026

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். கன்னி மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 ஆஷ்வினம் 15
கிணறு, சுரங்க பணிகள், கிழங்கு வகை பயிர்கள் நடவு செய்ய ஏற்ற கீழ் நோக்கு நாள் இன்று.
ஏகாதசி கா.01.29 வரை, துவாதசி மா.11.54 வரை, பின்பு திரயோதசி - மகம் மா.11.10 வரை, பின்பு பூரம்.

ஸ்ரீ பராபவ புரட்டாசி **20** | **OCT - WED** புதன் | ரபிஉல்ஆகிர் **25** | தேய்பிறை 280 / 085

தேய். துவாதசி 44.40 (மா. 11.54) மகம் 42.25 (மா. 11.10) தியாஜ் 13.35 சித்த 42.25 மேல் அமிர்த யோகம். ஸன்யஸ்தமஹாளம். திருப்பதி ஸ்ரீஏழுமலையப்பன் கத்தவால் சமஸ்தான மண்டபம் எழுந்தருளல். ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீவைகுண்டபதிக்கு பால் அபிஷேகம். சிறிய நகசு.

| | நல்லநேரம் | கௌ.ந.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.15-10.15 | 1.45-2.45 | 12.00 | 10.30 | 07.30 |
| மாலை | 4.45-5.45 | 6.30-7.30 | 01.30 | 12.00 | 09.00 |

சூலம் : வடக்கு | பரிகாரம் : பால் | கன்னியா லக்கனம் இருப்பு நா. 1 வி. 50 | சந்திராஷ்டமம் உத்திராடம் திருவோணம்
கரணம் : 6-7.30 | சூரிய உதயம் : 6.02

சனி | ரா | 3 கட-செ | 8 துலா-புத | செவ்வி | கே | பு சு | சூ | கீழ் ↓ | திதி துவாதசி

**வெல்வதற்கே தோல்வி எழுவதற்கே விழ்ச்சி**

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | கவலை |
| ரிஷபம் | ஆதரவு |
| மிதுனம் | வரவு |
| கடகம் | உற்சாகம் |
| சிம்மம் | தாமதம் |
| கன்னி | செலவு |
| துலாம் | எதிர்ப்பு |
| விருச்சி | அமைதி |
| தனுசு | ஆர்வம் |
| மகரம் | பயணம் |
| கும்பம் | ஆக்கம் |
| மீனம் | பாராட்டு |

## 8-10-26


பிரதோஷம்

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். கன்னி மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 ஆஷ்வினம் 16
நந்தி தேவருக்கு வில்வ இலை கொண்டு பூஜை செய்து சிவ வழிபாடு செய்யும் உன்னத பிரதோஷம் இன்று.
திரயோதசி மா.10.39 வரை, பின்பு சதுர்த்தசி - பூரம் மா.10.27 வரை, பின்பு உத்திரம்.

ஸ்ரீ பராபவ புரட்டாசி **21** | **OCT - THU** வியாழன் | ரபிஉல்ஆகிர் **26** | தேய்பிறை 281 / 084

தேய். திரயோதசி 41.33 (மா. 10.39) பூரம் 41.02 (மா. 10.27) தியா 01.55, 58.59 சித்த 41.02 மேல் மரண யோகம். **பிரதோஷம்**. கஜகௌரி விரதம். கலியுகாதி. சுவாமிமலை முருகப் பெருமானுக்கு தங்கக் கவசம் அணிந்து வைரவேல் தரிசனம். குருவித்துறை குருபகவானை வழிபட நன்று.

| | நல்லநேரம் | கௌ.ந.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 10.30-11.00 | ------------ | 01.30 | 09.00 | 06.00 |
| மாலை | ------------ | 6.30-7.30 | 03.00 | 10.30 | 07.30 |

சூலம் : தெற்கு | பரிகாரம் : தைலம் | கன்னியா லக்கனம் இருப்பு நா. 1 வி. 40 | சந்திராஷ்டமம் திருவோணம் அவிட்டம்
கரணம் : 3-4.30 | சூரிய உதயம் : 6.02

சனி | ரா | 3 கட-செ | 8 துலா-புத | செவ்வி | கே | பு சு | சூ | கீழ் ↓ | திதி திரயோதசி

**இரண்டு காலில் வந்த பணம் நூறு காலில் விட்டுப்போகும்**

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | சிக்கல் |
| ரிஷபம் | உற்சாகம் |
| மிதுனம் | எதிர்ப்பு |
| கடகம் | சிரமம் |
| சிம்மம் | நன்மை |
| கன்னி | வரவு |
| துலாம் | ஆர்வம் |
| விருச்சி | சோர்வு |
| தனுசு | தனம் |
| மகரம் | தடங்கல் |
| கும்பம் | நட்பு |
| மீனம் | மகிழ்ச்சி |

## 9-10-26


மாத சிவராத்திரி

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். கன்னி மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 ஆஷ்வினம் 17
சூலம் மேற்கு - மேல் திசை பயணம் தவிர்க்கவும், அவசியம் எனில், பரிகாரம் வெல்லம் உண்டு பயணிக்கவும்.
சதுர்த்தசி மா.09.52 வரை, பின்பு அமாவாசை - உத்திரம் மா.10.20 வரை, பின்பு ஹஸ்தம்.

ஸ்ரீ பராபவ புரட்டாசி **22** | **OCT - FRI** வெள்ளி | ரபிஉல்ஆகிர் **27** | தேய்பிறை 282 / 083

தேய். சதுர்த்தசி 39.34 (மா. 09.52) உத்திரம் 40.45 (மா.10.20) சேஷம் 02.59 சித்த 40.45 மேல் அமிர்த. **மாத சிவராத்திரி**. கேதார விருதஸமாப்தம். இராமேஸ்வரம் ஸ்ரீபர்வதவர்த்தினியம்மன் நவசக்தி மண்டபம் எழுந்தருளி தங்க பல்லக்கில் புறப்பாடு. திருவிடைமருதூர் பிரகத்குசாம்பிகை புறப்பாடு.

| | நல்லநேரம் | கௌ.ந.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.15-10.15 | 12.15-1.15 | 10.30 | 07.30 | 03.00 |
| மாலை | 4.45-5.45 | 6.30-7.30 | 12.00 | 09.00 | 04.30 |

சூலம் : மேற்கு | பரிகாரம் : வெல்லம் | கன்னியா லக்கனம் இருப்பு நா. 1 வி. 30 | சந்திராஷ்டமம் அவிட்டம் சதயம்
கரணம் : 1.30-3 | சூரிய உதயம் : 6.02

சனி | ரா | 3 கட-செ | 8 துலா-புத | செவ்வி | கே | பு சு | சூ | மேல் ↑ | திதி சதுர்த்தசி

**கைப்பொருளற்றால் கட்டினவளும் பாராள்**

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | பாராட்டு |
| ரிஷபம் | சினம் |
| மிதுனம் | பொறுமை |
| கடகம் | ஏமாற்றம் |
| சிம்மம் | ஆதரவு |
| கன்னி | போட்டி |
| துலாம் | கவனம் |
| விருச்சி | களிப்பு |
| தனுசு | சாதனை |
| மகரம் | சலனம் |
| கும்பம் | பக்தி |
| மீனம் | இரக்கம் |

## 10-10-26

அமாவாசை


மஹாளய அமாவாசை

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். கன்னி மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 ஆஷ்வினம் 18
முன்னோர்களை வழிபட்டு, ஆசி பெற்று, குடும்பத்தில் துன்பம் நீங்கி நலம் பெருகும் மஹாளய அமாவாசை.
அமாவாசை மா.09.34 வரை, பின்பு பிரதமை - ஹஸ்தம் மா.10.42 வரை, பின்பு சித்திரை.

ஸ்ரீ பராபவ புரட்டாசி **23** | **OCT - SAT** சனி | ரபிஉல்ஆகிர் **28** | அமாவாசை 283 / 082

அமாவாசை 38.50 (மா. 09.34) ஹஸ்தம் 41.40 (மா. 10.42) தியாஜ் 02.08 மரண யோகம். **மஹாளய அமாவாசை**. மாஷா கௌரீ விரதம். ஸ்ரீரங்கம் நம்பெருமாளுக்கு திருமஞ்சன ஸேவை. பாபநாசம், திருவெம்பல், திருக்குற்றாலம் இத்தலங்களில் ஸ்ரீசிவபெருமான் விழா தொடக்கம்.

| | நல்லநேரம் | கௌ.ந.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 10.45-11.45 | 12.15-1.15 | 09.00 | 06.00 | 01.30 |
| மாலை | 4.45-5.45 | 9.30-10.30 | 10.30 | 07.30 | 03.00 |

சூலம் : கிழக்கு | பரிகாரம் : தயிர் | கன்னியா லக்கனம் இருப்பு நா. 1 வி. 20 | சந்திராஷ்டமம் சதயம் பூரட்டாதி
கரணம் : 12-1.30 | சூரிய உதயம் : 6.02

சனி | ரா | 3 கட-செ | 8 துலா-புத | செவ்வி | கே | பு சு | சூ | சம ↔ | திதி அமாவாஸ்யை

**பயத்தை விட்டு துணிவை பயிர்ந்து கொள்**

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | உயர்வு |
| ரிஷபம் | நன்மை |
| மிதுனம் | பயம் |
| கடகம் | சிரமம் |
| சிம்மம் | சிக்கல் |
| கன்னி | ஆதரவு |
| துலாம் | ஏமாற்றம் |
| விருச்சி | மறதி |
| தனுசு | சாந்தம் |
| மகரம் | ஊக்கம் |
| கும்பம் | தனம் |
| மீனம் | வெற்றி |

## 11-10-26


நவராத்திரி துவக்கம்

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். கன்னி மாதம். சுக்ல பட்சம். சக 1948 ஆஷ்வினம் 19
துர்க்கை அம்மன் தீய சக்திகளை வென்றதை கொண்டாடும் நவராத்திரி விழாவின் துவக்கம் இன்று.
பிரதமை மா.09.45 வரை, பின்பு துவிதியை - சித்திரை மா.11.32 வரை, பின்பு சுவாதி.

ஸ்ரீ பராபவ புரட்டாசி **24** | **OCT - SUN** ஞாயிறு | ரபிஉல்ஆகிர் **29** | வளர்பிறை 284 / 081

வளர். பிரதமை 39.17 (மா. 09.45) சித்திரை 43.45 (மா. 11.32) தியாஜ் 02.25, 58.35 சித்த யோகம். இஷ்டி காலம். **நவராத்திரி ஆரம்பம்**. தௌஹித்ரப் பிரதமை. மதுரை மீனாட்சியம்மன் கொலு மண்டபத்தில் ராஜ ராஜேஸ்வரி அலங்காரம். திருத்தணி ஸ்ரீமுருகப் பெருமானுக்கு பால் அபிஷேகம்.

| | நல்லநேரம் | கௌ.ந.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 10.45-11.45 | 1.45-2.45 | 04.30 | 03.00 | 12.00 |
| மாலை | 3.15-4.15 | 1.30-2.30 | 06.00 | 04.30 | 01.30 |

சூலம் : மேற்கு | பரிகாரம் : வெல்லம் | கன்னியா லக்கனம் இருப்பு நா. 1 வி. 10 | சந்திராஷ்டமம் பூரட்டாதி உத்திரட்டாதி
கரணம் : 10.30-12 | சூரிய உதயம் : 6.02

சனி | ரா | 3 கட-செ | 8 துலா-புத | செவ்வி | கே | பு சு | சூ | சம ↔ | திதி பிரதமை

**இல்லாமல் போனாலும் சொல்லாமல் போகாதே**

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | ஆதரவு |
| ரிஷபம் | அசதி |
| மிதுனம் | சிரமம் |
| கடகம் | லாபம் |
| சிம்மம் | செலவு |
| கன்னி | சுகம் |
| துலாம் | கடமை |
| விருச்சி | வெற்றி |
| தனுசு | நன்மை |
| மகரம் | பயம் |
| கும்பம் | வருத்தம் |
| மீனம் | சிக்கல் |

## 12-10-2026

சந்திர தரிசனம்

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். கன்னி மாதம். சுக்ல பட்சம். சக 1948 ஆஷ்வினம் 20
சூலம் கிழக்கு - கிழக்கு திசை பயணம் தவிர்க்கவும், அவசியம் எனில், பரிகாரம் தயிர் உண்டு பயணிக்கவும்.
துவிதியை மா.10.28 வரை, பின்பு திரிதியை - சுவாதி இன்று முழுவதும்.

ஸ்ரீ பராபவ புரட்டாசி **25** | **OCT - MON** திங்கள் | ரபிஉல்ஆகிர் **30** | வளர்பிறை 285 / 080

வளர். துவிதியை 41.04 (மா. 10.28) சுவாதி 47.06 (கா. 01.52) சேஷம் 02.35 அமிர்த 47.06 மேல் மரண யோகம். **சந்திர தரிசனம்**. தனவிருத்தி கௌரீ விரதம். குலசேகரப்பட்டிணம் முத்தாலம்மன் கற்பகவிருட்சம் வாகனத்திலும் விக்னேஸ்வரர் கோலத்துடன் காட்சி. ஸ்ரீகுற்றாலநாதர் திருவீதியுலா.

| | நல்லநேரம் | கௌ.ந.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.15-10.15 | 1.45-2.45 | 07.30 | 01.30 | 10.30 |
| மாலை | 4.45-5.45 | 7.30-8.30 | 09.00 | 03.00 | 12.00 |

சூலம் : கிழக்கு | பரிகாரம் : தயிர் | கன்னியா லக்கனம் இருப்பு நா. 1 வி. 00 | சந்திராஷ்டமம் ரேவதி
கரணம் : 9-10.30 | சூரிய உதயம் : 6.02

சனி | ரா | 3 கட-செ | 8 துலா-புத | செவ்வி | கே | பு சு | சூ | சம ↔ | திதி துவிதியை

**மலை புயலுக்கு அசைந்து கொடுப்பதில்லை**

| இராசிபலன் | |
|---|---|
| மேஷம் | மகிழ்ச்சி |
| ரிஷபம் | நிறைவு |
| மிதுனம் | முயற்சி |
| கடகம் | பெருமை |
| சிம்மம் | அனுகூலம் |
| கன்னி | நலம் |
| துலாம் | எதிர்ப்பு |
| விருச்சி | மறதி |
| தனுசு | அச்சம் |
| மகரம் | நலம் |
| கும்பம் | போட்டி |
| மீனம் | பக்தி |

# “நெஞ்சம் மறப்பதில்லை”

BEHIND ME MEDIA

ஸ்காபுறோவில் இயங்கிவரும் விஜயா நகை மாளிகையின் பிரதான அனுசரணையில் சமூகச் செயற்பாட்டாளர் குரு யோகராஜாவின் ஏற்பாட்டிலும் கடந்த சனிக்கிழமை ஸ்காபுறோவில் “நெஞ்சம் மறப்பதில்லை“ இசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வுக்காக தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த கலைஞர்களுடனான ஊடகவியலாளர் சந்திப்பு மற்றும் நிகழ்வின் சில காட்சிகளை படங்களில் காணலாம்.






















## சலங்கையும் கீதமும் அரும்புகள் மலரும் ஓசைகள் ஊடகவியலாளர் சந்திப்பு

தளிர் Media உடைய சலங்கையும் கீதமும் (Season-2) - 2 அரும்புகள் மலரும் ஓசைகள் நிகழ்வுக்கான ஊடகவியாலளர் சந்திப்பு கடந்தவாரம் Scarborough இல் நடைபெற்றது.















# பிராட்ஃபோர்ட்டை விட சௌ 17 புள்ளிகள் முன்னிலை - கருத்துக்கணிப்பு தகவல்

நகராட்சி தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்துள்ள நிலையில், 'சிட்டிநியூஸ்" (CityNews) சேவைக்காக "கனடா பல்ஸ் இன்சைட்ஸ்" (Canada Pulse Insights) நடத்திய புதிய கருத்துக்கணிப்பில்,

பிராட் பிராட்ஃபோர்ட்டை (Brad Bradford) விட ஒலிவியா சௌ (Olivia Chow) 17 புள்ளிகள் முன்னிலையில் உள்ளார் என்பது தெரியவந்துள்ளது.




நகராட்சி தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதமே உள்ள நிலையில், டொராண்டோவில் வாக்களிக்க தீர்மானித்துள்ள மக்களிடையே தற்போதைய மேயர் ஒலிவியா சௌ முன்னணி வகிப்பதாக புதிய கருத்துக் கணிப்பு சுட்டிக் காட்டுகிறது.

வாக்களிக்க முடிவெடுத்தவர்களிடையே சௌ 51 சதவீத ஆதரவைப் பெற்றுள்ளார்.

அவருக்கு அடுத்தபடியாக பிராட்ஃபோர்ட் 34 சதவீதத்தையும், கிறிஸ் அலெக்சாண்டர் (Chris Alexander) ஒன்பது சதவீதத்தையும் பெற்றுள்ளனர். முதல் மூன்று இடங்களுக்கு வெளியே உள்ள ஏனைய வேட்பாளர்கள் மொத்தமாக ஆறு சதவீத ஆதரவைப் பெற்றுள்ளனர்.

அனைத்து வாக்காளர்களையும் கணக்கில் கொள்ளும்போது இந்த இடைவெளி சற்றே குறைகிறது. தற்போதைய மேயருக்கு 38 சதவீத ஆதரவும், பிராட்ஃபோர்ட்டிற்கு 25 சதவீத ஆதரவும், அலெக்சாண்டருக்கு ஏழு சதவீத ஆதரவும் கிடைத்துள்ளது.

கருத்துக்கணிப்பில் பங்கேற்றவர்களில் மேலும் 20 சதவீதத்தினர் யாருக்கு வாக்களிப்பது என்று இன்னும் முடிவு செய்யவில்லை. நான்கு சதவீதத்தினர் வேறு வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதாகவும், ஆறு சதவீதத்தினர் எவருக்கும் வாக்களிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

கருத்துக்கணிப்பில் பங்கேற்ற பெரும்பான்மையானவர்கள் (55 சதவீதம்) டொராண்டோவில் மாற்றம் தேவை என்று கூறியுள்ளபோதிலும், 45 சதவீதத்தினர் சௌ மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட தகுதியானவர் என்று கூறியுள்ளனர். மாற்றம் விரும்பும் 55 சதவீதத்தினரில், பிராட்ஃபோர்ட்டிற்கு 44 சதவீத ஆதரவு உள்ளது.

சௌவை ஆதரிப்பவர்களில் 90 சதவீதத்தினர் அவர் மீண்டும் மேயராக வர வேண்டும் என்று கூறியுள்ளனர். ஆனால் பிராட்ஃபோர்ட்டை ஆதரிப்பவர்களில் வெறும் ஆறு சதவீதத்தினரே சௌவுக்கு இரண்டாவது தவணை வழங்கப்பட வேண்டும் எனக் கருதுகின்றனர்.

சௌ கணிசமான முன்னிலையில் இருந்தாலும், பிராட்ஃபோர்ட் அல்லது கிறிஸ் அலெக்சாண்டருக்கு அதிகாரத்தை மாற்ற நினைக்கும் வாக்காளர்கள் முழுமையாக ஒருங்கிணைந்து செயல்படவில்லை என்பதையே இந்த கருத்துக்கணிப்பு வெளிப்படுத்துகிறது என்று கருத்துக்கணிப்பாளர் ஜான் ரைட் (John Wright) கூறுகிறார்.

பிரச்சாரத்தில் இன்னும் நான்கு வாரங்கள் மட்டுமே உள்ள நிலையில், மேயர் சௌ இரண்டாவது முறையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றே நான் கருதுகிறேன். அவரை பதவியிலிருந்து அகற்றுவதற்கு போதுமான கோபமோ அல்லது தூண்டுதலோ மக்களிடையே இருப்பதாக நான் நினைக்கவில்லை," என்று அவர் சிட்டிநியூஸிடம் தெரிவித்தார்.

முடிவு செய்யாத வாக்காளர்களில் கிட்டத்தட்ட 74 சதவீதத்தினர் மாற்றம் தேவை என்று தெரிவித்துள்ளனர்.

மாற்றம் விரும்பும் இந்த வாக்காளர்களில் பெரும்பாலானோர் நடுத்தர வயதுடையவர்களாகவும், பெண்களாகவும், நகர மையப் பகுதிகளில் (downtown) வசிப்பவர்களாகவும் உள்ளனர். மேலும் அவர்களில் பத்து பேரில் நால்வர் தாங்கள் வாக்களிப்போமா என்பதே சந்தேகம்தான் என்று கூறியுள்ளனர்.

இதற்கிடையில், மாற்றத்தை விரும்பும் வாக்காளர்களில் 27 சதவீதத்தினர் (அனைத்து டொராண்டோவாசிகளில் 15 சதவீதம்) யாருக்கு வாக்களிப்பது என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை.

மாற்றத்தை விரும்பும் பெரும்பாலான மக்களின் ஆதரவை பிராட்ஃபோர்ட் பெறுகிறார், ஆனால் மீதமுள்ள குழுவினர் பிராட்ஃபோர்ட்டுடன் இணையவில்லை. அவர்கள் நகர சபையின் மீதான அவரது விமர்சனங்களையும் பிரச்சினைகளையும் ஏற்றுக்கொள்கிறார்கள், ஆனால் ஏதோ ஒரு காரணத்திற்காக அவர்கள் அவரை நோக்கி நகரவில்லை," என்று ரைட் கூறுகிறார்.

"முடிவெடுக்காத பலர் தேர்தலில் வாக்களிக்காமல் வீட்டிலேயே தங்கிவிடக்கூடும். வாக்களிக்க வரும் நபர்களும் கட்டாயமாக பிராட்ஃபோர்ட் அல்லது கிறிஸ் அலெக்சாண்டருக்குத்தான் வாக்களிப்பார்கள் என்று கூற முடியாது".

மேலும், பந்தயத்தில் கிறிஸ் அலெக்சாண்டரின் வருகை பிராட்ஃபோர்ட்டின் பிரச்சாரத்தைப் பாதிக்கும் ஒரு முக்கிய காரணியாக உள்ளது என்றும் ரைட் கூறுகிறார்.

"உங்களுக்கு கிடைக்கக்கூடிய 7 முதல் 10 சதவீத வாக்குகளை வேறு ஒருவர் பிரிப்பது பிராட்ஃபோர்ட் பிரச்சாரத்திற்கு மிகவும் மனச்சோர்வளிக்கும் ஒரு விஷயம். ஜான் டோரி (John Tory) விலகியபோது பிராட்ஃபோர்ட் மேயருக்கு நிகராக இருந்தார், ஆனால் கிறிஸ் அலெக்சாண்டர் உள்ளே நுழைந்த பிறகு நிலைமை மாறிவிட்டது".

"எதிர்க்கட்சிகளின் தரப்பில் அதிக ஆட்கள் களமிறங்கும்போது வாக்குகள் சிதறடிக்கப்படுகின்றன, இது வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்து வருவதற்கான தூண்டுதலையும் குறைக்கிறது".

நகராட்சி தேர்தல் அக்டோபர் 26 ஆம் திகதி நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. வாக்காளர்கள் தங்களின் வாக்கு அட்டைகளை அடுத்த சில நாட்களில் அஞ்சல் மூலம் பெறுவார்கள். டொராண்டோவிற்கான முன்கூட்டிய வாக்களிப்பு அக்டோபர் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் அக்டோபர் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும்

# சௌ மேலும் 1,000 இலவச Toronto Attraction Passes வழங்கத் திட்டம்



குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு அருங்காட்சியகங்களுக்கான இலவச சேர்க்கை மற்றும் நூலகத் திட்டங்களை விரிவுபடுத்த மேயர் சௌ அளித்த வாக்குறுதி குறித்து மெலிசா டக்கர் அறிக்கை அளிக்கிறார்.

ரொறன்ரோ மாநகரம் முழுவதிலும் உள்ள குடும்பங்களுக்குக் கிடைக்கும் "ரொறன்ரோ பொது நூலக அருங்காட்சியக ஈர்ப்பு பாஸ்களின்" எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாக ரொறன்ரோ மேயர் ஆலிவியா சௌ அறிவித்துள்ளார்.

சனிக்கிழமை காலையில் வெளியிட்ட தேர்தல் பிரச்சார அறிக்கையில், ரொறன்ரோவாசிகளுக்கு கூடுதலாக 1,000 குடும்ப பாஸ்கள் கிடைக்கப் பெறும் என்று சௌ தெரிவித்தார்.

ரொறன்ரோ பொது நூலக பாஸ் திட்டம் முதன்முதலில் 2007 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது "ஆர்ட் கேலரி ஆஃப் ஒன்டாரியோ", "அகா கான் அருங்காட்சியகம்", "ரொறன்ரோ விலங்கியல் பூங்கா" மற்றும் "ராயல் ஒன்டாரியோ அருங்காட்சியகம்" உட்பட நகரம் முழுவதும் உள்ள கலாச்சார மையங்கள் மற்றும் அருங்காட்சியகங்களைப் பார்வையிட குடியிருப்பாளர்களை அனுமதிக்கிறது.

"ஒரு குடும்பத்தை அருங்காட்சியகத்திற்கு அழைத்துச் செல்ல நுழைவுக் கட்டணமாக $100 டாலருக்கு மேல் செலவாகும். இது மிகவும் விலையுயர்ந்த ஒன்றாகும்.

ரொறன்ரோ வழங்கும் வசதிகளை குடும்பங்கள் இலவசமாகப் பயன்படுத்திக் கொள்வதை நான் மிகவும் எளிதாக்குவேன்," என்று சௌ தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

ரொறன்ரோ மேயர் தேர்தல் பிரச்சாரம் தொடர்ந்து நடைபெற்று வரும் வேளையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# இந்தியச் செய்திகள்



BEHIND ME MEDIA

## பெண்களை இழிவாகவும் அவதூறாகவும் பேசுபவர்களுக்கு மக்கள் வாக்களித்து ஆதரவளிக்கக் கூடாது - முதல்வர் விஜய்



பெண்களை இழிவாகவும் அவதூறாகவும் பேசுபவர்களுக்கு மக்கள் வாக்களித்து ஆதரவளிக்கக் கூடாது என்று தாராபுரம் தேர்தல் பிரச்சாரத்தில் முதல்வர் விஜய் பேசினார்.

தாராபுரம் நகரின் மையப் பகுதியில் திரண்டிருந்த மக்களிடையே அவர் பேசியதாவது: திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு வாக்களிப்பது என்பது, பெண்களை அவதூறாகப் பேசுபவர்களை ஆதரிப்பதற்குச் சமமாகும். நமது வீட்டு தாய்மார்களையும், சகோதரிகளையும் தரக்குறைவாக பேசுபவர்களை எந்தக் காலத்திலும் மன்னிக்கக் கூடாது.

தேர்தல் ஆதாயத்துக்காக மட்டும் நான் இதை கூறவில்லை. அண்மையில் தாராபுரத்துக்கு வந்த திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், அவரது மகன் ஆகியோர் பேசிய பேச்சுகள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. சகோதரி சத்யபாமா குறித்து அவர்கள் பேசிய வார்த்தைகள் காது கொடுத்து கேட்க முடியாத அளவுக்கு மிகவும் மோசமாக உள்ளன.

என்னைப் பற்றி யார் என்ன விமர்சனம் செய்தாலும் அதை பொறுத்துக் கொள்வேன். ஆனால், நம் வீட்டுப் பெண்களையோ அல்லது நம்ம வீட்டில் உள்ள அம்மாவையோ, சகோதரிகளையோ இழிவாகப் பேசினால் நிச்சயம் சும்மா இருக்க மாட்டேன். திமுகவினரின் செயல்பாடுகள் இப்படித்தான் உள்ளன. இந்த இடைத்தேர்தலில் அவர்களுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும். இவ்வாறு முதல்வர் பேசினார்.

## மருத்துவர்களுக்கு ஷிப்ட் முறை கொண்டுவர வலியுறுத்தல்



தூத்துக்குடி ஏரல் அரசு மருத்துவமனையில் நள்ளிரவில் ஆய்வு செய்த ஸ்ரீவைகுண்டம் எம்எல்ஏ சரவணன், ஓய்வில் இருந்த மருத்துவரிடம், 24 மணி நேர பணியில் மருத்துவர் இல்லாமல் இருந்தால் நோயாளிகளுக்கு எப்படி சிகிச்சை அளிக்க முடியும் என்று கேள்வி எழுப்பியதற்கு அரசு மருத்துவர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

அரசு மருத்துவர்கள் மற்றும் பட்டமேற்படிப்பு மாணவர்கள் சங்கத்தினர் வெளியிட்ட செய்திக்குறிப்பில், “மருத்துவ சேவைகள் இயக்குநரகத்தின் (டிஎம்எஸ்) கீழ் உள்ள அரசு மருத்துவமனைகளில் புதிய பணியிடங்களை உருவாக்காமல், மருத்துவர்களை மாற்று நிரவல் செய்யும் வகையில் அரசாணை 113 வெளியிடப் பட்டுள்ளது. இதனால், 70 சதவீத அரசு மருத்துவமனைகளில், அனுமதிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்கள் குறைக்கப்பட்டுள்ளன. நோயாளிகளின் எண்ணிக்கை, சிறப்பு சேவைகளின் அடிப்படையில் புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும் என சுகாதாரத் துறை அமைச்சர் உறுதியளித்தும் நிறைவேற்றவில்லை. தமிழக முதல்வர் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சர் இதில் உடனடியாகத் தலையிட்டு அரசாணை 113-ல் உள்ள குறைபாடுகளைச் சரிசெய்ய வேண்டும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் பதக்க எண்ணிக்கை குறைந்தது ஏன்?



ஆசிய விளையாட்டுப் போட்டிகள் முடிந்துள்ள நிலையில் கடந்த முறையை (2023 ஹாங்சோ விளையாட்டுப் போட்டி) விட குறைந்த அளவிலான பதக்கங்களை இந்திய வீரர், வீராங்கனைகள் கைப்பற்றியுள்ளனர். பதக்க எண்ணிக்கை குறைந்தது ஏன் என்பது தொடர்பாக விளையாட்டு விமர்சகர்கள் கேள்விக் கணைகளை எழுப்பியுள்ளனர். ஆசிய விளையாட்டுப் போட்டியின் பதக்கப் பட்டியலில் இந்தியா 4-வது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டாலும், இம்முறை 85 பதக்கங்களை (21 தங்கம், 27 வெள்ளி, 37 வெண்கலம்) மட்டுமே வென்றுள்ளது. இது கடந்த முறை வென்ற 106 பதக்கங்களை விட 21 பதக்கங்கள் குறைவாகும். குறிப்பாக 7 தங்கப் பதக்கங்களை இந்திய வீரர், வீராங்கனைகள் குறைவாக வென்றுள்ளனர்.

இம்முறை துப்பாக்கிச் சுடுதல் மற்றும் தடகளப் போட்டிகளில் எதிர்பார்த்த அளவுக்கு பதக்கங்கள் வரவில்லை என்பதே உண்மை. துப்பாக்கிச் சுடுதலில் கடந்த 2023-ல் 7 தங்கம், 9 வெள்ளி மற்றும் 6 வெண்கலப் பதக்கங்களை(22 பதக்கம்) வென்று அசத்திய நிலையில், இம்முறை 15 பதக்கங்களை (3 தங்கம், 8 வெள்ளி, 4 வெண்கலம்) மட்டுமே கைப்பற்றியது. 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் இந்திய வீராங்கனைகள் பதக்கம் ஏதுமின்றி வெளியேறிய நிலையில், இருமுறை ஒலிம்பிக் பதக்கம் வென்ற மனு பாகர் பதக்கம் வெல்லாமல் ஏமாற்றினார். 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு அணிப் பிரிவில் சுருச்சி சிங், கமல்ஜீத் ஆகியோர் அடங்கிய ஜோடி மட்டுமே தங்கம் வென்றது.

## இந்தியாவிடம் சுமார் 190 அணு குண்டுகள் இருக்கக்கூடும்?



‘புல்லடின் ஆ∴ப் தி அடாமிக் சயின்டிஸ்ட்ஸ்’ சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: நீண்ட தூர ஏவுகணைகளுடன் இந்தியாவின் தற்காப்பு திறன் மேம்பட்டுள்ளது. இந்தியாவிடம் சுமார் 190 அணு குண்டுகள் இருக்கக்கூடும் என தெரியவந்துள்ளது. இருப்பினும், அணு ஆயுதங்கள் இருப்பது மட்டுமே போதுமானதல்ல் எதிரியின் இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் திறன் கொண்ட ஏவுகணை அமைப்புகளும் அவசியமாகும். அந்த வகையில், இந்தியா சக்திவாய்ந்த அணுகுண்டுகள் மற்றும் ஹைட்ரஜன் குண்டுகளைக் கொண்டிருப்பதுடன், எதிரி நாட்டுக்குப் பதிலடி கொடுக்கும் நீண்டதூர ஏவுகணை அமைப்புகளையும் கொண்டுள்ளது.

இந்தியா, முதலில் அணு ஆயுதத்தைப் பயன்படுத்தக் கூடாது என்ற கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றி வருகிறது. அதே வேளையில், அணு ஆயுதங்களை செலுத்தும் அமைப்புகளைத் தொடர்ந்து நவீனப்படுத்தி வருகிறது. தரை, வான், கடல் வழியே தாக்கும் முழுமையான ‘நியூக்ளியர் ட்ரையாட்’ கட்டமைப்பை இயக்கி வருகிறது. அணு ஆயுதங்களில் ரகசியம் காக்கும் இந்தியா தன்னுடைய உத்திசார் ஆயுதங்களின் முழுமையான திறன், விரிவாக்க முறைகள், அவற்றின் உண்மையான தாக்குதல் எல்லை ஆகியவற்றை ஒருபோதும் பகிரங்கமாக வெளியிடுவதில்லை. எனவே, பொதுவெளியில் அறியப்படும் தரவுகள் முழுமையான திறனைக் குறிப்பவை அல்ல. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




## வரலாற்றுச் சாதனை படைத்தார் பிரித்தானிய சிறுமி

பிரித்தானியாவைச் சேர்ந்த சதுரங்க மேதை சிறுமி ஒருவர், பெண்கள் கிராண்ட்மாஸ்டர் பட்டத்தை வென்ற வரலாற்றிலேயே மிக இளம் வயது வீராங்கனை என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

வடமேற்கு லண்டனைச் சேர்ந்த இந்திய வம்சாவளியான 11 வயதுடைய போதனா சிவானந்தன் என்பவரே மிக இளவயதில் கிராண்ட்மாஸ்டர் பட்டத்தை வென்றவர் ஆவார்.

உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் நடைபெற்ற 46 ஆவது சதுரங்க ஒலிம்பியாட் போட்டியில் இங்கிலாந்தை பிரதிநிதித்துவப்படுத்தி, தனது மூன்றாவது மற்றும் இறுதி பெண்கள் கிராண்ட் மாஸ்டர் (WGM) தகுதியைப் பெற்றார்.

இது ஒரு சான்றளிக்கப்பட்ட பட்டத்துக்குரிய நிலை செயல்திறனாகும் என சர்வதேச சதுரங்க சம்மேளனம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த சாதனையையிட்டு பெரு மகிழ்ச்சி அடைவதாக சர்வதேச சதுரங்க சம்மேளனத்திடம் தெரிவித்த போதனா சிவானந்தன், “தொடர்ந்து வரலாறு படைக்க” விரும்புவதாகவும் கூறினார்.

ஏற்கனவே, பிரித்தானியாவின் மிக இளவயது மகளிர் சதுரங்க சம்பியனாகவும், எந்தவொரு விளையாட்டிலும் சர்வதேச அளவில் இங்கிலாந்தைப் பிரதிநிதித்துவப படுத்திய மிக இளவயது நபராகவும் ஆகியுள்ள இந்தப் பாடசாலை மாணவியின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியில் இது சமீபத்திய மைல்கல் ஆகும்.

ஹரோவைச் சேர்ந்த போதனா சிவானந்தன், இங்கிலாந்தின் முதன்மை வீரருக்கு ஒதுக்கப்பட்ட இடமான முதலாவது சதுரங்க பலகையில் அனைத்து 11 சுற்றுகளிலும் விளையாடி, எட்டு புள்ளிகளுடன் போட்டியை நிறைவு செய்தார்.

WGM பட்டத்திற்குத் தேவையான 2300 மதிப்பீட்டு வரம்பை, தனது மூன்றாவது மற்றும் இறுதி தகுதியைப் பெறுவதற்கு முன்பே அவர் கடந்திருந்தார்.

வரலாறு படைப்பது குறித்து ஞாயிற்றுக்கிழமை FIDE பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில்,

“இதைச் செய்வதில் எனக்கு மகிழ்ச்சிதான், ஆனால், இத்தோடு நின்றுவிடாமல், தொடர்ந்து முன்னேறி வரலாறு படைக்கவும் விரும்புகிறேன்“ என்றார்.

ரஷ்யா மற்றும் யுக்ரெய்ன் ஆகிய இரு நாடுகளுக்காகவும் விளையாடியுள்ள கெத்தரினா லக்னோ, தனது 12ஆவது வயதில் WGM பட்டத்தை வென்று, இதற்கு முன்னர் குறைந்த வயதுக்கான சாதனையை வைத்திருந்தார். சீனாவைச் சேர்ந்த ஹூ யி்ஃபானும் தனது 12ஆவது வயதில் இப்பட்டத்தை வென்றதோடு, தனது 14ஆவது வயதில் உயர்நிலை பகிரங்க கிராண்ட்மாஸ்டர் (GM) பட்டத்தைப் பெற்ற மிக இளைய பெண்ணாகத் திகழ்கிறார்.

## இங்கிலாந்திலிருந்த அனைத்து குண்டுவீச்சு விமானங்களையும் வாஷிங்டனுக்குத் திருப்பியது அமெரிக்கா



பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வரும் பாதுகாப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து, இங்கிலாந்தில் உள்ள “ஆர்.ஏ.எ்.ப் ்.பேர்.்.போர்டு” (RAF Fairford) விமானப் படைத் தளத்திலிருந்து தனது பி-1 (B-1 Lancer) ரக குண்டுவீச்சு விமானங்கள் அனைத்தையும் அமெரிக்கா திரும்பப் பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது.

செய்தியின் முக்கிய விவரங்கள் (Key Highlights):

விமானங்கள் வாஷிங்டனுக்குத் திரும்புதல்:

சுமார் 12 பி-1 குண்டுவீச்சு விமானங்கள் இங்கிலாந்து தளத்திலிருந்து அமெரிக்காவில் உள்ள அவற்றின் தாய் தளங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

பின்னணி மற்றும் காரணம்:

கடந்த செப்டம்பர் 27 அன்று இந்த விமானப் படைத் தளத்திற்கு அருகில் மூன்று ”சந்தேகத்திற்குரிய வாகனங்கள்” காணப்பட்டது தொடர்பில் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவினர் நடத்தி வரும் விசாரணையே இந்தத் திடீர் திரும்பப் பெறல் முடிவுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

கைது நடவடிக்கைகள்:

இச்சம்பவம் தொடர்பாக முதலில் 23 முதல் 25 வயதுடைய 5 பிரித்தானிய இளைஞர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். தொடர்ந்து, லண்டனில் 25 வயதுடைய பிரித்தானிய-ஈரானிய நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஈரான் தொடர்பு பற்றிய சந்தேகங்கள்:

இச்சம்பவத்தில் ஈரானுக்குத் தொடர்பு இருப்பதற்கான ”வலுவான ஆதாரங்கள்” இருப்பதாக இங்கிலாந்து பிரதமர் ஆண்டி பர்ன்ஹாம் (Andy Burnham) தெரிவித்துள்ளார். இருப்பினும் ஈரான் அரசு இந்தக் குற்றச்சாட்டுகளைக் கடுமையாக மறுத்துள்ளது.

சர்வதேச தலைவர்களின் எதிர்வினை:

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ (Marco Rubio) இச்சம்பவத்தில் வெளிநாட்டுச் சக்தியின் கைவரிசை இருப்பதாகத் தெரிவித்துள்ளார். அதேநேரம், சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டது குறித்து அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தனது வியப்பை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க பென்டகன் விளக்கம்:

தங்களது குண்டுவீச்சு விமானங்கள் அமெரிக்க மண்ணிலிருந்தே புறப்பட்டுச் சென்று உலகின் எந்தப் பகுதியிலும் எந்நேரத்திலும் தாக்குதல் நடத்தும் திறன் கொண்டவை என்பதால், இந்த நடவடிக்கை மூலம் தங்களின் இராணுவத் திறன் பாதிக்கப்படாது என அமெரிக்கப் பென்டகன் சுட்டிக்காட்டியுள்ளது.

## 3 விஞ்ஞானிகளுக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு

அமெரிக்கா மற்றும் ஜெர்மனியை சேர்ந்த 3 விஞ்ஞானிகளுக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு பகிர்ந்து அளிக்கப்பட்டு உள்ளது.

அமெரிக்காவை சேர்ந்த கார்ல் டீசெரோத் (54) மற்றும் ஜெர்மனியை சேர்ந்த பீட்டர் ஹெகேமன் (71), ஜார்ஜ் நாகல் (73) ஆகியோருக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு பகிர்ந்து அளிக்கப்பட்டு உள்ளது.

மனித மூளையில் கோடிக்கணக்கான நியூரான்கள் உள்ளன. இவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்வது விஞ்ஞானிகளுக்கு பெரும் சவாலாக இருந்தது. கடந்த 2005-ம் ஆண்டில் ஆப்டோஜெனடிக்ஸ் என்ற தொழில்நுட்பத்தை விஞ்ஞானிகள் கார்ல் டீசெரோத், பீட்டர் ஹெகேமன், ஜார்ஜ் நாகல் ஆகியோர் கண்டுபிடித்தனர்.

ஆப்டோஜெனடிக்ஸ் தொழில்நுட்பம் மூலம் பார்வையற்றோருக்கு பார்வை கிடைக்க தீவிர ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. பார்க்கின்சன், கை-கால் வலிப்பு, அல்சைமர், மனச்சோர்வு உள்ளிட்ட நரம்பியல் சார்ந்த நோய்களை இந்த தொழில்நுட்பம் மூலமும் குணப்படுத்தவும் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

கடந்த 2005-ம் ஆண்டில் அமெரிக்க விஞ்ஞானி கார்ல் டீசெரோத் முதல்முறையாக ஆப்டோஜெனடிக்ஸ் தொழில்நுட்பம் குறித்து விளக்கம் அளித்தார்.

ஒற்றை செல் பாசியில் காணப்படும் ஒளியை உணரும் திறன் கொண்ட சேனல்ரோடாப்சின் என்ற புரதத்தை அவர் பிரித்தெடுத்தார். மரபணு பொறியியல்

மூலம் அந்த புரதத்தை எலியின் மூளையில் செலுத்தி மூளை நரம்புகளை கட்டுப்படுத்த முடியும் என்பதை நிரூபித்தார். இதேமுறையில் மனிதர்களின் நரம்பு செல்களை கட்டுப்படுத்த முடியும் என்பதையும் அவர் நிரூபித்தார்.

ஜெர்மனியை சேர்ந்த பீட்டர் ஹெகேமன், ஜார்ஜ் நாகல் ஆகியோரும் ஆப்டோஜெனடிக்ஸ் முன்னோடிகளாக விளங்குகின்றனர்.

மூன்று விஞ்ஞானிகளும் வெவ்வேறு பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் சூழலில் ஆப்டோஜெனடிக்ஸதொழில்நுட்ப வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பை வழங்கியிருப்பதால் மூவருக்கும் நோபல் பரிசு பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறது.

வரும் டிசம்பர் மாதம் சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் நோபல் பரிசுகள் வழங்கப்படும். அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் நார்வே தலைநகர் ஓஸ்லோவில் வழங்கப்படும். 24 காரட் தங்கத்துடன்கூடிய பதக்கம், பட்டயம் மற்றும் ரூ. 11.44 கோடி பரிசுத் தொகை ஆகியவையும் அளிக்கப்படும்.






BEHIND ME MEDIA

# பசியைக் கட்டுப்படுத்தி க்ளூாகோஸ் உறிஞ்சப்படுவதைத் தடுக்கும் ஆரோக்கியமான உணவுகள்



நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரத்தச் சர்க்கரை அளவை கட்டுக்குள் வைக்க அதிக புரதச்சத்து நிறைந்த உணவுகள் தேவை. பஜ்ஜி, சமோசா, பக்கோடா மற்றும் பிஸ்கட்டுகளை உட்கொள்வதால் சர்க்கரை அளவு அதிகமாகும். அவைகளில் அதிக கார்போஹைட்ரேட் இருப்பதே காரணமாகிறது.

கார்போஹைட்ரேட் நிறைந்த உணவுகளைத் தவிர்த்து புரதம் நிறைந்த சிற்றுண்டிகள் உண்ணும் போது அடிக்கடி பசி ஏற்படுவது தவிர்க்கப்படும். மேலும் அடிக்கடி சாப்பிட வேண்டும் என்ற உணர்வு தவிர்க்கப்படும். புரதம் நிறைந்த உணவை உண்ணுவதால் அவை ஜீரணமாவதற்கு நேரம் எடுக்கும் இதனால் க்ளூாகோஸ் உறிஞ்சப் படுவது தடுக்கப்படுகிறது. புரதம் வயிறு நிரம்பிய உணர்வைத் ஏற்படுத்துவதோடு மெட்டபாலிசத்தையும் மேம்படுத்துகிறது.

நீரிழிவு நோயாளிகளுக்கு புரதம் ஏன் சிறந்தது?

உடலில் க்ளூாகோஸ் அளவை கட்டுப்படுத்தும் பண்பு புரதத்திற்கு உள்ளது. மெதுவாக புரதம் ஜீரணமாவதால் உங்களுக்கு நல்ல சக்தியைத் தருகிறது.

அதிகம் உண்ணும் பழக்கத்தைக் தடுக்கிறது.

தசைகளுக்கு நல்ல ஆரோக்கியத்தை அளிக்கிறது.

உங்கள் சர்க்கரையைக் கட்டுக்குள் வைக்கும் பத்து உணவுகள்

வறுத்த தாமரை விதை மற்றும் வேர்க்கடலை

மகானா என்று அழைக்கப்படும் தாமரை விதைகளில் குறைந்த க்ளைசீமிக் குறியீடு மற்றும் குறைந்த கலோரிகள் உள்ளது. அதோடு கூட வேர்க்கடலயையும் ஒரு கைப்பிடி சிறிது நெய்யில் வறுத்து சாப்பிட சுவையாக இருக்கும். உருளைக்கிழங்கு வறுவலைவிட இது சத்தானது. தாவரப் புரதம் நிறைந்தது. இதோடு கருப்பு உப்பு மற்றும் பொடி செய்த மிளகையும் சேர்க்கலாம். 7-8 கிராம் வரை புரதம் இதில் உள்ளது.

முளைகட்டிய பச்சைப் பயறு மற்றும் கருப்பு கொண்டைக்கடலை

முளைகட்டி வேகவைத்த பச்சைப் பயறு மற்றும் கருப்பு கொண்டைக் கடலையோடு சிறிதாக அறிந்த வெள்ளரிக்காய், தக்காளி பச்சை மிளகாய் மற்றும் எலுமிச்சை சேர்த்து உண்ணலாம். இது அதிக நார்சத்து நினைத்ததால் மெதுவாக ஜீரணமாகும்.

முளைகட்டிய பயறு மற்றும் முளைகட்டிய கருப்புக் கடலையை சிறிது வேக வைத்தால் போதுமானது.

பன்னீர் மற்றும் தோ.்.பு

ஊட்டச்சத்துக்கள் மற்றும் அதிக புரதம் நிறைந்த தோ.்.பு மற்றும் பன்னீர் துண்டுகளில் சிறிது தயிர், மஞ்சள் பொடி, சீரகம் மற்றும் ஓமம் சேர்த்து வறுத்து உட்கொள்ளலாம். இது 12-15 கிராம் வரைபுரதம் நிறைந்தது. பசு மாட்டுப் பாலில் இருந்து தயாரித்த பன்னீரை பயன்படுத்துவது நல்லது.

வேகவைத்த முட்டை

புரதமும் அமினோ அமிலமும் நிறைந்தது. வெங்காயம், தக்காளி, மல்லித்தழை ஆகியவற்றையும் முட்டையோடு சேர்த்து உண்ணலாம், 12-14 கிராம் வரை புரதம் உள்ளது.

வறுத்த கருப்பு கொண்டைக்கடலை

இது தாவரப் புரதமும் நார்சத்தும் நிரம்பிது இது ரத்தச் சர்க்கரையைக் கட்டுக்குள் வைக்கும்

வறுத்த கடலை மாவில் சீரக பொடி, புதினா மற்றும் எலுமிச்சை ஜூஸ் சேர்த்து தயாரிக்கப்படும் பானம் பசியைக் கட்டுக்குள் வைக்கும். வயிறு நிரம்பிய உணர்வை ஏற்படுத்தும். 8-10 கிராம் வர புரதம் நிறைந்தது.

பாதாம், வால்நட், பூசணி விதைகள், ஆளி விதைகள் போன்றவற்றில் புரதம், ஒமேகா 3 கொழுப்பு அமிலம் மற்றும் நார்சத்தும் நிறைந்துள்ளது. 6-8 கிராம் புரதம் கிடைக்கும்.

நீரிழிவு பாதிப்பு உள்ளவர்கள் மேற்கூறிய உணவுகளை உட்கொள்ள அவர்கள் சர்க்கரை கட்டுக்குள் இருக்கும்.

# கண்ணுக்கு கீழே வீக்கம், கருவளையமா?

பெண்களுக்கு கண்ணுக்கு கீழே ஒரு “பேக்'' வந்தாலே கவலை தொற்றிக் கொள்ளும். ஒருவரின் அடையாளம் முகம் என்றால் இந்த முகத்துக்கு அழகு தருவது கண்கள் தான்.

பெண்களுக்கு கீழே கருவளையம் வருவதும் தசைகள் வீங்கி ஒரு பை போல கண்களுக்கு அடியில் ஏற்படுவதும், அழகை மட்டும் அல்ல ஆரோக்கியத்தையும் கெடுக்கும் அடையாளம்.

இதற்கு காரணம் என்ன?

எப்படி இதையெல்லாம் தவிர்ப்பது?

அதற்குரிய வழிகளை பார்ப்போம்.

இதற்குரிய காரணங்கள்:



நமது கண்களுக்குக் கீழே இருக்கும் சருமம் மிகமிருதுவானது. நம் முகத்தில் மிக அதிகமான இரத்த குழாய்கள் பரவிக் கிடக்கின்றன. ரத்த ஓட்டத்தில் நிகழும் சின்ன மாற்றம் கூட நம் முகத்தில் எங்கோ ஓரிடத்தில் வீங்கச் செய்து விடும். அப்படி கண்ணுக்கு கீழே பைபோல பிதுக்கம் ஏற்படுவதற்கும், கருவளையங்கள் ஏற்படுவதற்கும் பல காரணங்கள் இருக்கலாம்.

முதுமையின் காரணமாக கண்களுக்கு அடியில் வீங்கி பை போல ஆகலாம். முதுமையில் உடலில் இருக்கும் கொழுப்பு குறையத் தொடங்கும். கண்ணுக்கு கீழேயும் இது நிகழும். அப்போது அங்கு அதிக ரத்த ஓட்டம் பாயும். இதனால் கண்கள் வீங்குகின்றன.

சைனஸ் போன்ற பிரச்சினைகளாலும் கண்களுக்கு அடியில் வீங்கும். வைரஸ் காய்ச்சல் மற்றும் ஜலதோஷம், மூக்கடைப்பு ஏற்படும் போது கண்களுக்கு அடியில் வீக்கம் வரும். கருவளையம் ஏற்படும்.

இரவில் சரியாக தூங்கவில்லை என்றால், கண்களை சுற்றிய ரத்தக் குழாய்கள் புடைத்துக் கொண்டு தெரியும், அதனால் வீக்கம் ஏற்படும்.

வெயிலில் செல்வதும் உடலுக்குத் தேவைதான். அளவுக்கு அதிகமாக வெயிலில் திரிந்தால் அதுவே கண்களை சுற்றி கருவளையங்களை ஏற்படுத்திவிடுகிறது.

நாம் சாப்பிடும் பழங்கள் காய்கறிகளில் இருந்தே நம் சருமத்தை பராமரிக்க தேவையான ஊட்டச்சத்துக்கள் பெறப்படுகின்றன. ஆரோக்கியமான இயற்கை உணவுகளை தவிர்த்தாலும் கண்களுக்கு அடியில் பைகள் உருவாகும்.

உணவில் அதிகம் உப்பு சேர்த்துக் கொள்வதும், ரத்த நாளங்கள் அதிக திரவத்தை உறிஞ்சி வைத்திருக்க காரணம் ஆகும். இந்த அதிகப்படி திரவமே கண்களைப் சுற்றி நீராக கோர்த்துக் கொள்கிறது.

தவறான அழகு சாதன பொருட்களை பயன்படுத்துவதும் இந்த பிரச்சினைக்கு காரணமாக இருக்கலாம். புதிதாக எதையாவது பயன்படுத்தியதும் இந்த பிரச்சினை எழுந்தால், உடனடியாக சரும மருத்துவரை அணுக வேண்டும். அந்த பியூட்டி பொருட்களில் இருக்கும் எந்த வேதிப் பொருள், உங்கள் சருமத்தை இப்படி ஆக்கியது என மருத்துவரிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம். நீண்ட நேரம் மேக்கப் போட்டு இருந்தாலும் கருவளையம் கண்களுக்கு அடியில் பைகளை ஏற்படுத்தும். இரவில் தூங்கப் போவதற்கு முன்பாக மேக்கப்பை சுத்தமாக கழுவி விட வேண்டும்.

வெள்ளரிக்காய்க்கு வீக்கத்தை குறைக்கும் திறன் உண்டு.

வெள்ளரியில் இருந்து இரண்டு பெரிய துண்டுகளை வட்டமாக வெட்டி கண்களை மூடிக்கொண்டு கண்களிலும், கண்களுக்கு அடியிலும் படுமாறு வைக்க வேண்டும் இது கண்களை சுற்றிய இரத்த ஓட்டத்தை சீராக்கி புத்துணர்வு பெற வைக்கும்.

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் டீஸ்பூனை ஃபிரிட்ஜில் உள்ள ஃப்ரீஸரில் வைக்கவும். நன்கு ஜில்லென ஆனதும் இதை எடுத்தவும். கண்ணுக்கு கீழே எங்கெல்லாம் வீக்கம் இருக்கிறதோ அந்த இடங்களில் இந்த ஸ்பூனால் மிருதுவாக அழுத்தி ஒத்தடம் கொடுக்கவும். இதேபோல திரும்ப திரும்ப ஃபிரிட்ஜில் வைத்து ஒத்தடம் கொடுத்தால் கண்களைச் சுற்றியுள்ள வீக்கம் காணாமல் போகும்.

மிகவும் களைப்பாக இருந்தாலும், ஏதோ காரணத்துக்காக உணர்ச்சி வசப்பட்டு அழ நேரிட்டாலோ, கண்களை சுற்றி பை போல வீங்கிவிடும். இதைச் சரி செய்ய தூக்கமே சிறந்த வழி. 7 முதல் 8 மணி நேரம் நிம்மதியாக தூங்க முயற்சி செய்யுங்கள். மறு நாள் பார்த்தால் வீக்கம், கருவளையம் மறைந்திடும்.

# Toronto மக்கள் பாதுகாப்பற்ற உணர்வை வெளிப்படுத்துகின்றனர்: இந்த பிரச்சினை நகரத்தின் தேர்தல் பந்தயத்தை எவ்வாறு வடிவமைக்கிறது

BEHIND ME MEDIA

## மேயர் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், குற்றங்கள் மற்றும் பாதுகாப்பு குறித்து முன்னணி வேட்பாளர்கள் வெவ்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றனர்

வாக்காளர்கள் நினைப்பதை விட டொராண்டோ பாதுகாப்பானது. ஆனால் அது ஏன் அப்படி உணரப்படவில்லை?

தரவுகளின்படி டொராண்டோ பாதுகாப்பான நகரமாக மாறி வருகிறது, ஆனால் குடியிருப்பாளர்கள் அப்படி உணரவில்லை என பொதுக் கருத்துக்கணிப்புகள் காட்டுகின்றன. நகராட்சி தேர்தலுக்கு முன்னதாக மக்களின் பாதுகாப்பு குறித்த கவலைகளை உந்தித் தள்ளும் காரணங்கள் குறித்து CBC இன் டேல் மனுச்டாக் ஆராய்கிறார்.

கடந்த ஆண்டில் பொலிஸாரின் தரவுகளின்படி பாரிய குற்றங்கள் குறைந்து, நகரம் பரவலாக பாதுகாப்பானதாக மாறி வந்தபோதிலும், டொராண்டோவில் அதிர்ச்சியளிக்கும் சில முக்கிய குற்றச் சம்பவங்கள் தலைப்புச் செய்திகளாக இடம்பெற்றன.

இப்போது, அக்டோபர் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன்னதாக, பொது பாதுகாப்பு என்பது வாக்காளர்களின் ஒரு முக்கிய கருப்பொருளாக உருவெடுத்துள்ளது.

புள்ளிவிவரப்படி டொராண்டோ பாதுகாப்பானது என்றாலும், வாக்களிக்கும் நாளுக்கு முன்னதாக அவர்கள் இன்னும் இந்த விவகாரம் குறித்து கவலையோடு இருக்கிறார்கள் என்பதையே பொதுக் கருத்துக்கணிப்புகள் காட்டுகின்றன.

ஜூலை மாதம் “சல்சா ஆன் செயிண்ட் கிளேர்“ (Salsa on St. Clair) வீதி விழாவில் துப்பாக்கிச் சூடு, மார்ச் மற்றும் ஜூலை மாதங்களில் டவுன்டவுன் டொராண்டோவில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், மற்றும் வாகனங்கள் திருடப்படுவதை காட்டும் தொடர்ச்சியான வீடியோக்களை பொலிஸார் வெளியிட்டமை ஆகியவை இடம்பெற்றன.

மெயின்ஸ்ட்ரீட் ரிசர்ச் (Mainstreet Research) நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி குய்டோ மக்கி கூறுகையில், மக்கள் சம்பவங்களை தங்கள் சாதனங்களில் பதிவு செய்து சமூக ஊடகங்களில் பதிவேற்றுவது வன்முறை பற்றிய பய உணர்வை மேலும் மோசமாக்குகிறது என்றார்.

”ரயிலில் ஒரு சம்பவம் மட்டுமே நடந்திருக்கலாம், ஆனால் அதை நீங்கள் 18 வெவ்வேறு கோணங்களில் பார்க்க நேரிடும்” என்று அவர் கூறினார்.

அவரது நிறுவனம் இந்த மாத தொடக்கத்தில் வெளியிட்ட ஒரு கருத்துக் கணிப்பில், தேர்தலில் குற்றங்கள் மற்றும் பாதுகாப்பு என்பது மிகவும் முக்கியமான விஷயம் என்று கணக்கெடுப்பில் பங்கேற்ற 52 சதவீதமான மக்கள் உணர்ந்துள்ளனர். பதிலளித்தவர்களில் கிட்டத்தட்ட 70 சதவீதத்தினர் இந்த விவகாரம் குறித்து மிகவும் கவலையடைவதாக தெரிவித்துள்ளனர்.

### பெரும்பாலான புள்ளிவிவரங்கள் குற்றங்கள் குறைந்துள்ளதைக் காட்டுகின்றன

டொராண்டோ பொலிஸாரின் தரவுகளின்படி, பெரும்பாலான பாதுகாப்பு குறிகாட்டிகள் சரியான திசையை நோக்கியே நகர்கின்றன.

ஒலிவியா செள (Olivia Chow) மேயராகப் பதவியேற்ற முதலாவது முழு ஆண்டான 2024 இல், மொத்த குற்றச் சம்பவங்கள் ஆண்டுக்கு ஆண்டு ஒப்பீட்டில் 3.6 சதவீதம் குறைந்தன - வாகனத் திருட்டுகள் 23 சதவீதமும், வீடுகளை உடைத்துத் திருடும் சம்பவங்கள் 10 சதவீதமும் குறைந்ததே இதற்கு முக்கிய காரணமாகும். ஏனைய 5 பிரிவுகளில் குற்றங்கள் அதிகரித்திருந்தன.

2025 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை, பொலிஸ் தரவுகளின்படி, தாக்குதல் சம்பவங்கள் மூன்று சதவீதமும், வாகனத் திருட்டுகள் 23 சதவீதமும், வீடுகளை உடைத்துத் திருடும் சம்பவங்கள் 11 சதவீதமும் குறைந்துள்ளன.

பாலியல் ரீதியான குற்றங்கள் சுமார் 11 சதவீதம் குறைந்தன, கொலைக் குற்றங்கள் கிட்டத்தட்ட 50 சதவீதம் குறைந்தன - அதிக அளவிலான திருட்டுகள் (Theft Over) மட்டுமே சற்று அதிகரித்த ஒரே பிரிவாகும்.

### டொராண்டோவின் குற்றம் மற்றும் பாதுகாப்பு குறித்த முரண்பட்ட கருத்துக்கள்

டொராண்டோ பல்கலைக்கழகத்தின் முன்னாள் இதழியல் பேராசிரியரான ஜெ∴ப்ரி டுவோர்கின் கூறுகையில், சமூக ஊடகங்களும் ஊடகங்களின் குற்றச் செய்திகளும் நகரம் எவ்வளவு பாதுகாப்பானது என்பது குறித்த பொதுமக்களின் பார்வையை திசைதிருப்புவதாக உணர்ந்ததாகத் தெரிவித்தார்.

“ஊடக நிறுவனங்கள் தங்களின் வளங்களை இழந்து வருகின்றன, இதனால் உள்ளூர் செய்திகளான வானிலை, போக்குவரத்து மற்றும் குற்றங்கள் போன்ற எளிதில் கிடைக்கக்கூடிய செய்திகளில் கவனம் செலுத்த அவை நிர்ப்பந்திக்கப்படுகின்றன” என்று அவர் ஊடீஊ நியூஸு"க்கு அளித்த பேட்டியில் கூறினார்.

“இணையம் நமக்குத் தேவையில்லாத விஷயங்களை ஊட்டுவதும், அரசியல்வாதிகள் நம்மைப் பயமுறுத்துவதும் சேர்ந்துதான் இப்போது நாம் எதிர்கொள்ளும் இந்தச் சிக்கலை உருவாக்கியுள்ளது என்று நான் நினைக்கிறேன்.”

டொராண்டோவில் வசிக்கும் ஜோன்ஸ் சாண்டியாகோவும், மக்கள் தங்களின் சொந்த அனுபவங்களை விட மற்றவர்களின் அனுபவங்கள் குறித்த அறிக்கைகளைக் கண்டு பயப்படக்கூடும் என்பதை ஒப்புக்கொண்டார்.

”மக்கள் விஷயங்கள் எப்படித் தெரிகின்றன என்பதைக் கண்டு பயப்படுகிறார்களே தவிர, உண்மையில் அதை எதிர்கொண்டு அது ஆபத்தானதா என்று பார்ப்பதில்லை” என்று அவர் கூறினார்.

### பொதுமக்களின் கவலைகளை பிராட்∴.போர்ட் சுட்டிக்காட்டுகிறார்

தற்போது பதவியில் இருக்கும் ஒலிவியா செளவின் பிரச்சாரக் குழு, கடந்த மூன்று ஆண்டுகளின் வெற்றிகளை விளம்பரப்படுத்துவதற்கும், நிலைமை மேலும் சிறப்படையும் என்று உறுதியளிப்பதற்கும் இடையில் ஒரு கவனமான பாதையைத் தேர்ந்தெடுக்கிறது.

அவரை எதிர்த்துப் போட்டியிடும் பிராட்∴.போர்ட், நகரம் போராட்டங்களைச் சந்தித்து வருவதாகவும், பின்தங்கி வருவதாகவும், அதன் திறனை எட்டத் தவறிவிட்டதாகவும் சித்தரிக்கிறார்.

“யூனியன் ஸ்டேஷனுக்கு வாருங்கள், பே வீதியில் (Bay Street) உள்ள சுரங்கப்பாதைக்கு அடியில் நடந்து செல்லுங்கள், யங் மற்றும் டண்டாஸ் சதுக்கத்தைப் (Yonge and Dundas Square) பார்வையிடுங்கள். அது அழுக்காகவும், பாதுகாப்பற்றதாகவும் இருக்கிறது” என்று அவர் சமூக ஊடகங்களில் வெளியிட்ட வீடியோ ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களின் பயத்திற்கும் டொராண்டோ பொலிஸாரின் புள்ளிவிவரங்களுக்கும் இடையிலான முரண்பாடு குறித்துக் கேட்கப்பட்டபோது, டொராண்டோ மக்கள் தொடர்ந்து பாதுகாப்பற்ற உணர்வையே எதிர்கொள்வதாக பிராட்∴.போர்ட் கூறினார்.

“சமூகப் பாதுகாப்புக் குறிகாட்டிகள் ஒட்டுமொத்தமாக கீழ்நோக்கிச் செல்லவில்லை. ஆண்டுக்கு ஆண்டு முன்னேற்றம் கண்ட சில துறைகள் இருந்தாலும், கடந்த தசாப்த கால போக்குகள் இன்னும் அதிகரித்தே காணப்படுகின்றன,” என்று அவர் சமீபத்திய பிரச்சார நிகழ்வொன்றில் கூறினார்.

“மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையிலும், பொதுப் போக்குவரத்து அமைப்பிலும், சமூக மையங்களிலும், பூங்காக்களிலும் அதை அனுபவிப்பதால் தான் பாதுகாப்பற்ற உணர்வை எதிர்கொள்கிறார்கள் என நினைக்கிறேன்... நகரின் பாதுகாப்பை மேம்படுத்த நமக்கு இன்னும் நிறைய வாய்ப்புகள் உள்ளன.”

கடந்த மூன்று ஆண்டுகளாக மேயராக இருக்கும் செள, தற்போதும் பாதுகாப்பற்ற உணர்வைக் கொண்டிருக்கும் சிலர் உள்ளனர் என்பதை ஒப்புக்கொண்ட அதே வேளையில், தனது ஆட்சிக் கால சாதனைகளை எடுத்துரைத்தார்.

“பாதுகாப்பாக உணர்வது முக்கியம்,” என்று அவர் திங்களன்று ஸ்கார்பரோவில் செய்தியாளர்களிடம் கூறினார். “ஆம், எண்கள் கீழ்நோக்கி நகர்ந்துள்ளன, கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகக் குறைந்த கொலை விகிதம் நம்மிடம் உள்ளது, ஆனால் உங்கள் கார் திருடப்பட்டிருந்தால்... நீங்கள் நிச்சயமாகப் பாதுகாப்பற்ற உணர்வையே பெறுவீர்கள்.”

‘லெஸ்லிவில் பகுதியில் ஊடீஊ நியூஸிடம் பேசிய அலெக்ஸ் பாக்கர், பாதுகாப்பு என்பது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது என்றார்.

“நகரத்தில் பல ஆபத்துகள் உள்ளன... இது அனைத்தும் பார்வையைப் பொறுத்தது,” என்று அவர் கூறினார். ”நீங்கள் யங் வீதியிலோ அல்லது குயின் வீதியிலோ நடந்து சென்றால் பிரச்சனைகளை அடிக்கடி பார்ப்பீர்கள். ஆனால் கிரீன்வுட் அல்லது ஜோன்ஸ் மற்றும் ஜெரார்ட் பகுதியில் அவ்வளவு அடிக்கடி பார்க்க மாட்டீர்கள்... எனவே நகரத்தின் பாதுகாப்பு என்பது இடத்திற்கு இடம் மாறுபடுகிறது.”

### வாகனத் திருட்டு தொடர்பாக வேட்பாளர்கள் மோதல்

செவ்வாயன்று, பிராட்∴.போர்டின் பிரச்சாரக் குழு ஒரு செய்திக்குறிப்பை வெளியிட்டது. அதில் 2026 ஆம் ஆண்டில் டொராண்டோவில் அதிகரித்துள்ள சில குற்றங்களுக்கான புள்ளிவிவரங்களை சுட்டிக்காட்டியது.

இந்த ஆண்டில் இதுவரை, பொலிஸ் தரவுகளின்படி தாக்குதல் சம்பவங்கள் சுமார் ஒரு சதவீதம் அதிகரித்துள்ளன, அதே நேரத்தில் வாகனத் திருட்டுகள் ஆறு சதவீதம் அதிகரித்துள்ளன. செப்டம்பர் மாத நிலவரப்படி, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 323 வாகனங்கள் அதிகமாக திருடப்பட்டுள்ளன.

“வெறிச்சோடிய வாகன நிறுத்துமிடத்தை நோக்கி நடந்து செல்லும் எவரிடமும் அது எப்படிப்பட்டது என்று கேட்டுப்பாருங்கள். அது வெறும் புள்ளிவிவரம் அல்ல. அது ஒரு அத்துமீறல்,” என்று பிராட்∴.போர்ட் அந்த செய்திக்குறிப்பில் எழுதியுள்ளார்.

“உங்கள் கார் என்பது நீங்கள் வேலைக்குச் செல்வதற்கும், உங்கள் குழந்தைகளை காப்பகத்திற்கு அழைத்துச் செல்வதற்கும், உங்கள் பெற்றோரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கும் பயன்படுவது. இரவில் யாரோ ஒருவர் உங்கள் சொத்துக்குள் நுழைந்து அதை எடுத்துச் சென்றுவிட்டார்கள். அதன் பிறகு காப்பீட்டு நிறுவனத்துடன் தொலைபேசியில் கழிக்கும் வாரங்கள், உங்களால் வாங்க முடியாத வாடகை கார், மற்றும் உங்கள் வீதியில் உள்ள ஒவ்வொரு ஓட்டுநருக்கும் உயரும் பிரீமியம் தொகைகள் என பல பிரச்சனைகள் வருகின்றன. இதற்கெல்லாம் மேயரின் பதில் என்னவென்றால், எண்கள் குறைந்துவிட்டதாக சொல்வதுதான். ஆனால் அவை குறையவில்லை.”

சில மணிநேரங்களுக்குப் பிறகு, செளவின் பிரச்சாரக் குழு இதற்கு பதிலடி கொடுத்தது - இந்த ஆண்டு வாகனத் திருட்டு அதிகரித்திருந்தாலும், அவர் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டதில் இருந்து வாகனத் திருட்டுகள் குறைந்துள்ளதாக சுட்டிக் காட்டியது.

“பிராட் பிராட்∴.போர்ட் டொராண்டோ நகர சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளில், வாகனத் திருட்டுகள் 157 சதவீதம் விண்ணை முட்டின. அவர் அதற்காக எதுவும் செய்யவில்லை,” என்று தற்போதைய மேயரின் பிரச்சாரக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“2023 இல் ஒலிவியா செள மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து, அவை 41 சதவீதம் குறைந்துள்ளன

BEHIND ME MEDIA

# வல்வெட்டித்துறை தீருவிலில் பன்னிருவரின் நினைவேந்தல்!









1987 ஆம் ஆண்டு அக்டோபர் 5 ஆம் நாள் வரலாற்றுச் சூழலில், தங்கள் தாய்நிலத் துக்காகத் தன்னுயிர் ஈந்த 12 வீரர்களின் நினைவாக, வல்வெட்டித்துறை தீருவில் வெளியில் நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

சுடரேற்றி, மலரஞ்சலி செலுத்தி, அமைதி வழியில் பொதுமக்கள் மற்றும் உணர் வாளர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது.





# பயணிகள் இறப்பதைத் தடுக்கவே போராடினேன் - இந்திய விமானி



புதன்கிழமை அதிகாலை துபாயில் இருந்து டெல் அவீவ் நோக்கிப் புறப்பட்ட ஃப்ளைதுபாய் நிறுவனத்தின் FZ1073 விமானம், தனது பயணத்தின் இரண்டரை மணி நேரத்தில் 17,000 அடிக்கும் மேல் திடீரெனக் கீழே இறங்கியது. விமானம் முதலில் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்களுக்கு அவசர சமிக்ஞையை அனுப்பியது. பின்னர் விமானக் கடத்தலைக் குறிக்கும் “Squawk 7500” என்ற குறியீட்டிற்கு மாறியது.

விமானத்தை “திட்டமிட்டு விபத்துக்குள்ளாக்க முயல்வதற்கு” முன்பாக, ஒரு விமானி மற்றொரு விமானியைக் கத்தியால் குத்தியதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பின்னர் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

பயணிகள் தாக்குதல் நடத்தியவரைக் கட்டுப்படுத்தியதை அடுத்து, விமானத்தில் பயணித்த இரண்டு மாற்று முதன்மை விமானிகள், உள்ளூர் நேரப்படி காலை 06:58 மணிக்கு வடமேற்கு சவூதி அரேபியாவில் உள்ள தபூக் விமான நிலையத்தில் விமானத்தைப் பாதுகாப்பாகத் தரையிறக்கினர்.

இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகுவினால் “உண்மையான வீரன்” என்று புகழப்பட்ட கெப்டன் ஸ்மித் மச்சார், தபூக்கில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அபுதாபிக்கு அழைத்து வரப்பட்டார். அங்கு அவர் சீரான உடல்நிலையுடன் இருப்பதாகக் கூறப்படுகிறது.

தாக்குதல் நடத்தியவர் ஓமன் நாட்டைச் சேர்ந்தவர் என்றும், அவர் தீவிரவாதக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டுத் தற்கொலைத் தாக்குதலுக்கு முயன்றதாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிப்பதாகவும் நெதன்யாகு ஃபாக்ஸ் நியூஸ் கூறினார்.

‘தாக்குதல் நடத்தியவர் பயணிகள் மற்றும் ஊழியர்களால் கட்டுப்படுத்தப்பட்டுக் கட்டப் பட்டதும், அவர் “என்னைக் கொன்று விடுங்கள், என்னைக் கொன்றுவிடுங்கள்” என்று கத்தியுள்ளார். எனவே அவர் தற்கொலை எண்ணத்துடன் இருந்தது தெளிவாகத் தெரிகிறது,’ என்றும் நெதன்யாகு குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் ஏதேனும் பயங்கரவாதச் செயல்பாட்டுடன் தொடர்படையதா என்பது குறித்து ஐக்கிய அரபு அமீரகம் தனது விசாரணையைத் தொடங்கியுள்ளது.

கெப்டன் ஸ்மித் மச்சாரின் அடையாளம் தெரியவந்ததிலிருந்து, இந்திய சமூக வலைத் தளங்களில் அவருக்குப் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

பிரதமர் மோடியிடம் பேசிய ஸ்மித் மச்சார், தான் 17 ஆண்டுகளாக விமானங்களை இயக்கி வருவதாகவும், “கண்களை மூடிக்கொண்டு கூட விமானத்திற்கு என்ன நடக்கிறது என்பதை என்னால் சொல்ல முடியும்” என்றும் கூறினார்.

அவரது துணிச்சல், பொறுமை மற்றும் விரைவான முடிவெடுக்கும் திறன் பல நூற்றுக்கணக்கான மக்களின் உயிரைக் காப்பாற்றியுள்ளதாகவும், முழு தேசமும் அவரைக் குறித்துப் பெருமைப் படுவதாகவும் பிரதமர் மோடி தெரிவித்தார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்தியத் தூதரகம், கெப்டன் ஸ்மித் மச்சார் நல்ல ஆரோக்கியத்துடன் நலமுற்று வருவதாகத் தெரிவித்துள்ளது. இந்தியத் தூதர் தீபக் மிட்டல், ஸ்மித்தின் தைரியத்தைக் குறித்துப் பெருமைப படுவதாகவும், அவரைச் சந்தித்ததில் மிகுந்த நிம்மதியடைவதாகவும் கூறினார்.

ஸ்மித் மச்சார் பேசுகையில், “இந்தக் காயத்தை ஒரு காயமாக நான் பார்க்கவில்லை, ஏனெனில் அது எனது மீட்சியை மேலும் கடினமாக்கும். இது மெதுவாக நகரும் ஒரு பயணம் என்றும், மீண்டு வந்து மீண்டும் முழு ஆரோக்கியத்துடனும் தகுதியுடனும் மாறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது” என்றார்.


BEHIND ME MEDIA
BEHIND ME MEDIA
யாழ்ப்பாணத்தில் உங்கள் திறமையை வெளிப்படுத்த
ஒரு புதிய வாய்ப்பு!
Now in JAFFNA
NEW OFFICE • NEW OPPORTUNITIES
SAME BIG VISION
யாழ்ப்பாணம்
JAFFNA
Behind Me International Media
நிறுவனத்தின் புதிய Jaffna Office
தற்போது திறக்கப்பட்டுள்ளது!
219, Kandy Road, Jaffna – A9 Road
Join Our Team
STRATEGY
BRAND
GROWTH
Administration Officer
Marketing Executive
Video Editors
Video Jockeys – Presenters
WE'RE LOOKING FOR
Administration Officer & Marketing Executive
Relevant work experience
Strong English communication skills
Professional & hardworking attitude
IF YOU ARE A
Video Editor or Video Jockey / Presenter
Passionate about media and content creation
Ready to showcase your talent
Eager to grow in the media industry
This is your chance!
GROW YOUR CAREER
BE PART OF A CREATIVE TEAM
MAKE AN IMPACT THROUGH MEDIA
Media
Marketing
Digital Content
Your Future Starts Here!
APPLY NOW!
Send your Resume / CV to
info@behindmemedia.com
LET'S CREATE BIGGER STORIES TOGETHER!
FROM JAFFNA TO A BIGGER TOMORROW

# பாரிஷ் மற்றும் குரோம்பி: மிஸ்ஸிசாகாவின் தேர்தலை வடிவமைக்கும் கடுமையான மறுபோட்டி

தொடர்ச்சி

மிஸ்ஸிசாகா வரலாற்று ரீதியாகவே வாக்காளர்களின் ஈடுபாட்டில் பின்தங்கியுள்ளது, 2022 முனிசிபல் தேர்தலில் வெறும் 21.84 சதவீத வாக்குப்பதிவே காணப்பட்டது. 2024 மேயர் இடைத்தேர்தலில் அந்த எண்ணிக்கை 25.7 சதவீதமாக அதிகரித்தாலும், இந்த ஆண்டு பெரிதும் எதிர்பார்க்கப்படும் இந்தப் போட்டி வாக்காளர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்குமா என்பதுதான் இப்போதைய கேள்வி.

கடும் போட்டி

இந்தப் போட்டியின் வேர்கள் 2011 ஆம் ஆண்டிலிருந்து தொடங்குகின்றன. அந்த ஆண்டு நடந்த இடைத்தேர்தலில் மிஸ்ஸிசாகாவின் 5-வது வார்டு கவுன்சில் இடத்துக்காக நடந்த தேர்தலில், கரோலின் பாரிஷை வெறும் 241 வாக்குகள் வித்தியாசத்தில் போனி குரோம்பி தோற்கடித்தார். அத்தகைய நெருக்கடியான அந்தப் போட்டி, நகர சபையில் பத்தாண்டு கால அரசியல் மோதலின் தொடக்கமாக அமைந்தது.

நகரத்தின் நீண்டகால மேயரான ஹேசல் மெக்காலியன், 2014 முனிசிபல் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று முடிவு செய்து, தனக்குப் பிறகு குரோம்பியை ஆதரித்தார். குரோம்பி மேயர் பதவியை வென்றார், அதே நேரத்தில் பாரிஷ் 5-வது வார்டில் வெற்றி பெற்றார்.

பாருங்கள்' இந்த ஆண்டு தேர்தலில் மிஸ்ஸிசாகாவின் தற்போதைய மற்றும் முன்னாள் மேயர்கள் மோதுகிறார்கள்:

மிஸ்ஸிசாகாவின் தற்போதைய மற்றும் முன்னாள் மேயருக்கு இடையேயான போர் அக்டோபர் 2 'கால அளவு 7:55 மிஸ்ஸிசாகாவின் தற்போதைய மற்றும் முன்னாள் மேயர்கள் முரண்படுகின்றனர், மேலும் அந்த அரசியல் வீழ்ச்சி அலைகளை உருவாக்குகிறது. கரோலின் பாரிஷ் மற்றும் போனி குரோம்பி ஆகியோருக்கிடையேயான அதிக ஆபத்துகள் நிறைந்த இந்த மோதலைப் பற்றி விவாதிக்க, சிபிசியின் (CBC) கிறிஸ் குளோவர் இரண்டு விருந்தினர்களுடன் பேசுகிறார். இந்தப் போட்டிக்குக் காரணம் என்ன, உள்ளூர் வாக்குப்பதிவில் இது என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைக் கேட்க இணைந்திருங்கள்.

குரோம்பி 2024 இல் ஒன்டாரியோ லிபரல் கட்சிக்குத் தலைமை தாங்குவதற்காகப் பதவியிலிருந்து விலகினார். இதனால் ஏற்பட்ட மேயர் இடைத்தேர்தலில் பாரிஷ் வெற்றி பெற்றார். தேர்தல் இரவில், குரோம்பி பாரிஷின் வெற்றிக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு அவரை "நகரத்தின் எதிர்காலத்திற்கான வலிமையான தலைவர்" என்று அழைத்தார். அந்த வீடியோ இந்தத் தேர்தலின் போது மீண்டும் இணையத்தில் பாரிஷால் பகிரப்பட்டு வருகிறது.

குரோம்பி லிபரல் கட்சிக்கு அதிகாரபூர்வ கட்சி அந்தஸ்தை மீட்டுக்கொடுத்த போதிலும், அவர் ஒரு இடத்தைக் கூட வெல்லத் தவறி, ஜனவரி மாதம் கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகினார். ஜூலை மாதம் தனது பழைய பதவிக்கான தேர்தலை அவர் அறிவித்தார். இது 15 ஆண்டுகளுக்கு முந்தைய மோதலுக்கு மீண்டும் களமமைத்துள்ளது.

தேர்தல் உத்திகள்

குரோம்பியின் அறிவிப்புக்குப் பிறகு, இருவரும் இணையத்தில் ஒருவரையொருவர் கடுமையாக விமர்சித்தனர். மிஸ்ஸிசாகாவை குரோம்பி "கைவிட்டுவிட்டதாக" பாரிஷ் குற்றம் சாட்டினார். மேலும், பாரிஷ் "தன்னுடைய மேசையில் மட்டும் அமர்ந்திருக்கும்" மேயர் என்று குரோம்பி விமர்சித்தார்.

அடுத்து இரு தரப்பினரும் வெளியிட்டுள்ள தாக்குதல் பாணியிலான இணைய வீடியோக்கள். கடந்த வாரம் சிபிசி நியூஸ் பீல் (CBC News Peel) நடத்திய மிஸ்ஸிசாகா வணிகக் குழும விவாதத்தைத் தொடர்ந்து, இரண்டு வேட்பாளர்களும் தங்கள் எதிராளிகள் தடுமாறிய தருணங்களைக் காட்டும் சிறு வீடியோக்களைப் பகிர்ந்தனர். பீல் பிராந்திய காவல்துறை நிதிப் புள்ளிவிவரங்களை பாரிஷ் தவறாகக் கூறிய போது, ஹெச்பிஓ (ர்டீழு) நிகழ்ச்சியான "கர்ப் யுவர் என்டூசியாஸம்" (Curb Your Enthusiasm) என்ற நிகழ்ச்சியின் தீம் பாடல் இசைக்கப்பட்டது. அதேபோல, சொத்துவரி குறித்த கேள்வியின்போது குரோம்பி சற்று நேரம் பதிலளிக்கத் தயங்கிய வீடியோவை பாரிஷின் தரப்பு வெளியிட்டது.

தன் எதிராளியான குரோம்பியின் முன்னாள் கணவர் பிரையன் குரோம்பியுடன் தான் நடத்திய பாட்காஸ்ட் பேட்டியை மீண்டும் ஒளிபரப்ப, டொராண்டோ வானொலி நிலையமான நியூஸ்டாக் (NewsTalk) 1010-ல் பாரிஷ் நேரத்தை விலைக்கு வாங்கினார்.

வியாழக்கிழமை இரவு நடந்த இரண்டாவது விவாதத்தில் நான்கு வேட்பாளர்களும் மீண்டும் மோதிக்கொண்டனர்.

இந்த விவாதத்தை ஃபூட் பேங்க்ஸ் மிஸ்ஸிசாகா (Food Banks Mississauga), சிட்டிநியூஸ் (ஊவைலநேறள) மற்றும் தி மெட்டாமார்போசிஸ் நெட்வொர்க் (The Metamorphosis Network) ஆகிய அமைப்புகள் நடத்தின.

அப்போது பாரி"க்கும் குரோம்பிக்கும் இடையே பல தனிப்பட்ட விமர்சனங்கள் எழுந்தன. "அந்த பொன்னிறத் தலைமுடி வெடிகுண்டு திரும்பி வருவது குறித்து எங்கள் ஊழியர்கள் பயப்படுகிறார்கள்," என்று பாரிஷ் கூறினார். அதற்கு பதிலடியாக, "சில நேரங்களில் நீங்கள் உங்கள் அலுவலகத்தை விட்டு வெளியே வந்து மக்களைச் சந்திக்க வேண்டும்" என்று குரோம்பி கூறினார். மேலும், குரோம்பி மாகாணத் தேர்தலில் வெற்றிபெறத் தவறியதை சுட்டிக்காட்டிய பாரிஷ், குரோம்பி ஒருபோதும் மாகாண முதல்வராக (premier) முடியாது என்றும் கூறினார்.

சமூக வலைத்தளங்களில் தனிப்பட்ட தாக்குதல்களும், வைரல் வீடியோக்களும் பரவினாலும், தேர்தல் விவாதங்கள் வாக்குப் பெட்டியில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தாது என்று அரசியல் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

"ட்விட்டரில் (Twitter) ஏதேனும் நடந்தால், அதை யாரும் பார்ப்பதில்லை" என்று பெஸ்கோ கூறினார்.

"அரசியல்வாதிகளின் சமூக வலைதளக் கணக்குகளை மிகச் சிலரே உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள். அப்படி உன்னிப்பாகக் கவனிப்பவர்கள், ஏற்கனவே தங்கள் மனதில் வலுவான அபிப்ராயங்களைக் கொண்டுள்ளனர், அது மாறப் போவதில்லை. பெரும்பாலும் இவை எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. ஆனால், தேர்தல் விளம்பரப் பலகைகள் அதிக மக்களால் பார்க்கப்படுகின்றன."

முன்னணி வேட்பாளர்களைத் தாண்டி ஆகஸ்ட் மாதம், லைசன் ஸ்ட்ராடஜீஸ் (Liaison Strategies) என்ற தேசிய மக்கள் கருத்து ஆய்வு நிறுவனத்தின் கருத்துக்கணிப்பு ஒன்றின்படி, உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட்டால் குரோம்பியும் பாரி"ம் தலா 26 சதவீத வாக்குகளைப் பெறுவார்கள் என்று தெரியவந்துள்ளது. இந்தக் கருத்துக்கணிப்பில் தமர்லா 13 சதவீதமும் டெட்ஜோ ஒன்பது சதவீதமும் வாக்குகளைப் பெறுவார்கள் என கணிக்கப்பட்டுள்ளது.

பாருங்கள்' மிஸ்ஸிசாகாவின் முதல் மேயர் தேர்தல் விவாதத்தின் முக்கிய அம்சங்கள்:

மிஸ்ஸிசாகா மேயர் தேர்தல் விவாதம் 3 நிமிடங்களில் செப்டம்பர் 25 'கால அளவு 2:58 அக்டோபர் முனிசிபல் தேர்தலுக்கு முன்னதாக நடைபெற்ற முதல் மேயர் தேர்தல் விவாதத்தில் மிஸ்ஸிசாகாவின் முன்னணி வேட்பாளர்கள் நான்கு பேர் நேருக்கு நேர் மோதிக்கொண்டனர். முக்கிய அம்சங்களைப் பாருங்கள்.

இந்தக் கருத்துக்கணிப்புக்குப் பிறகு, பீல் பிராந்திய காவல் சங்கம் (Peel Regional Police Association) டெட்ஜோவுக்கு ஆதரவளித்துள்ளது. இது 3,800 க்கும் மேற்பட்ட சீருடை மற்றும் சிவில் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாகும்.

ஒரு மிஸ்ஸிசாகா மேயர் வேட்பாளரை இந்தக் காவல் சங்கம் ஆதரிப்பது இதுவே முதல் முறையாகும் - இது ஒரு வரலாற்று சிறப்புமிக்க ஆதரவாகும். இது 2024 ஆம் ஆண்டில் டெட்ஜோ காட்டிய வலுவான செயல்பாட்டை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இடைத்தேர்தலில் பாரிஷின் 43,400 வாக்குகளுக்குப் பின்னால், வெறும் 35,000 க்கும் அதிகமான வாக்குகளுடன் டெட்ஜோ இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

தேர்தலுக்கு இன்னும் சில வாரங்களே உள்ள நிலையில், குரோம்பி அல்லது பாரிஷைத் தவிர வேறொரு வேட்பாளர் முன்னிலை பெறுவார் என்ற சாத்தியக்கூறை பெஸ்கோ நிராகரிக்கவில்லை.

மிஸ்ஸிசாகா மேயர் தேர்தல், செயற்கை நுண்ணறிவு தரவு மையங்களை (AI data centres) மையமாகக் கொண்டு சூடுபிடிக்கிறது.

மிஸ்ஸிசாகா மேயர் விவாதத்தில் நடந்த 3 முக்கிய நிகழ்வுகள்

"வாக்குகள் மூன்று அல்லது நான்கு வழிகளில் பிரியும்போது, ஒப்பீட்டளவில் சிறிய வித்தியாசத்தில் நீங்கள் வெற்றி பெறலாம்" என்று பெஸ்கோ கூறினார். "பல்வேறு குழுக்கள் உள்ளனவா என்பதும், பாரிஷ் மற்றும் குரோம்பி வாக்குகளின் ஒரு பகுதியைப் பிரிப்பார்களா அல்லது அது மூன்று சம வழிகளில் பிரியுமா என்பதும் கொஞ்சம் தெளிவாகத் தெரியவில்லை."

மிஸ்ஸிசாகா குடியிருப்பாளர்களுக்கான முன்-வாக்குப்பதிவு (Advance polling) அக்டோபர் 6 முதல் 11 வரை நகரத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் நடைபெறும்.

BEHIND ME MEDIA

# தியாகதீபம் திலீபனின் சிலை யாழ். நீதிமன்றக் கட்டுக்காவலில் பாரப்படுத்தப்பட்டது

தொடர்ச்சி

குறிப்பாக சிலை வழக்கில் எந்த ஒரு சந்தேக நபர்களின் பெயர் குறிப்பிடப்பட்டதை அடுத்தே சிலையை பொறுப்பேற்க நீதிமன்றம் மறுத்திருந்தது. மேலும் சிலை தொடர்பான வழக்கை ஜனவரி மாதத்திற்கும் நீதிமன்றம் ஒத்துவைத்தது.

இந்நிலையில் யாழ். பொலிஸ் நிலையத்தில் கடந்த 8 நாட்களாக வைக்கப்பட்டிருந்த திலிபனின் சிலைநேற்று யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டது.

பொலிஸ் நிலையத்தில் இருந்து வெள்ளைத் துணியால் மூடிக்கட்டப்பட நிலையில், பொலிஸ் வாகனத்தில் ஏற்றிவரப்பட்ட சிலை நீதிமன்ற வளாகத்திற்குள் கொண்டு செல்லப்பட்டு நீதிமன்ற கட்டுக்காவலுக்காக ஒப்படைக்கப்பட்டது.

# தியாக தீபம் திலீபனின் சிலை அகற்றப் பட்டதை கண்டித்து பிரித்தானியாவில் போராட்டம்

தொடர்ச்சி

பிரித்தானிய பிரதமரின் காரியாலயத்திற்கு முன்பாக 3 மணிக்கு ஆரம்பமான குறித்த போராட்டம், வெளிவிவகார அமைச்சகம் வரை சென்று முடிவடைந்திருந்தது.



தியாக தீபம் திலீபனின் நினைவை அவமதிக்கும் வகையிலான நடவடிக்கைகளைக் கண்டித்தும், தமிழர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் நீதிக்கான கோரிக்கைகளை உலகிற்கு எடுத்துரைக்கும் வகையிலும் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



தமிழீழ சுயநிர்ணய அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கண்டனப் போராட்டத்தில் தேசிய உணர்வாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

போராட்டத்தின் போது, திலீபனின் திருவுருவச் சிலையை மீளவும் நிறுவ வேண்டும் என்றும், தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ரணில் விக்ரமசிங்கவின் பாதுகாப்பு அதிகாரியை தாக்கிய ஒளிப்பதிவாளருக்கு பிணை



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பாதுகாப்பு காவலர் ஒருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட தனியார் ஊடகத்தின் ஒளிப்பதிவாளர் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக, சம்பந்தப்பட்ட ஒளிப்பதிவாளர் கம்பெனி வீதி பொலிஸ் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்ட நிலையில், சந்தேக நபர் கைது செய்யட்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பாதுகாப்பு அதிகாரியைத் தாக்கியதாக சந்தேகிக்கப்படும் தனியார் ஊடகத்தின் ஒளிப்பதிவாளர் சற்றுமுன்னர் கம்பனி வீதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற ஒரு வழக்கிலிருந்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளியே வந்தபோது, அங்கு இருந்த தனியார் ஊடகத்தை சேர்ந்த ஒளிப்பதிவாளர் ஒருவர் அவரது பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவரைத் தாக்கியுள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்பான காணொளிகள் சமூக வலைத்தளங்களில் பரவியதை தொடர்ந்து, குறித்த சம்பவம் தொடர்பில் சுதந்திரமான மற்றும் சுயாதீனமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் மீதான தனது கருத்துக்களை ஐக்கிய தேசியக் கட்சி செய்தியாளர் சந்திப்பில் போதே மேற்கண்டவாறு வெளிப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பாக விசாரணைக்காக சம்பந்தப்பட்ட ஒளிப்பதிவாளர் கம்பனி வீதி பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில், கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தாக்குதலுக்குள்ளான பாதுகாப்பு அதிகாரி, சம்பவத்தின் பின்னர், சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராடியவர்கள் மீதான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு!



யாழ்ப்பாணம், தையிட்டி பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராகப் போராட்டம் முன்னெடுத்தமை தொடர்பில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 07ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

தையிட்டியில் உள்ள தனியார் காணியில் அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராகக் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தினார்கள் எனக் குற்றம்சாட்டி வேலன் சுவாமிகள், வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர், வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் காணி உரிமையாளர்கள் உள்ளிட்ட பலருக்கு எதிராகப் பலாலி காவற்துறையினரால் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த பிரதிவாதிகள் கடந்த வியாழக்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற விசாரணைகளின் பின்னர், வழக்கின் அடுத்த கட்ட விசாரணைகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 07ஆம் திகதிக்கு நீதவான் ஒத்திவைத்துக் கட்டளையிட்டார்.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமையும் குறித்த விகாரைக்கு எதிராகப் போராடியவர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட மற்றுமொரு வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அந்த வழக்கும் ஜனவரி 07ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் – தையிட்டி பகுதியில் பொதுமக்களின் பூர்வீகக் காணிகளை உள்ளடக்கிய பகுதியில் பௌத்த விகாரை ஒன்று நிர்மாணிக்கப்பட்டமைக்கு எதிராகத் தமிழ் தேசியக் கட்சிகள், மதத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் காணி உரிமையாளர்களினால் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

BEHIND ME MEDIA

## சீமெந்து கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 187.56 ஏக்கர் காணி உத்தியோகபூர்வமாக விடுவிப்பு!



இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 187.56 ஏக்கர் காணி உத்தியோகபூர்வமாக விடுவிப்பதற்கான ஆவணம் பலாலி பாதுகாப்புப் படைகளின் சிவில் விவகாரங்களுக்கான சிரேஷ்ட அதிகாரி கேர்ணல் நிசங்கவால் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனிடம் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

காங்கேசன்துறையில் அமையவுள்ள முதலீட்டு வலயத்திற்கு அரச காணி 351.23 ஏக்கர் வழங்குவதற்கு ஜனாதிபதி அங்கீகாரத்துடன் ஒதுக்கப்பட்டு, அதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறு முதலீட்டு வலயத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 351.23 ஏக்கர் காணிப் பரப்பிற்குள் உத்தியோகபூர்வமாக விடுவிக்கப்பட்ட 187.56 ஏக்கர் காணியும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் பா. ஜெயகரன் மற்றும் மேஜர் வீரக்கோன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## ராமநாதபுரத்தில் இலங்கைத் தமிழரை செருப்பால் அடிக்க முயன்ற முகாம் ஆட்சியர் குறித்து ஆய்வு!



இந்தியாவின் ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர் ஒருவர் மீது அதிகாரி ஒருவரால் காலணி வீசப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு ஆணையாளர் சதீஷ் நேரில் சென்று விசேட ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளார்.

இந்த விஜயத்தின் போது முகாமில் வசிக்கும் இலங்கை அகதிகளை நேரில் சந்தித்த ஆணையாளர், அவர்களின் குறைகளையும் கோரிக்கைகளையும் கேட்டறிந்தார். இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ்வாதாரத்தை இழந்து இந்தியாவுக்குச் சென்றவர்களில் சிலர், மீண்டும் தாயகம் திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்து இதன்போது மனு கையளித்தனர்.

அத்துடன், முகாமில் வசிக்கும் தமக்கு அடையாள அட்டைகளை வழங்கி அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்து தருமாறு அகதிகள் கோரிக்கை விடுத்தனர். அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்ப்பதிலும், அரச வைத்தியசாலைகளில் சிகிச்சைகளைப் பெறுவதிலும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும், நீண்ட காலமாக முகாமில் பதிவிலுள்ள தமக்கு விசேட தணிக்கை மற்றும் விடுமுறை பெறுவதில் விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும், சீரான மின் விநியோகத்தை உறுதிசெய்து நிரந்தர மின் ஊழியர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. அத்துடன், இரவு வேளைகளில் முகாமின் நுழைவாயிலில் பொலிஸ் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் என்பது உட்பட மேலும் பல கோரிக்கைகள் அடங்கிய மகஜரும் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டன. இதேவேளை, இலங்கைத் தமிழர் மீது காலணி வீசப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் மாவட்ட ஆட்சியர் ஊடாக அறிக்கை பெறப்பட்டு, விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஆணையாளர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். அத்துடன், முகாமின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலும் தாம் தொடர்ச்சியாகக் அவதானித்து வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மீண்டும் மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுக்கும்

கடுமையான பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்களை தவறாக பயன்படுத்தி மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட வரலாறு இலங்கைக்கு உண்டு என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான இயக்குநர் எலைன் பியர்சன் புதிய சட்டமூலம் அந்த தவறுகள் மீண்டும் இடம்பெறுவதை தடுப்பதற்கு பெருமளவிற்கு உதவப்போவதில்லை என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அரசை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் புதிய சட்டமூலம் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கையின் அதிகாரிகள் நீண்டகாலமாக சிறுபான்மையினரை துன்புறுத்துவதற்கும் , மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை கோரும் செயற்பாட்டாளர்களை இலக்குவைப்பதற்கும் நீண்டகாலமாகவே கடுமையான பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்களை பயன்படுத்தி வந்துள்ளனர்.

முன்மொழியப்பட்டுள்ள இந்த சட்டமூலமானது சர்வதேச சட்டங்களின் கீழ் இலங்கைக்குள்ள கடப்பாடுகளை மீறுவதோடு ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக சலுகைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தி மீண்டும் மனித உரிமை மீறல்களுக்கு வழிகோலும். சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப அரசினை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்டமூலம் திருத்தப்படும் வரை அல்லது புதிய சட்டமூலமொன்றை தயாரிக்கும்வரை இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தினை பயன்படுத்துவதற்கு தற்காலிக தடையை விதிக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# தியாக தீபம் திலீபனின் சிலை அகற்றம் Ontario மாகாணசபை உறுப்பினர் லோகன் கணபதி கண்டனம்

தொடர்ச்சி

யாழ்ப்பாணம், நல்லூரில் வைக்கப்பட்டிருந்த தியாகி திலீபனின் சிலை கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் பலவந்தமாக அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் கனடாவின் ஒன்றாரியோ மாகாண சட்டமன்ற உறுப்பினர் லோகன் கணபதியினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:



LOGAN KANAPATHI,
Member of Provincial Parliament
Markham–Thornhill
Ontario, Canada

Constituency office
7380 McCowan Rd, Unit 3
Markham, ON L3S 3H8
Phone: 905-305-1935
Email: logan.kanapathico@pc.ola.org

Legislative office
Room 171
Main Legislative Building, Queen's Park
Toronto, ON M7A 1A5
Phone: 416-326-7648

ஒன்டாரியோ மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் (MPP) கனபதியின் அறிக்கை

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது ஆயுதங்களை ஒப்படைத்தது. ஆனால், ஈழத் தமிழர்களின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமைகள் குறித்து அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததால், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் (இராசையா பார்த்தீபன்) அவற்றை நிறைவேறுவதற்காக அகிம்சை வழியில் போராடத் தீர்மானித்தார்.

1987 செப்டம்பர் 13 அன்று, இந்திய அரசுக்கு திலீபன் பின்வரும் ஐந்து அம்சக் கோரிக்கைகள் ஜனநாயகமுறையில் முன்வைத்தார்:

1.பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ்ச் சிறைக்கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்.

2.புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர்களின் தாயகப் பகுதிகளில் நடக்கும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

3.தற்காலிக இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்படும் வரை, அங்கு புதிய பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

4.இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில், தமிழ் கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள ஊர்க்காவல் படைகளுக்கான ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட வேண்டும்.

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அதன் ஆயுதங்களை ஒப்படைத்தது. ஆனால் ஈழத்தமிழரின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமைகள் குறித்து அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படாமையினால் விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் என்னும் இராசையா பார்த்தீபன் அவற்றைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காக அஹிம்சை வழியில் போராடத் தீர்மானித்தார்.

1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதியன்று திலீபன் இந்திய அரசுக்கு 5 அம்சக் கோரிக்கையொன்றை முன்வைத்தார். நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் அமைக்கப்பட்ட ஒரு பந்தலில் நீராகாரம் கூட அருந்தாது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். பின்னர் இந்திய அரசோ அல்லது தமிழ்நாட்டு அரசோ திலீபனின் கோரிக்கைகளையும் அவரது தியாக வேள்வியின் உன்னதத்தையும் அறியாமல் அவற்றைப் புறக்கணித்து செயற்பட்டன.

எனவே அஹிம்சை வழியில் போராடிய திலீபன், இறுதியில் தனது உயிரை தமிழ்மக்களுக்காக அர்ப்பணித்தார். ஆனால் இந்தத் தியாகத்தை இலங்கை, இந்திய அரசுகள் தொடர்ந்து புறக்கணிப்பது கண்டனத்துக்குரியதாகும். அதன் நீட்சியாக யாழ்ப்பாணம், நல்லூரில் வைக்கப்பட்டிருந்த தியாகி திலீபனின் சிலை பொலிஸாரால் பலவந்தமாக அகற்றப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பாரிஸில் பாரிய தீ விபத்தில் நாவாந்துறையைச் சேர்ந்தவர் உயிரிழப்பு!



பிரான்ஸ் தலைநகர் பாரிஸின் டுய ஊழரசநெரளந பகுதியில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தில், இலங்கைத் தமிழர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

38 வயதான ரெக்சன் செல்வராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.
தனது குடும்பத்தினரை சந்திப்பதற்காக வீட்டிற்கு வந்திருந்த அவர், எதிர்பாராத விதமாக வீட்டில் ஏற்பட்ட கடுமையான தீ விபத்தில் சிக்கியதாகவும், தீயிலிருந்து வெளியேற முடியாமல் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் இடம்பெற்ற இந்த துயரச் சம்பவம் நாவாந்துறை மற்றும் மெலிஞ்சிமுனை பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

BEHIND ME MEDIA

# நாமல் ராஜபக்ஷவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

தொடர்ச்சி

இதன்போது, இலஞ்சம் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களை ஆராய்ந்த நீதிவான் இந்த விளக்கமறியல் நீடிப்பு உத்தரவைப் பிறப்பித்தார்.

சந்தேகநபர்கள் இருவரும் தாக்கல் செய்துள்ள பிணை கோரிக்கை மனுக்கள் மீதான இறுதித் தீர்மானம் மற்றும் உத்தரவு எதிர்வரும் 16 ஆம் திகதி அறிவிக்கப்படும் எனவும் தலைமை நீதிவான் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள கிரிஷ் சதுக்கத் திட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரங்களை விரைவுபடுத்திக் கொடுப்பதற்கு கைமாறாக 70 மில்லியன் ரூபாயை லஞ்சமாகப் பெற்றக் குற்றச்சாட்டு தொடர்பிலேயே இந்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# இலங்கையில் மார்பகப் புற்றுநோயால் தினமும் மூவர் உயிரிழப்பு!

தொடர்ச்சி

கொழும்பு மாநகர சபையில் இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே, தேசிய புற்றுநோய் தடுப்புத் திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் சேனக தலகல இதனைத் தெரிவித்தார்.

இலங்கைப் பெண்களிடையே மிகவும் அதிகமாகக் காணப்படும் புற்றுநோயாக மார்பகப் புற்றுநோய் விளங்குகின்றது.

நாட்டில் ஆண்டொன்றுக்கு 6,000க்கும் அதிகமான புதிய நோயாளர்கள் இனங்காணப்படுவதுடன், 1,000க்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர்.

இதனைச் சுருக்கமாகக் கூறினால், ஒவ்வொரு நாளும் புதிதாக 17 நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதுடன் 3 பேர் உயிரிழக்கின்றனர்.

தெளிவான அறிகுறிகள் தென்பட்டபோதிலும் பெரும்பாலான நோயாளர்கள் மிகவும் தாமதித்தே மருத்துவமனைக்கு வருகை தருகின்றனர் என்றும், இதனால் சிகிச்சைகள் மூலம் சிறந்த முடிவுகளைப் பெறுவது கடினமாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, நோயை ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிதல், முறையான சிகிச்சைகளைப் பெறுதல், தொடர் கண்காணிப்பு மற்றும் நோயாளர்களைச் சரியாகப் பராமரித்தல் என்பன மிக அவசியமானவை என்றும் அவர் வலியுறுத்தினார்.

# பிளேக் நோய் அச்சத்தில் உலக நாடுகள்!

தொடர்ச்சி

கிழக்கு சைபீரியாவில் ஷெலெகாவ் நகரில் இர்குட்ஸ்க் பிளேக் எதிர்ப்பு ஆராய்ச்சி மையம் அமைந்துள்ளது. இங்கு ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநராகப் பணியாற்றி வந்த டாரியா ஷிபிலோவா (28) என்ற பெண், கடுமையான நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அக்டோபர் 2 அன்று உயிரிழந்தார்.

அவருடன் தொடர்பில் இருந்ததாகக் கருதப்படும் 197 பேரில் 189 பேர் மருத்துவக் கண்காணிப்பிற்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும், அவர்கள் யாருக்கும் இதுவரை நோய்க்கான அறிகுறிகள் தென்படவில்லை என்று சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

நுரையீரலைத் தாக்கும் நிமோனிக் பிளேக் நோய் என்பது கொரோனா போல மூச்சு திணறலை ஏற்படுத்துவதாகும். ஆரம்பகட்ட அறிக்கைகளில் சில உள்ளூர் அதிகாரிகளும் பிராந்திய ஆளுநர் அலெக்சி சிடேனோவும் 'பிளேக்' என்ற வார்த்தையைக் குறிப்பிட்ட போதிலும், பின்னர் அதிகாரப்பூர்வ அறிக்கைகளில் காரணம் அறியப்படாத நிமோனியா என மாற்றப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதுபோன்ற தகவல் முரண்பாடுகள் காரணமாக, உலகளவில் குறிப்பாக அமெரிக்க வெள்ளை மாளிகை வரை இது தொடர்பான தகவல்களை உற்றுநோக்கி வருகின்றன. எனினும் தற்போதைய நிலவரப்படி, சைபீரியாவில் பிளேக் நோய் பரவியுள்ளது என்பது அதிகாரப்பூர்வமாக உறுதிப் படுத்தப்படவில்லை.

# புத்தகத்தில் ஓர் உலகம்... வாழ்க்கையில் இன்னோர் உலகம்!

ஒரு குழந்தை பள்ளிக்குச் செல்கிறது. பாடங்களைப் படிக்கிறது. தேர்வு எழுதுகிறது. நல்ல மதிப்பெண்கள் பெறுகிறது. அடுத்ததாக நுழைவுத் தேர்வு. அதன் பிறகு கல்லூரி, பட்டம், பின்னர் ஒரு வேலை. வெளியில் இருந்து பார்க்கும்போது, இந்தப் பயணம் மிகவும் நேர்த்தியாகத் தெரிகிறது.

ஆனால், இந்தப் பயணத்தில் நம்மில் பலரும் தவறிவிடும் கேள்வி: 'நாம் படித்ததை வைத்து என்ன செய்கிறோம்?'

இங்கே முதலில் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். நாம் படிப்பதில் சிக்கல் இருக்கிறது என்று இந்த அத்தியாயம் சொல்லவில்லை.

ஒரு சமூகத்தில் அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதும், உயர் கல்விக்குள் வருவதும், பட்டம் பெறுவதும் மிகப் பெரிய சமூக முன்னேற்றம். கல்வி சில குறிப்பிட்ட சமூகத்தினருக்கோ, பொருளாதார வசதி உள்ளவர்களுக்கோ மட்டும் இருந்த காலத்தில் இருந்து, இன்று ஒரு கிராமத்தில் இருக்கும் குழந்தையும் கல்லூரிக்குச் சென்று ஒரு பட்டம் பெறக்கூடிய நிலை உருவாகியுள்ளது. மலைவாழ் சமூகத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையாக இருந்தாலும், நகரத்தில் வசிக்கும் குழந்தையாக இருந்தாலும், பொருளாதார வசதி அதிகம் உள்ள குடும்பத்தில் பிறந்த குழந்தையாக இருந்தாலும், எல்லோருக்கும் கல்வி சென்று சேர வேண்டும் என்ற முயற்சி முக்கியமானது.

அதேபோல், ஒரு தலைமுறையில் பத்து குழந்தைகள் பள்ளிக்குச் சென்றார்கள் என்றால், அந்தப் பத்து பேரில் சிலர் கல்லூரிக்குச் செல்வார்கள். அவர்களில் சிலர், "அடுத்ததாக இதையும் செய்யலாம்", "இன்னும் படிக்கலாம்", "வேறு ஒரு துறைக்குச் செல்லலாம்" என்று யோசிக்கத் தொடங்கு வார்கள். அந்த வாய்ப்பு அடுத்த தலைமுறைக்கும் செல்லும். அதனால், பெரும்பான்மையான மக்களிடம் கல்வியைக் கொண்டு செல்வது என்பது தவறான பாதை அல்ல் அது தேவையான முதல் படி.

**பள்ளிக்கும் வீட்டுக்கும், பாடத்துக்கும் வாழ்க்கைக்கும் இடையே இருக்கும் இடைவெளியை நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது!**

ஆனால், ஒரு கட்டத்தில் அடுத்த கேள்வியைக் கேட்க வேண்டியிருக்கிறது. கல்வி எல்லோரிடமும் சென்று சேர்ந்துவிட்ட பிறகு, அது எப்படிச் சென்று சேர வேண்டும்?

எப்படிக் கற்றுக்கொடுக்க வேண்டும்?, எப்படிப் புரிய வைக்க வேண்டும்?, கற்றதை எப்படி வாழ்க்கையோடு இணைக்க வேண்டும்?, ஒரு குழந்தை பள்ளியில் கற்றதை வீட்டில் எப்படி அர்த்தப்படுத்துகிறது?, அந்த அறிவைத் தனது அனுபவத்தோடு எப்படி இணைக்கிறது?, அதை வைத்து புதிய சூழ்நிலைகளில் எப்படி சிந்திக்கிறது?

இங்கேதான் பள்ளிக்கும் வீட்டுக்கும், பாடத்துக்கும் வாழ்க்கைக்கும் இடையே இருக்கும் இடைவெளியை நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

ஒரு மாணவன் ஒரு பாடத்தில் தேர்ச்சி பெறுவதற்குத் தேவையானதைப் படித்துவிட்டான் என்று வைத்துக் கொள்வோம். தேர்வில் சரியான பதிலை எழுதிவிட்டான். நுழைவுத் தேர்விலும் நன்றாகச் செய்துவிட்டான். அதற்குப் பிறகு அந்த அறிவு அவனுடைய வாழ்க்கையில் எப்படி பயன்படுத்தப்படுகிறது?

இதுதான் நாம் அதிகமாகப் பார்க்காத ஓர் இடைவெளி.

புத்தகத்தில் ஓர் உலகம்... வாழ்க்கையில் இன்னோர் உலகம்!

ஒரு குழந்தை அறிவியல் படிக்கிறது. பூமி மற்றும் பிரபஞ்சத்தின் தோற்றம் குறித்து அது 'பிக் பேங்' கோட்பாட்டைப் படிக்கிறது. பிரபஞ்சம் எப்படி உருவானது, அறிவியல் எப்படி ஒரு நிகழ்வுக்கான காரணத்தைத் தேடுகிறது என்பதைக் கற்றுக்கொள்கிறது. அதே குழந்தை வீட்டுக்கு வந்ததும், ஏதாவது தவறு செய்தால், 'சாமி கண்ணைக் குத்திடும்' என்று கேட்கிறது.

இங்கே பிரச்சினை என்பது எது உண்மை, எது பொய் என்று உடனடியாகத் தீர்ப்பளிப்பது அல்ல. ஒரு குழந்தை உலகத்தைப் புரிந்துகொள்ளும்போது, பாடநூல் மட்டும் அதன் ஆசிரியராக இருப்பதில்லை என்பதுதான் முக்கியம். அதன் குடும்பம், மொழி, கலாச்சாரம், மதிப்புகள், பழக்க வழக்கங்கள், பயங்கள், நம்பிக்கைகள், சுற்றியுள்ள பெரியவர்கள் சொல்லும் கதைகள். இவை அனைத்தும் சேர்ந்து அந்தக் குழந்தையின் உலகத்தை உருவாக்கு கின்றன.

பள்ளி ஒரு விஷயத்தை ஒரு குறிப்பிட்ட முறையில் விளக்கலாம். வாழ்க்கை அதை வேறு ஒரு பாதையில் விளக்கலாம். அப்போது குழந்தை அந்த இரண்டு உலகங்களையும் எப்படிப் புரிந்துகொள்ளப் போகிறது?



BEHIND ME MEDIA





**மலைவாழ் சமூகத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையாக இருந்தாலும், நகரத்தில் வசிக்கும் குழந்தையாக இருந்தாலும், பொருளாதார வசதி அதிகம் உள்ள குடும்பத்தில் பிறந்த குழந்தையாக இருந்தாலும், எல்லோருக்கும் கல்வி சென்று சேர வேண்டும் என்ற முயற்சி முக்கியமானது.**

பள்ளி ஒரு விஷயத்தை ஒரு குறிப்பிட்ட முறையில் விளக்கலாம். வாழ்க்கை அதை வேறு ஒரு பாதையில் விளக்கலாம். அப்போது குழந்தை அந்த இரண்டு உலகங்களையும் எப்படிப் புரிந்துகொள்ளப் போகிறது?

அதுதான் இன்டர்னலைசேஷன் (Internalisation) என்ற இடத்தை முக்கியமாக்குகிறது. ஒரு விஷயத்தைப் புத்தகத்தில் படிப்பது மட்டும் போதாது. அது குழந்தையின் சிந்தனையில் இடம்பெற வேண்டும். அதன் முன் இருக்கும் அனுபவங்களோடு அது தொடர்புபட வேண்டும். "ஏன்?" என்று கேட்கும் இடம் இருக்க வேண்டும். வேறுபட்ட விளக்கங்களை ஒப்பிடும் வாய்ப்பு இருக்க வேண்டும். இல்லையென்றால், குழந்தை இரண்டு தனித்தனி உலகங்களை உருவாக்கிவிடலாம்.

"இது தேர்வுக்காகப் படிப்பது.", "இது நம்ம வாழ்க்கையில் இருப்பது."

பாடநூல் ஒரு மதிப்பெண்ணைப் பெறுவதற்கான கருவியாக மட்டுமே பார்க்கப்படும்போது, அதன் உள்ளடக்கம் வாழ்க்கைக்குள் செல்லாமல் தேர்வுத்தாளுக்குள் மட்டுமே தங்கிவிடும்.

ஒரு குழந்தையின் உலகம் எவ்வளவு பெரியதாக இருக்க முடியும்?

'தி கேவ் ஆ∴ப் தி யெல்லோ டாக்' (the cave of the Yellow Dog) திரைப்படத்தில் வரும் ஒரு சிறிய காட்சி என்னை நீண்ட நேரம் யோசிக்க வைத்தது.

ஒரு பரந்த வெட்டவெளி. காலை நேரம். சுமார் ஏழு வயதுள்ள ஒரு சிறுமி குதிரையில் செல்கிறாள். அவளுடன் ஆடுகளும், வீட்டின் செல்ல நாயும் செல்கின்றன. அவளுடைய உலகம் அந்த நேரத்தில் எவ்வளவு பெரியதாக இருக்கிறது என்பதை அந்தக் காட்சி எந்த விளக்கமும் இல்லாமல் காட்டுகிறது. அவள் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறாள். அந்தப் பரந்த வெளியில் அவள் இயல்பாகச் சுற்றுகிறாள். ஒரு கட்டத்தில் அவளுடைய செல்ல நாய் காணாமல் போகிறது.

ஆடுகள் மட்டும் தங்களுக்குப் பழக்கமான பாதையில் வீட்டிற்குத் திரும்பிவிடுகின்றன. ஆனால் அந்தச் சிறுமி?

அவள் நாயைத் தேடிப் போகிறாள். குதிரையில் சென்று தேடுகிறாள். நேரம் கடந்து செல்கிறது. மாலை ஆகிறது. சூரியன் மறைகிறது. வெளிச்சம் குறைகிறது.

இறுதியில் அவள் நாயைக் கண்டுபிடிக்கிறாள். ஆனால், அதற்குள் வீட்டுக்குத் திரும்ப வேண்டிய நேரம் கடந்துவிட்டது. வழியில் ஒரு வயதான பெண்ணைச் சந்திக்கிறாள். அந்தப் பெண்ணுடன் அவளுடைய வீட்டுக்குச் செல்கிறாள். அங்கே குளிக்கிறாள். சாப்பிடுகிறாள். பேசுகிறாள். சிரிக்கிறாள். அந்த இரவு அங்கேயே இருக்கிறாள்.

இந்தக் காட்சி முழுவதும் எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஏனென்றால், அந்தச் சிறுமியின் முகத்தில் பெரிய பதற்றம் இல்லை. அவளைச் சுற்றியுள்ள பெரியவர்களிடமும் நாம் எதிர்பார்க்கும் அளவிலான பதற்றம் இல்லை.

□எங்கே போனாய்?", "ஏன் இவ்வளவு நேரம்?", "யாருடன் இருந்தாய்?", "என்ன நடந்தது?" என ஒரு பெரிய விசாரணை இல்லை. பின்னர் அவளுடைய அம்மா அவளைத் தேடி வந்து அழைத்துச் செல்கிறார். அவளும் இயல்பாகத் தன்னுடைய வீட்டுக்குத் திரும்பிச் செல்கிறாள்.

அந்தக் காட்சியைப் பார்க்கும்போது, எனக்கு ஒரு கேள்வி வந்தது.

ஒரு குழந்தை உலகத்தை இவ்வளவு இயல்பாக அனுபவிக்கக் கூடிய இடம், நம்முடைய வாழ்க்கையில் எப்போது குறைந்து போனது?

நம்முடைய குழந்தை வீட்டை விட்டு வெளியே சென்றால், இன்று எத்தனை கேள்விகள் உடனே வந்து நிற்கின்றன?

"எங்கே போகிறாய்?", "யாருடன் போகிறாய்?", "எப்போது வருவாய்?", "∴போன் எடுத்துக்கிட்டியா?", "லொகேஷன் ஆன் பண்ணு.", "லேட் ஆகக்கூடாது.", "தனியாகப் போகக்கூடாது.", "அறிமுகமில்லாதவர்களிடம் பேசக்கூடாது."

இந்தக் கவலைகள் எல்லாமே காரணமில்லாதவை என்று சொல்ல முடியாது. குழந்தைகளின் பாதுகாப்பைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய உண்மையான காரணங்கள் இருக்கின்றன. ஆனால், அந்தப் பாதுகாப்பின் பெயரில், குழந்தை தானாக உலகத்தைப் பார்த்து, அனுபவித்து, தேடி, தவறி, மீண்டும் புரிந்துகொள்ளும் இடத்தை நாம் எவ்வளவு குறைத்துவிட்டோம்?

நன்றி இணையம் - அடுத்த வாரம் தொடரும்

# அடக்குமுறைகளுக்கு அஞ்சாது, எமது உரிமைகளை வென்றெடுக்க அனைவரும் ஒன்றாக அணிதிரள்வோம்



அரசினதும் பொலிஸாரினதும் அடக்குமுறைகளுக்கு அஞ்சாது, எமது உரிமைகளை வென்றெடுக்க அனைவரும் ஒன்றாக அணிதிரள்வோம் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தையிட்டியில் தமிழ் மக்களின் சொந்தக் காணிகளைச் சட்டவிரோதமாக ஆக்கிரமித்து பிரம்மாண்ட விகாரை அமைக்கப்பட்டமைக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுத்துவருகிறோம்.

மக்களின் நியாயமான போராட்ட முடக்கத்திற்காகப் பொலிஸார் பொய் வழக்குகளைத்தாக்கல் செய்து அச்சுறுத்தப் பார்க்கிறார்கள். மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் இது தொடர்பான 5 வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இது வெறும் காணி உரிமைக்கான போராட்டம் மட்டுமல்ல! வடகிழக்கில் தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான இருப்பையும் ஜனநாயக உரிமைகளையும் பாதுகாப்பதற்கான போராட்டம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராக குரல்கொடுத்த எங்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு வழக்கு - வேலன் சுவாமிகள்



சிறீலங்கா அரசினால் தனியார் காணிகளை அபகரித்து, சட்டவிரோதமாக கட்டப்பட்ட தையிட்டி சட்டவிரோத விகாரையை அகற்றப்பட வேண்டும், காணி உரிமையாளர்களிடம் மக்களின் காணி மக்களுக்கே என்ற அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என்கின்ற காணி உரிமையாளர்களுடைய போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்திருக்கக்கூடிய எங்கள் அனைவருக்கும் எதிராக, பல வழக்குகளை எந்தவித சட்ட நியாயமும் இல்லாத வகையிலே, எந்தவித நீதி அடிப்படையுமில்லாத வகையிலே சிறீலங்கா அரசு எங்கள் மீது போட்டிருக்கிறது. அந்த பல வழக்குகளிலே இன்றைய தினம் ஐந்து வழக்குகள் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தாலே எடுத்துக்கொள்ளப்பட்டு, வழமை போல மீண்டும் தவணை ஜனவரி மாதம் 7 ஆம் திகதிக்கு போடப்பட்டிருக்கிறது.

இந்த செயற்பாடானது, சிறீலங்கா அரசு எந்தவித காரணங்களையும் அல்லது நியாயங்களையும் முன்வைக்காமல், இந்த வழக்குகளை தொடர்ச்சியாக தவணை போட்டு போட்டு போட்டு போட்டு சலித்தெடுத்து எங்களை நீதிமன்றங்களுக்கு அலைக்கழித்து, அந்த ஒரு அலைக்கழிப்பின் காரணமாக நாங்கள் இதிலிருந்து விடுபடுவோம் என்று நினைக்கிறது.

ஆனால், எங்கள் மக்களுக்கான உரிமைகளுக்கான போராட்டம், எங்கள் இன விடுதலைக்கான போராட்டம் எத்தனை சட்டவிரோதமான, நீதிக்கு புறம்பான சிறீலங்கா அரசினுடைய செயற்பாடுகள் நடைபெற்றாலும், தொடர்ச்சியாக நடைபெறும் என்பதை இத்தால் தெரியப்படுத்தியிருக்கின்றோம்.

# இணையத்தளம் மூலம் உடனடி கடன் நிறுவனங்களின் அதிக வட்டி சுரண்டல்?



இணையத்தளம் மூலம் உடனடி கடன் பெறும் வாடிக்கையாளர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் வகையில், நிறுவனங்களால் அதிக வட்டி அறவிடப்படுவது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

சமூக ஊடக விளம்பரங்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசி செயலிகள் மூலம் இணையத் தளம் வாயிலாக உடனடி கடன்களை வழங்கி, அவற்றை மீளப்பெறும்போது அதிக வட்டி வீதங்களை அறவிட்டு வாடிக்கையாளர்களை பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், கடன் பெறுபவர்கள் குறித்த நிறுவனங்களின் நிபந்தனைகள் தொடர்பாக முறையான புரிதலன்றி கடன்களைப் பெறுவதனாலேயே இத்தகைய சிக்கல்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த செயலிகளின் நிபந்தனைகளில், கடன் தொகையை மீள அறவிடும் நடைமுறைகள் மற்றும் இதன்மூலம் ஏற்படும் அனைத்து அபாயங்களையும் கடன் பெறுபவரே முழுமையாக ஏற்க வேண்டும் என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், பொதுமக்கள் நிபந்தனைகளை சரியாக வாசித்து விளங்கிக்கொள்ளாமல் இச்செயலிகளைப் பதிவிறக்கம் செய்து கடன்களைப் பெற்று வருகின்றனர்.

எனவே, இணையத்தளம் ஊடாக கடன்களைப் பெறும்போது பொதுமக்கள் மிகவும் அவதானமாகவும், தெளிவான புரிதலுடனும் செயற்படுவதன் மூலம் ஏற்பாடும் அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என பொலிஸார் சுட்டிக்காட்டுகின்றனர்.

இணையத்தளம் வாயிலாக கடன் வசதிகளைப் பெற விரும்பும் நபர்கள், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் நிபந்தனைகளைச் சரியாகப் புரிந்துகொண்ட பின்னரே கடன்களைப் பெற வேண்டும்.

இதன் மூலம் நிகழக்கூடிய நிதியிழப்புகள் மற்றும் அசௌகரியங்களைத் தவிர்க்க முடியும் என்பதால், பொதுமக்கள் இது குறித்து விழிப்புணர்வுடன் செயற்படுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் வலியுறுத்தியுள்ளனர்.

BEHIND ME MEDIA

# ரணிலின் பாதுகாப்பு அதிகாரி யார் யாருக்குத் தடை ஏற்படுத்தினர்?



கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு வெளியே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவருக்கும், தொலைக்காட்சி கேமராமேன் ஒருவருக்கும் இடையே இடம்பெற்ற சம்பவம் குறித்து உடனடியாக நியாயமான மற்றும் நடுநிலையான விசாரணையை நடத்துமாறு இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் (SLWJA) கோரிக்கை விடுத்துள்ளது.

அரசு நிதியை தவறாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் வழக்கு விசாரணையை அடுத்து, செப்டம்பர் 30 அன்று விக்கிரமசிங்க நீதிமன்றத்தை விட்டு வெளியேறியபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நீதிமன்ற நுழைவாயிலுக்கு அருகில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் போது, கேமராவால் தலையில் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் பாதுகாப்பு அதிகாரி, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக SLWJA தெரிவித்துள்ளது.

பொதுமக்களுக்குத் தகவல்களைத் தெரிவிக்கும் ஊடகவியலாளர்களின் உரிமையும், கடமையைச் செய்யும் பாதுகாப்பு அதிகாரிகளின் பாதுகாப்பும் உறுதிசெய்யப்பட வேண்டும் என அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

பாதுகாப்பு அதிகாரியின் கடமைகளுக்குத் இடையூறு விளைவிக்கப்பட்டதா அல்லது ஊடகவியலாளரின் தொழில்முறை கடமைகளைச் செய்வதற்கும் ஊடக சுதந்திரத்தைப் பயன்படுத்துவதற்கும் தடை ஏற்படுத்தப்பட்டதா என்பதைத் தீர்மானிக்க விரைவான, நியாயமான மற்றும் நடுநிலையான விசாரணையை நடத்துமாறு இலங்கை பொலிஸாரிடம் அச்சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், இந்தச் சம்பவமானது ஊடகவியலாளர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்கள் இருசாராரின் பாதுகாப்பு தொடர்பான பரந்த கவலைகளை வெளிப்படுத்தியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள ளுடுறுதுயு, அதிகாரிகள் இவ்விஷயத்தில் தீவிர கவனம் செலுத்துமாறு வலியுறுத்தியுள்ளது.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் ரங்க பண்டாரநாயக்க மற்றும் பொதுச்செயலாளர் மிதுன் ஜயவர்தன ஆகியோரினால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

# ஜனநாயக ரீதியில் விகாரைக்கு எதிராக போராடிய எங்களுக்கு எதிராக சோடிக்கப்பட்ட வழக்கு - தியாகாரசா நிரோஸ்

சட்டவிரோத விகாரைக்கு எதிராக போராடிய எங்களுக்கு எதிராக பொலிஸார் சோடிக்கப்பட்ட வழக்குகளை தாக்கல் செய்து வருகின்றனர் என வலிகிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகாரசா நிரோஸ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

ஜனநாயக ரீதியிலே சட்டவிரோதமான விகாரைக்கு எதிராக போராடி வந்த எங்களுக்கு எதிராக பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இன்று எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த வழக்குகள் மீண்டும் தவணையிடப்பட்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

அடிப்படையில் எங்கள் மீது அதாவது ஒரு நியாயம் கோரி ஒரு சட்டவிரோதமான விகாரைக்கு எதிராக போராடிய எங்களுக்கு எதிராக தொடர்ச்சியாக இவ்வாறான வழக்குகள் சோடிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை பொலிஸார் நீதிமன்றங்களிலே தாக்கல் செய்து எங்களுக்கு எதிராக தொடர்ச்சியாக கட்டுப்பாடுகளை விதிப்பதும், அதேநேரத்திலே மக்களை அச்சங்கொள்ள வைப்பதும், ஒரு ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு தடைகளை ஏற்படுத்துவதுமான செயல்திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றார்கள்.

அரசாங்கம் சொல்லுகின்றது ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு தடையில்லை என்று, ஆனால் செயற்பாட்டளவிலே இவ்வாறாக தனி நபர்களுக்குரிய, ஒரு பொது மக்களுக்குரிய நிலங்களிலே, தனியார் காணிகளிலே கட்டப்பட்ட விகாரைக்கு எதிராக அகிம்சை வழியிலே, அமைதியான முறையிலே, ஜனநாயக வழியிலே போராடிய எங்களை இன்றுவரை எங்களுக்கு எதிராக பல்வேறுபட்ட வழக்குகள் சோடிக்கப்பட்டு சோடிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டு கொண்டிருக்கின்றன. இவ்வாறான ஒரு சூழ்நிலைதான் இங்கே நிலவுகின்றது. இவ்வாறான சூழ்நிலை முற்றாக நிறுத்தப்பட வேண்டும். மக்கள் அச்சச் சூழ்நிலைக்குள் வாழ வைக்கப்படக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றோம்.

# வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா 2026!

BEHIND ME MEDIA

வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா கடந்தவாரம் யாழ். முற்றவெளியில் ஆரம்பமாகி யாழ் நகரின் வீதிகளில் கோலாகலமாக நடைபெற்றது. இப்பகுதியின் பாரம்பரிய கலைகளை வெளிப்படுத்தும் வண்ணமயமான ஊர்வலங்கள் மற்றும் பல கலாசார நிகழ்வுகளுடன் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

செப்டம்பர் 29, 2026 காலை யாழ். முற்றவெளியில் சிறப்பாகத் தொடங்கி, நகரின் வீதிகளில் பாரம்பரிய கலை ஊர்வலமாக வலம் வந்தது. பாரம்பரிய கலை நடனங்கள், கலைஞர்களைக் கௌரவித்தல் மற்றும் "வதாந்தி" என்ற நூலின் வெளியீடு போன்ற பல நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.
























## உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமானம் 2 ட்ரில்லியனை கடந்தது




2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதியளவில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தனது வருமானச் சேகரிப்பில் 2 ட்ரில்லியன் ரூபா எல்லையைக் கடந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இவ்வருட ஜனவரி 1 ஆம் திகதி முதல் செப்டம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் 2,040 பில்லியன் ரூபாவாகும்.

2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் சேகரிக்கப்பட்டிருந்த 1,642 பில்லியன் ரூபா வருமானத்துடன் ஒப்பிடுகையில், இது 398 பில்லியன் ரூபா அதிகரிப்பாகும்.

2026 ஆம் ஆண்டிற்கான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருடாந்த வருமான மதிப்பீடு 2,401 பில்லியன் ரூபாவாவதுடன், செப்டம்பர் 30 ஆம் திகதியளவில் அதில் 85 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே, செப்டம்பர் மாதத்தில் மட்டும் 288 பில்லியன் ரூபா வருமானம் சேகரிக்கப்பட்டுள்ளதுடன், இது கடந்த ஆண்டின் செப்டம்பர் மாதத்தின் 216 பில்லியன் ரூபா வருமானத்துடன் ஒப்பிடுகையில் 72 பில்லியன் ரூபா அதிகரிப்பாகும்.

வரி செலுத்துவோரின் தன்னார்வ வரி செலுத்தும் ஆர்வம் மற்றும் வரி நிர்வாகத்தின் திறம்பட்ட செயற்பாடு ஆகியன இந்த வருமான வளர்ச்சிக்குப் பங்களித்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## நச்சுப் பழங்களை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை



நச்சுப் பொருட்கள் அடங்கிய பழங்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி முதல் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற "நச்சற்ற பழங்கள் பிள்ளைகளுக்கு" எனும் கருப்பொருளிலான தேசிய வேலைத்திட்டத்தை பிரகடனப்படுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் நாடு முழுவதிலும் உள்ள பழக்கடைகள் மற்றும் மொத்த விநியோகஸ்தர்களைப் பதிவு செய்யும் பணிகளும் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படும் எனக் கூறினார்.

நச்சு இரசாயனங்களைப் பயன்படுத்தாமல் பழங்களைப் பழுக்க வைத்தல், இரசாயனங்களைப் பயன்படுத்தாமல் பண்ணைகளிலிருந்து பழங்களை அறுவடை செய்தல் மற்றும் நுகர்வோருக்கு நம்பிக்கையுடன் விநியோகித்தல் ஆகியவை குறித்து வர்த்தகர்களுடன் கலந்துரையாடி அவர்களை இந்த வேலைத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

வரும் மார்ச் மாதத்திற்குள் நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் நச்சற்ற பழங்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் அடையாளங்காணப்பட்டு, அவற்றுக்குச் சிறப்புச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், நாடு முழுவதிலும் உள்ள பழக்கடைகளை வரைபடமாக்கி, கியூ.ஆர். குறியீட்டின் ஊடாக நச்சற்ற பழங்களை விற்பனை செய்யும் இடங்களைக் கண்டறியக்கூடிய புதிய முறையொன்றும் தயாரிக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். எதிர்வரும் ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் நச்சுப் பொருட்கள் அடங்கிய பழங்களை விற்பனை செய்பவர்களுக்கு எதிராகச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் மீண்டும் வலியுறுத்தினார்.






# படைப்பாளி குகதாவின் “குலதெய்வம்“ கவிதை நூல் வெளியீட்டு விழா!









கிளிநொச்சி வாழ் படைப்பாளி குகதா என அறியப்பட்ட டக்சனா கிருஷ்ணானந்தன் ஆக்கிய “குலதெய்வம்“ கவிதை நூலின் வெளியீட்டு விழா கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள கரைச்சி பிரதேச சபையின் புதிய மண்டப கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. திருகோணமலையில் இயங்கும் “அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை“ கலை இலக்கிய மன்றம் வெளியீடு செய்த இந்த நூலின் வெளியீட்டு விழாவிற்கு குறித்த மன்றத்தின் நிறுவுநர் கனக.தீபகாந்தன் தலைமை வகித்தார்.

நிகழ்வில் இணை பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்களும் கரைச்சி பிரதேச செயலாளர் தவச்செல்வம் முகுந்தன் அவர்களும் பங்கேற்றனர். நிகழ்வு நாளில் மழையின் பொழிவு இருந்த பொழுதும் நிறைவான இலக்கிய பங்கேற்பாளர்கள் அரங்கை நிறைத்தனர்.

சுடர்கள் ஏற்றப்பட்டன. தமிழ்மொழி வாழ்த்தினை கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவன் கலைப்பிரியன் இசைத்தார்.

வரவேற்பு நடனத்தினை கிளிநொச்சி தர்ஷன நிவேதனில் நாட்டியாலய மாணவிகள் வழங்கினார்கள். வரவேற்பு உரையினை ஊட்டச்சத்து நிபுணர் பவித்ரா கணேஸ்வரநாதன் வழங்கினார். நிகழ்ச்சிகளை கிழக்குப் பல்கலைக்கழக மாணவன் நவநேசன் பிரகாஸ் தொகுத்து வழங்கினார்.

ஆசையுரையினை ஆசிரியர் சி.க.சோதிலிங்கம் வழங்கினார்.

தலைமையுரை நிகழ்த்திய “அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை“ கலை இலக்கிய மன்றத்தின் நிறுவுநர் கனக.தீபகாந்தன் அவர்கள் குறிப்பிடும்போது “ஓராண்டு இடைவெளிக்குள் இரண்டாவது நூலினை குகதா அவர்கள் வெளிக்கொண்டு வருவது மகிழ்ச்சி அளிக்கின்றது. தன்னால் இயன்ற தமிழ்ப்பணியினை இடைவிடாது முன்னெடுப்பதன் அடையாளமே அடுத்த நூல் ஆகும்“ என குறிப்பிட்டார். நூலின் வெளியீட்டுரையினை யோ.புரட்சி கவிதை வடிவில் வழங்கினார். சமூகத்தின் அனைத்து பக்கங்களின் பார்வைகளும் குகதாவின் படைப்புகளில் அகப்பட்டு உள்ளன என்றார் அவர்.

நூலினை யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் வெளியிட்டு வைக்க முதலாவது பிரதியினை திரு திருமதி சோதலிங்கம் யாழினி இணையர் இணைந்து பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து பங்கேற்பாளர்கள் நூலினை பெற்றுக் கொண்டனர்.

நூலின் நயப்புரையினை எழுத்தாளரும் தமிழாசிரியருமான கனகரட்னம் செந்தூரன் நிகழ்த்தினார். குகதா அவர்கள் ஏற்கனவே வெளியீடு செய்த தாய்மாமன் நூலினையும் இப்பொழுது வெளியீடு செய்யும் குலதெய்வம் நூலினையும் ஒப்பிட்டு அவரின் வளர்ச்சி நிலைகளை சுட்டிக் காட்டினார்.

உரை நிகழ்த்திய கரைச்சி பிரதேச செயலாளர் தவச்செல்வம் முகுந்தன் அவர்கள் இளைய படைப்பாளர்களின் வருகை கிளிநொச்சி மண்ணில் இலக்கிய வளர்ச்சிக்கு மகிழ்ச்சி அளிக்கும் விடயம் என்றார்.

நூலகரும் அரச இலக்கிய விருதாளருமான வேல்.லவன் அவர்கள் வாழ்த்துரை வழங்கும்போது, இன்றைய இளைய படைப்பாளர்கள் ஆழமான கருப்பொருளினை கவிதை ஆக்க வேண்டிய அவசியம் சமூகத்திற்கு தேவையானது என குறிப்பிட்டார்.







உரை நிகழ்த்திய யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள், “எமது வரலாற்றை வாழ்க்கையை இலக்கியங்கள் பேசிய படியினால்தான் முன்னைய காலங்களை மறவாது இருக்கின்றோம். தொடர்ந்து அது பேசப்பட வேண்டும்“ என்றார்.

நூலாசிரியர் குகதா அவர்கள் ஏற்புரை நிகழ்த்தினார். நன்றியுரையினை கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாக மாணவி சத்தியசீலன் கார்நிலா வழங்கினார்.

இந்த இலக்கிய நிகழ்வில் பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களோடு இளையோரும் பங்கேற்று இருந்தமை இலக்கியம் மீதான நேசத்தை வெளிப்படுத்தியது. ஏற்ற நேரத்தில் அனைத்து நிகழ்வுகளும் நிறைவு பெற்றன.

“குலதெய்வம்“ நூலுக்கான அணிந்துரையினை அரச இலக்கிய விருதாளரும் பொறியியலாளருமான சிவ.ஆரூரன் அவர்கள் எழுத, முகவுரையினை நூலாசிரியர் குகதா எழுதியிருந்தார். வாழ்த்துரையினை ஆசிரியர் சி.க. சோதிலிங்கம் அவர்களும், பதிப்புரையினை வெளியிட்டாளர் சார்பில் கனக.தீபகாந்தன் அவர்களும் எழுதியிருந்தனர்.





பேனா முனையில்

BEHIND ME MEDIA

# வனிதா சேனாதிராஜா: உண்மையைப் பேசும் பெண்களை சமூகம் ஏன் பாதுகாக்கத் தவறுகின்றது?

எங்கள் ஈழத்து மண்ணின் ஒரு பெண். தன் சமூகத்தின் மீதும், தன் மக்களின் மீதும் அக்கறை கொண்டவர். நல்ல ஆசிரியராக வாழ்ந்தவர். குடும்பத்திற்கு அன்பான உறவாகவும், சகோதரியாகவும் இருந்தவர். பலருக்கு நல்ல தோழியாகவும் வாழ்ந்தவர்.

**ஒரு பெண் உண்மையைப் பேசும் போது... அவள் சந்திக்க வேண்டிய வலி, அழுத்தம், அவமானம், தனிமை, அச்சம் இவை எதுவும் ஒரு பெண்ணின் வாழ்க்கையில் “சாதாரணமான விஷயம்” என்று கருதப்படக்கூடாது.**

அவரை நான் நேரில் அறிந்திருக்கவில்லை.

ஆனால் ஒரு மனிதரை அறிந்து கொள்வதற்கு அவருடன் வாழ்ந்திருக்க வேண்டும் என்பதில்லை.

அவர் வாழ்ந்த விதம், அவர் செய்த பணிகள், அவரை அறிந்தவர்கள் இன்று பகிர்ந்து கொள்ளும் நினைவுகள் அவை அனைத்தும் அவரை எனக்கு கொஞ்சம் கொஞ்சமாக அறிமுகப்படுத்துகின்றன. அதனால் தான் இன்று அவரது மரணச் செய்தியைப் பார்க்கும்போது என் மனம் அமைதியாக இல்லை.

அவரை அறிந்த பலர் அவரது மறைவைப் பற்றி எழுதுகிறார்கள். அவருடன் வாழ்ந்த நினைவுகளைப் பகிர்கிறார்கள். அவருடைய சமூக அக்கறையைப் பேசுகிறார்கள். அவருடைய இழப்பை எண்ணி வருந்துகிறார்கள். ஆனால் அந்த இரங்கல்களின் நடுவில் ஒரு கேள்வி மட்டும் தொடர்ந்து நின்றுகொண்டிருக்கிறது.

வனிதாவிற்கு உண்மையில் என்ன நடந்தது?
அவரது மரணம் எவ்வாறு நிகழ்ந்தது?

அது குறித்து எழும் சந்தேகங்களுக்கு முழுமையான, வெளிப்படையான, ஆதாரங்களின் அடிப்படையிலான பதில் கிடைத்திருக்கிறதா?

ஒரு பெண்ணின் மரணத்தை ஒரு வார்த்தைக்குள் அடைத்துவிட்டு, அதற்குப் பின்னால் இருக்கும் உண்மைகளைத் தேடாமல் நாம் கடந்து செல்லலாமா?

ஒரு பெண் உண்மையைப் பேசும்போது...
ஒரு பெண் சுதந்திரமாக வாழ விரும்புகிறாள்.
தன் கருத்தைத் துணிந்து சொல்ல விரும்புகிறாள்.
தவறு என்று நினைப்பதைத் தவறு என்று சுட்டிக் காட்டுகிறாள்.

தன் சமூகத்தின் மீது அக்கறை கொண்டு கேள்வி கேட்கிறாள். அதற்காக அவள் சந்திக்க வேண்டிய வலி, அழுத்தம், அவமானம், தனிமை, அச்சம் இவை எதுவும் ஒரு பெண்ணின் வாழ்க்கையில் “சாதாரணமான விஷயம்” என்று கருதப்படக்கூடாது.

உண்மையாக இருப்பதற்கே ஒருவர் தண்டனை அனுபவிக்க வேண்டிய ஒரு சமூகமாக நாம் இருக்கக்கூடாது. ஒரு பெண் தன் குரலைப் பயன்படுத்துவதற்காக அவளுடைய வாழ்க்கை கடினமாக்கப்படுமானால், அது அந்தப் பெண்ணின் பிரச்சினை மட்டுமல்ல. அது முழு சமூகமும் சிந்திக்க வேண்டிய பிரச்சினை.

வனிதாவின் வாழ்க்கையும், அவர் செய்த சமூகப் பணிகளும், அவரை அறிந்தவர்கள் பகிர்ந்து கொள்ளும் நினைவுகளும் நமக்கு ஒரு விஷயத்தைச் சொல்கின்றன:

சில மனிதர்கள் தங்களுக்காக மட்டும் வாழ்வதில்லை. சமூகத்திற்காக வாழ்கிறார்கள். மக்களுக்காக வாழ்கிறார் கள். தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பின்னுக்குத் தள்ளி, பிறருக்காக தங்களை அர்ப்பணிக்கிறார்கள்.

அப்படிப்பட்ட ஒரு பெண் வாழ்க்கையின் இறுதியில் எந்த வலியைச் சந்தித்தார் என்பதைக் கேட்பது நம்முடைய கடமை. அவருடைய மரணம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் நிகழ்ந்தது என்பதைக் கண்டறிவதும் நம்முடைய சமூகப் பொறுப்பு.

இனி இது சாதாரணமாக இருக்கக்கூடாது. ஒரு பெண் துணிந்து பேசினாள் என்பதற்காக அவளுக்கு எதிராக அழுத்தங்கள் வருவது. ஒரு தவறைச் சுட்டிக்காட்டினாள் என்பதற்காக அவள் தனிமைப்படுத்தப்படுவது. தன் கருத்தில் உறுதியாக இருந்தாள் என்பதற்காக அவள் பல்வேறு வலிகளைச் சந்திப்பது...

இவை அனைத்தையும் பார்த்துவிட்டு, “அவளுடைய வாழ்க்கை அவளுடைய பிரச்சினை...” என்று நாம் கடந்து செல்லக் கூடாது. இனி இப்படியான வலிகள் எந்தப் பெண்ணுக்கும் சாதாரணமாகிவிடக்கூடாது. உண்மையைப் பேசும் பெண்களுக்கு சமூகத்தின் பாதுகாப்பு இருக்க வேண்டும். தங்கள் சமூகத்திற்காக உழைக்கும் பெண்களுக்கு துணை நிற்கும் மனிதர்கள் இருக்க வேண்டும். அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அவர்கள் முற்றிலும் தனியாகச் சுமக்க வேண்டிய நிலை இருக்கக்கூடாது.



அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அவர்கள் முற்றிலும் தனியாகச் சுமக்க வேண்டிய நிலை இருக்கக்கூடாது.

வனிதாவின் மரணம் நமக்கு சொல்லும் செய்தி... வனிதா இன்று நம்மிடையே இல்லை. ஆனால் அவர் வாழ்ந்த வாழ்க்கை நம்மிடம் ஒரு கேள்வியை விட்டுச் சென்றிருக்கிறது.

“நான் துணிந்து பேசினேன். நான் எனக்குத் தெரிந்த உண்மைகளைப் பேசினேன். என் சமூகத்திற்காக நான் என்னால் முடிந்ததைச் செய்தேன். நான் சந்தித்த பாதையை நீங்கள் இனிமேல் எப்படி மாற்றப் போகிறீர்கள்?” என்று அவரது ஆத்மா நம்மிடம் கேட்பதைப் போல இருக்கிறது. அந்தக் கேள்வியை நாம் கேட்க வேண்டும். அதை அப்படியே கடந்து செல்லக்கூடாது.

**நாம் கடந்து செல்லக்கூடாத மரணம் அவர் என்ன வலியைச் சந்தித்தார்?
எந்த சூழ்நிலையில் அவரது வாழ்க்கை முடிந்தது?**

**அவரது மரணத்தைச் சுற்றி எழும் கேள்விகளுக்கு என்ன பதில்?**



ஒரு பெண் சமூகத்திற்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்திருந்தால், அவள் வாழ்ந்த காலத்தில் அவளுக்குத் துணையாக இருப்பது மட்டுமல்ல அவள் எதிர்கொள்ளும் ஆபத்துகளையும் வலிகளையும் கவனிப்பதும் சமூகத்தின் பொறுப்பு.

அவள் இறந்த பிறகு மலர் வைப்பதைவிட, அவள் வாழ்ந்தபோது அவளுக்குத் துணையாக நிற்பதே மனிதநேயம். இது வனிதாவுக்காக மட்டும் சொல்லப்பட வேண்டிய வார்த்தை அல்ல. இனிமேல் உண்மைக்காகப் பேசப்போகும் ஒவ்வொரு பெண்ணுக்காகவும் சொல்லப்பட வேண்டிய வார்த்தை.

நாம் கடந்து செல்லக்கூடாத மரணம் அவர் என்ன வலியைச் சந்தித்தார்? எந்த சூழ்நிலையில் அவரது வாழ்க்கை முடிந்தது? அவரது மரணத்தைச் சுற்றி எழும் கேள்விகளுக்கு என்ன பதில்?

இந்தக் கேள்விகள் அனைத்திற்கும் உண்மையான பதில் கிடைக்க வேண்டும். உண்மை வெளிவர வேண்டும் என்பதற்காக. நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக. இனிமேல் இன்னொரு பெண் இப்படியான சூழ்நிலையைச் சந்திக்காமல் இருப்பதற்காக.

இந்தக் கேள்விகள் அனைத்திற்கும் உண்மையான பதில் கிடைக்க வேண்டும்.

உண்மை வெளிவர வேண்டும் என்பதற்காக.
நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக.

அந்தச் செய்தியை நாம் கேட்க வேண்டும்.
அந்த உண்மையைத் தேட வேண்டும்.
அதற்கான நியாயமான தீர்வை நாட வேண்டும்.
ஏனென்றால் ஒரு பெண் இறந்துவிட்டாள் என்று சொல்லிவிட்டு நாம் கடந்து சென்றால்,
அவளுடைய மரணத்தை மட்டுமல்ல்
அவள் வாழ்ந்த வாழ்க்கை முழுவதும் நமக்கு சொல்லிச் சென்ற செய்தியையும் நாம் கடந்து செல்கிறோம்.

வனிதாவை நினைவுகூர்வது என்பது அவருடைய மரணத்திற்கு இரங்குவது மட்டும் அல்ல.

அவர் வாழ்ந்த உண்மையை மதிப்பதும், அவர் எழுப்பியிருக்கக்கூடிய கேள்விகளுக்குப் பதில் தேடுவதும், இனிமேல் உண்மையாக வாழும் பெண்களுக்கு பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குவதும்தான்.

அவர் வாழ்ந்த விதம், அவர் செய்த பணிகள், அவரை அறிந்தவர்கள் இன்று சொல்லும் நினைவுகள் அவை அனைத்தும் அவரைப் பற்றி கொஞ்சம் கொஞ்சமாக எனக்கு அறிமுகப்படுத்துகின்றன.

அதனால்தான் இன்று அவரது மரணச் செய்தியைப் பார்க்கும்போது மனம் அமைதியாக இருக்கவில்லை.

பலரும் அவரது மரணத்தைப் பற்றி எழுதுகிறார்கள்.
அவரை நினைத்து வருந்துகிறார்கள்.
அவருடன் பழகியவர்கள் தங்களுடைய நினைவுகளைப் பகிர்கிறார்கள்.

ஆனால் அந்த நினைவுகளுக்கு நடுவில் ஒரு மிகப் பெரிய கேள்வி நின்றுகொண்டிருக்கிறது.

வனிதாவுக்கு என்ன நடந்தது? அவரது மரணம் எவ்வாறு நிகழ்ந்தது? அது உண்மையில் தற்கொலையா? அல்லது வேறு ஏதாவது நடந்ததா? இந்தக் கேள்விகளுக்கு உண்மையான, வெளிப்படையான, ஆதாரங்களின் அடிப்படையிலான விசாரணை கிடைக்க வேண்டாமா?

ஒரு பெண்ணின் மரணத்தை மிக எளிதாக ஒரு வார்த்தைக்குள் அடைத்துவிட்டு “தற்கொலை” என்று சொல்லிவிட்டு அதன் பின்னால் இருக்கும் உண்மைகளைத் தேடாமல் விட்டுவிட முடியுமா?

ஒரு பெண் சுதந்திரமாக வாழ்ந்தால், தன் கருத்தைத் துணிந்து சொன்னால், தன் காலில் தானே நிற்க முயன்றால், அவள் வாழ்வைச் சுற்றி கேள்விகள் எழுப்பப்பட வேண்டுமா?

வனிதாவின் வாழ்க்கையைப் பற்றிக் கிடைக்கும் பதிவுகள், அவர் சமூக அக்கறையுடனும் கலைப் பணியுடனும் இயங்கியவர் என்பதை காட்டுகின்றன. The Ruins என்ற குறும்படத்துடன் அவரது பெயர் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது ஜா·.ப்னா சர்வதேச திரைப்பட விழாவிலும் அவரது படைப்புப் பங்களிப்பு பதிவாகியுள்ளது.

அப்படியான ஒரு பெண்ணின் மரணம் இன்று கேள்விக்குறியாக நிற்கும்போது, அந்தக் கேள்வியை எழுப்புவது குற்றமல்ல.

உண்மை வெளிவர வேண்டும் என்பதுதான் கோரிக்கை.
ஒரு பெண்ணின் உயிருக்கும், அவளுடைய குடும்பத்திற்கும், அவளை நேசித்தவர்களுக்கும் உண்மை தெரிந்தாக வேண்டும் என்பதற்காக.

ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பற்றி பல கதைகள் சொல்ல முடியும். ஆனால் அவளுடைய மரணத்தைப் பற்றி உண்மை ஒன்றுதான் இருக்க முடியும்.

அந்த உண்மை எது?

அதைத் தெரிந்து கொள்ள வேண்டியது இந்த சமூகத்தின் பொறுப்பு.

வனிதா உயிரோடு இருந்தபோது அவரை முழுமையாக அறியாதவர்களாக இருக்கலாம் நாம். ஆனால் அவரது மரணத்திற்குப் பிறகு எழும் கேள்விகளைப் புறக்கணிக்கக் கூடாது.

அவள் ஒரு மரணச் செய்தியாக மட்டும் மறைந்து போகக்கூடாது. அவளுடைய வாழ்க்கையும் பேசப்பட வேண்டும். அவளுடைய பணியும் நினைவுகூரப்பட வேண்டும். அவளுடைய மரணம் குறித்த உண்மையும் வெளிச்சத்திற்கு வர வேண்டும்.

“அவருக்கு உண்மையில் என்ன நடந்தது?”

என்ற கேள்விக்கான உண்மையான பதிலைத் தேடுவதுதான்.

ஒரு பெண்ணின் குரல் அவளுடன் முடிந்து விடக்கூடாது.

அவள் வாழ்ந்த உண்மையும்,
அவள் விட்டுச் சென்ற தடங்களும்,
அவள் மரணம் எழுப்பிய கேள்விகளும்
தொடர்ந்து பேசப்பட வேண்டும்.

நன்றி -சந்திரிகா

# தியாக தீபம் திலீபனின் திருவுருவச் சிலையை மீள நிறுவக்கோரிய போராட்ட நிறைவு நாள்!

BEHIND ME MEDIA

அகற்றப்பட்ட தியாக தீபம் திலீபனின் திருவுருவச் சிலையை மீள நிறுவக்கோரி நடைபெற்ற போராட்டம் கடந்த வெள்ளிக்கிழமையுடன் தற்காலிகமாக நிறைவடைந்தது. மக்கள் உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்திய காட்சிகள்.


















## தையிட்டி விகாரையை சூழ தனியார் காணியில் புதிய கட்டுமானங்கள்

தையிட்டி விகாரையைச் சூழவுள்ள தனியார் காணியில் மேலும் புதிய கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து, அதனை நேரில் பார்வையிடச் சென்ற பிரதேச சபை உறுப்பினர்களுக்கு காணிக்குள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டு, அவர்கள் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் இடம்பெறும் புதிய கட்டுமானங்கள் தொடர்பில் தகவல் அறிந்த பிரதேச சபை உறுப்பினர்கள் சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமையை பார்வையிட முயன்றுள்ளனர்.

எனினும், காணிக்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்படாத நிலையில், உறுப்பினர்கள் அங்கிருந்து திரும்பிச் சென்றுள்ளனர்.

குறித்த கட்டுமானப் பணிகள் தொடர்பான மேலதிக தகவல்கள் மற்றும் அனுமதிகள் குறித்து பிரதேச சபை மட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

## மின்கம்பம் நடச் சென்றவர் மின்சாரம் தாக்கி உயிரிழப்பு!

கடவத்தை - மன்கட வீதி பகுதியில் உயர் அழுத்த மின்சார விநியோகத்தை துண்டிக்காமல் மின் கம்பமொன்றை சீரமைக்க முயன்ற நான்கு மின்சார ஊழியர்கள் மின்சாரம் தாக்கி விபத்துக் குள்ளாகியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் அவர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மேலும் இரு ஊழியர்கள் பலத்த காயமடைந்து ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பாம் எண்ணெய் இறக்குமதி தடையை நீக்க நடவடிக்கை?



நுகர்வோரின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு 2021 ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட பாம் எண்ணெய் இறக்குமதித் தடையை மீண்டும் நீக்குவதற்கு சில தரப்புகள் ஆயத்தமாகி வருவதாக நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

பாம் எண்ணெய் இறக்குமதி மீதான தடையை எக்காரணம் கொண்டும் நீக்க வேண்டாம் என அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பான உத்தியோகபூர்வ கடிதம் ஒன்றை அவர் வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்கவிடம் கையளித்துள்ளார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ரஞ்சித் விதானகே, இந்த இறக்குமதி முயற்சிக்கு பின்னால் ஊழல் நிறைந்த அதிகாரிகளும், மோசடி வியாபாரிகளும் செயல்பட்டு வருவதாகக் குற்றம் சாட்டினார்.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்த அவர், "இந்த நடவடிக்கைகளுக்குப் பின்னால் மோசடி வர்த்தகர்களும் ஊழல் அதிகாரிகளும் உள்ளனர். எனவே, இது குறித்து நாங்கள் இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்து கிறோம்.

இறுதியாக நாங்கள் கேட்டுக்கொள்வது என்னவென்றால், நாட்டிற்கு பாம் எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டாம் என்பதே ஆகும்" எனக் குறிப்பிட்டார்.

## ஈழத்தில் தமிழ் ஆராய்ச்சி நிலையம்!





அரசடி வீதி (தட்டாதெரு) யாழ்ப்பாணத்தில்

சிவபூமி தமிழ் ஆராய்ச்சி நிலையம் அடிக்கல் நாட்டு விழா கடந்த வருடம் விஜயதசமி நாளான 02.10.2025 அன்று கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டட வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஒரு வருட நிறைவில் கட்டட வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகிறது. நான்கு மாடி கட்டடமாக பிரமாண்டமாக அமைக்கப்பட்டு வருகின்ற ஆராய்ச்சி நிலையமானது எதிர்வரும் ஜனவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

தமிழ் ஆராய்ச்சி நிலையம்

ஈழத்து இலக்கியம் அனைத்தையும் பாதுகாக்கவும் , ஈழத்து படைப்பாளிகள் பற்றிய தகவல்களை சேர்க்கவும், ஆராயவும் வெளியீட்டு விழாக்கள் நடாத்தவும் நிலையம் உருவாக்கத் திட்டமிடப் பட்டுள்ளமை சிறப்பிற்குரியது.

BEHIND ME MEDIA




### அத்தியாயம் - 3

சத்திய வதியின் மகனான சித்திராங்கதன் காந்தவர்வன் ஒருவனால் கொல்லப்பட்டதால் அவனது தம்பி விசித்திரவீரியனுக்கு முடிசூட்டப்பட்டது. விசித்திரவீரியனுக்குத் திருமண வயது வந்தது. காசி ராஜன் தனது மூன்று கன்னிப்பெண்களுக்கும் சுயம்வரம் நடாத்த நாள்க்குறித்தான். இதை அறிந்த பீமர் தனது தம்பிக்குப் பெண்பார்க்கக் காசிராஜன் நடத்தும் சுயம்வரமண்டபத்திற்குச் சென்றார். அங்கு பல தேசத்து அரசகுமாரர்கள் கூடி இருந்தனர்.

பீஷ்மர் சுயம்வரம் நடைபெறும் மண்டபத்தை அடைந்ததும் அவரைக்கண்ட ராஜகுமாரர்கள் பயந்தனர். அவரை வெல்ல முடியாதென்று பலர் விலகிச் சென்றனர். பீஷ்மர் தனது தம்பிக்குப் பெண் பார்க்க வந்திருக்கிறார் என்ற விடயம் யாருக்கும் தெரியாது. தான்மணம் செய்யவே சுயம்வர மண்டபத்துக்கு வந்துள்ளார் என்று எண்ணினர்.

அதனால் சபையில் சலசலப்பு ஏற்பட்டது, ‘பிரம்மச்சரியாகவே காலம் முழுவதும் வாழ்வேன் என்று சத்தியம் செய்து விட்டு இவ் வயோதிப வயதிலா பீஷ்மருக்குத் திருமண ஆசை வந்தது’ என்று பலரும் பரிகசித்தனர். அதனால் கோபம் கொண்ட பீஷ்மர் அங்கு வந்திருந்த அனைத்து அரசர்களையும் போருக்கழைத்துப் போரிட்டார். அனைவரும் தோற்று ஓடினர். அதனால் பீஷ்மர் மூன்று பெண்களையும் தனது தேரில் ஏற்றிக் கொண்டு அஸ்தினாபுரத்திற்குப் புறப்பட்டார்.

சௌடாள தேசத்து அரசன் சால்வன், காசிராஜனின் மூத்த மகளான அம்பையை விரும்பியிருந்தான். அம்பையும் அவனை விரும்பினாள். அதனால் சால்வன் பீஷ்மரோடு கடும் யுத்தம் புரிந்தான். இறுதியில் அவன் தோற்றமையால் பீஷ்மர் அவனைக் கொல்ல நினைத்தார். காசி ராஜனின் புத்திரிகள் மூவரும் அவனைக்கொல்ல வேண்டாமென்றும், அவனுக்கு அம்பையைத் திருமணம் செய்து கொடுக்கும் படியும் இரந்தனர். அதற்குப் பீஷ்மர் உடன்பட்டார். அம்பையின் சகோதரிகளான அம்பிகை, அம்பாலிகை என்ற இருவரையும் விசித்திரவீரியனுக்குத் திருமணம் செய்து வைத்தார்.

அம்பை தனது காதலனான சால்வவனிடம் சென்றாள் “ அரசநியதிப் படி நீ பீஷ்மரின் மனைவியானவள். அதனால் உன்னை நான் ஏற்கமாட்டேன்” என்று கூறினான் சால்வன். இதனால் மனவருத்தமடைந்த அம்பை, பீஷ்மரிடஞ் சென்று தன்னைத் திருமணம் செய்து கொள்ளும் படி வற்புறுத்தினாள். பீஷ்மர் தனது சத்திய வார்த்தையை எடுத்துக்கூறி அவளைத் திருமணம் செய்ய மறுத்துவிட்டார். அதனால் பெருந்துன்பப்பட்ட அம்பை பீஷ்மரிடம் நியாயம் கேட்குமாறு முனிவர்களையும் ரிஷிகளையும் அரசர்களையும் வேண்டினாள்.

அவர்கள் பீஷ்மருக்குப் பயந்து நியாயம் கேட்கவில்லை. அதன்பின் அம்பை முருகனை நினைத்துப் பல காலம் தவஞ் செய்தாள். அவளின் தவத்தின் வலிமையை உணர்ந்த முருகப்பெருமான் அவளுக்கு ஒரு வாடாத தாமரைப் பூமாலையைக் கொடுத்து, “இந்த மாலையை அணிந்து கொண்டு பீஷ்மருடன் போர் செய்பவன் பீஷ்மரைக் கொல்வான்.” என்று கூறினார்.

அம்பை அந்த மாலையுடன் எல்லா அரசர்களையும் சந்தித்துத் தனது கருத்தைச் சொன்னாள். யாரும் அதைக்கேட்டு நிறைவேற்ற முன்வரவில்லை. இறுதியாக ஒரு முனிவர் “பெண்ணே, உனக்கு நேர்ந்த நிலையைப்பற்றிப் பரசு ராமரிடம் சென்று சொல். அவர்தான் உனக்கு நீதி வழங்குவார்” என்றார்.

அம்பைக்கு நடந்த அநீதியைக் கேட்டுக் கொதித்தெழுந்த பரசுராமர் பீஷ்மருடன் போர் செய்து தோற்றுப்போனார். அதனால் அவரால் பீஷ்மரைத் தண்டிக்க முடியவில்லை. அம்பைமிக்க வருத்தத்துடன் இமய மலைக்குச் சென்று சிவனை நினைத்துத் தவம் செய்தாள். சிவன் அவள் முன் தோன்றி “அம்பையே, நீ இன்னொரு பிறப்பெடுப்பாய். அதில் நீ பீஷ்மரைக் கொல்வாய்” என்றார்.

உடனே அம்பை தீமூட்டி அதனுள் விழுந்து உயிர் துறந்தாள் சிவனின் வரப்படி அம்பை துருபதராஜனின் மகளாகப் பிறந்தாள். அவள் வளர்ந்த பின், முன்பு துருபதராஜனின் அரண்மனைக்கு வந்து முருகன் கொடுத்த பூமாலையைத் துருபதராஜனிடம் கொடுத்துப் பீஷ்மரைக் கொல்லும்படி வேண்ட அவன் மறுத்துவிட்டான்.

அதனால் கோபம் கொண்ட அம்பை அம்மாலையைத் துருபதனது வாசலில் வீசிவிட்டுச் சென்றாள். அம்மாலை அவள் வந்து பார்த்தபோது அது வாடாமல் இருந்தது. அதனால் அதை எடுத்துத் தான் அணிந்து கொண்டாள். அதைக்கண்டு துருபதன் பயங்கொண்டான். பீஷ்மர் தன்னைக்கொன்று விடுவார் எனப் பயந்தான். அதனால் அம்பை வனத்திற்குச் சென்று தவம் செய்து ஆண் தன்மையைப் பெற்றாள்.

பீஷ்மர் சிறைப்பிடித்துக் கொண்டுவந்த அம்பிகை அம்பாலிகை என்ற இருபெண்களையும் விசித்திர வீரியன் திருமணம் செய்து கொண்டான். அம்பிகைக்குத் திருதராட்டினனும் அம்பாலிகைக்குப் பாண்டு என்ற மகனும் பிறந்தனர். திருதராட்டினன் காந்தாரியை மணந்து நூறு பிள்ளைகளைப் பெற்றெடுத்தான். பாண்டு குந்தியை மணந்து ஐவரைப் பெற்றெடுத்தாள்.










BEHIND ME MEDIA







## உலகில் புகழ்பெற்ற 10 பெரிய ஆளுமைகள்:

மகாத்மா காந்தி - இந்தியா
நெல்சன் மண்டேலா - தென்னாப்பிரிக்கா
அன்னை தெரசா - இந்தியா
ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் - ஜெர்மனி
மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் - அமெரிக்கா
ஆபிரகாம் லிங்கன் - அமெரிக்கா
ஸ்டீபன் ஹாக்கிங் - இங்கிலாந்து
மேரி கியூரி - போலந்து/பிரான்ஸ்
லியோனார்டோ டா வின்சி - இத்தாலி
சுவாமி விவேகானந்தர் - இந்தியா

## 5 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்




## ரோஜா பூ

ரோஜா பூ உலகில் மிகவும் பிரபலமானதும் அழகானதுமான மலர்களில் ஒன்றாகும். இது பல வண்ணங்களில் காணப்படுகிறது. சிவப்பு, வெள்ளை, மஞ்சள், இளஞ்சிவப்பு போன்ற நிறங்களில் ரோஜாக்கள் மலர்கின்றன.

ரோஜா பூவின் இதழ்கள் மென்மையாகவும் அழகாகவும் இருக்கும். சில வகை ரோஜாக்களுக்கு இனிமையான மணமும் உண்டு. ரோஜா செடிகளில் முட்கள் இருப்பதால் அவற்றை கவனமாக கையாள வேண்டும்.

ரோஜா பூ அன்பு, நட்பு மற்றும் அழகின் அடையாளமாகக் கருதப்படுகிறது. பிறந்தநாள், திருமணம் மற்றும் பல்வேறு விழாக்களில் ரோஜாக்கள் பரிசாக வழங்கப்படுகின்றன. ரோஜா பூக்களிலிருந்து வாசனைத் திரவியங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன. ரோஜா செடிகளை வீட்டுத் தோட்டங்களிலும் பூங்காக்களிலும் வளர்க்கலாம். இயற்கையின் அழகை அதிகரிக்கும் ரோஜா பூ, அனைவரையும் கவரும் ஒரு சிறந்த மலராகும்.













BEHIND ME MEDIA
CANADA
HUMANITY
SINCE 2024
BEHIND ME FOUNDATION
மனிதநேயம் - Behind me foundation
வாழ்வாதாரத்தைத் தேடும் கரங்களை பலப்படுத்தும் நோக்கோடு கடந்த 2024 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது மனிதநேயம் - Behind me foundation நிறுவனம் தனிநபர்களுக்கும் பேரிடர்களால் நிலைகுலையும் மக்களுக்குமான சேவைகளைத் தொடர்ச்சியாக ஆற்றிவருகின்றது.
உதவிகள் தேவைப்படுவோர் Behind me foundation ஊடாக எம்மைத் தொடர்புகொள்ளும் பட்சத்தில் உங்களுக்கான தேவைகளை நாம் எமது ஊடகங்களின் வாயிலாக அறிவித்து தனி நபர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஊடாக உங்களுக்கான அனுசரணைகளைப் பெற்றுத் தருவோம்.
எமது சேவைகள்
உதவிகளை பெற்றவர்கள் - வழங்கியவர்கள் பணம் மற்றும் பொருள் விபரங்களின் வெளிப்படைத்தன்மை பேணப்படும்.
உதவி தேவைப்படும் மக்கள் மற்றும் காரணங்கள்
உதவிகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள்
உதவிகள் உரியவர்களைச் சென்றடைந்த உறுதிப்படுத்தல்கள்
எமது Behind me International Media
ஊடக வலையமைப்பில் பகிரப்படும்
தொடர்புக்கு
இலங்கை - +94 76239 0159
இந்தியா - + 91 917632 3079
கனடா - + 437 688 3493
மின்னஞ்சல் - info@behindmemedia.com
BEHIND ME FOUNDATION
உதவுவது நம் கடமை
மாற்றம் கொண்டுவருவது நம் குறிக்கோள்
நாம் இணைவோம்... பலரை உயர்வோம்...




# தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்



அக்கரப்பத்தனை பெருந்தோட்ட நிறுவனத்திற்குட்பட்ட வௌரலி, போட்மோர், மோனிங்டன் மே பிரிவு, மோனிங்டன் கீழ் பிரிவு மற்றும் ஆட்லி ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 600 தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தோட்ட நிர்வாகத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 1,700 ரூபாய் சம்பளம் எவ்வித பிரச்சினைகளுமின்றி வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை தினங்களில் தொழில் செய்வோருக்கு கைகாசு அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும் என்றும் தேயிலை கொழுந்து பறிப்புக்கு ஒரு கிலோகிராமுக்கு 90 ரூபாய் என்ற அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும் என்றும் தோட்ட நிர்வாகம் அறிவித்துள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நடைமுறை நடைமுறைப்படுத்தப்பட்டால் அரசாங்கத்தினால் வழங்கப்படும் 200 ரூபாய் கொடுப்பனவைப் பெறுவதில் பாதிப்பு ஏற்படக்கூடும் என்றும் தொழிலாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

மேலும், தோட்டப் பகுதிகள் முறையாக பராமரிக்கப்படாமல் காடுகளாக காணப்படுவதால், தொழிலாளர்களுக்கு வழக்கமான முறையில் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே, தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து உரிமைகள் மற்றும் சலுகைகளையும் தோட்ட நிர்வாகம் முறையாக வழங்க வேண்டும் எனக் கோரி இந்த வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் மூன்று மணித்தியாலங்கள் இந்த போராட்டம் இடம்பெற்றதுடன், பின்னர் தோட்ட நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

எனினும், பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு எட்டப்படாத நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் அங்கிருந்து கலைந்து சென்றுள்ளனர். தொழிலாளர்களின் கோரிக்கைகள் தொடர்பில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தொழிற்சங்கங்கள் மற்றும் தோட்ட நிர்வாகம் தொடர்ந்து கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.






## ‘பிரெஸ்ட் ஸ்ட்ரோக்’ நீச்சலில் சாதித்த சிறுவன் ரகுநாதன் ஜெய்ஹரி




செப்டம்பர் 30ஆம் திகதி சென். பெனடிக்ட் கல்லூரி நீச்சல் தடாகத்தில், சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்கள் முன்னிலையில் இந்த முயற்சி நடைபெற்றது.

இதன்போது, 50 மீற்றர் தூரத்தை ‘பிரெஸ்ட் ஸ்ட்ரோக்’ முறையில் 1 நிமிடம் 2 விநாடிகளில் கடந்து ஜெய்ஹரி சாதனை படைத்தார்.

முயற்சியைப் பரிசீலித்த நடுவர்கள், அது உலக சாதனையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து ஜெய்ஹரிக்கு சான்றிதழ், தங்கப் பதக்கம், நினைவுக் கேடயம் உள்ளிட்ட கௌரவங்கள் வழங்கப்பட்டன.

6 வயதிலேயே நீச்சலில் உலக சாதனை படைத்துள்ள ஜெய்ஹரியின் இந்தச் சாதனை, அவரது பெற்றோர், பயிற்றுநர்கள் மற்றும் சென். பெனடிக்ட் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளதுடன், இளம் தலைமுறையினருக்கும் ஊக்கமளிக்கும் சாதனையாக அமைந்துள்ளது.

கொழும்பில் வசிக்கும் ரகுநாதன் - லக்ஷ்மி தம்பதியரின் 6 வயது மகன் ஜெய்ஹரி, நீச்சலில் புதிய உலக சாதனை படைத்து இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளார். இவர் கொழும்பு சென். பெனடிக்ட் கல்லூரியில் முதலாம் வகுப்பில் கல்வி கற்று வருகிறார்.



நீச்சலில் சிறுவனுக்கு இருந்த ஆர்வத்தையும் திறமையையும் கண்டறிந்த பெற்றோர், அவரை ஊக்குவித்து பயிற்சிக்கு அனுப்பியுள்ளனர். இதன்படி, சென். பெனடிக்ட் கல்லூரியின் ‘பென்ஸ் அகுவாட்டிக்ஸ்’ நீச்சல் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற ஜெய்ஹரி, குறிப்பாக ‘பிரெஸ்ட் ஸ்ட்ரோக்’ முறையில் சிறப்புத் திறனை வெளிப்படுத்தியுள்ளார்.

மூத்த நீச்சல் பயிற்றுநர் கசுன் வர்ணக டி சில்வாவின் வழிகாட்டுதலுடன் தீவிர பயிற்சி மேற்கொண்ட ஜெய்ஹரியின் திறமையை அடிப்படையாகக் கொண்டு, உலக சாதனை முயற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

## குரோஷியாவை துவம்சம் செய்து இங்கிலாந்து அபார வெற்றி



அண்மைய ஆண்டுகளில் இல்லாத வகையில், இங்கிலாந்து அணி தனது மிகச்சிறந்த மற்றும் ஆதிக்கம் நிறைந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி குரோஷியாவை 7-0 என்ற கோல் கணக்கில் துவம்சம் செய்து வரலாற்று வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

குரோஷியாவின் பின்களவீரர் ஜோஸ்கோ கவிரால் பந்தை இழந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, ஜூட் பெல்லிங்ஹாம் கொடுத்த அற்புதமான பந்துப் பரிமாற்றத்தை ஹரி கேன் தனது முதல் தொடுதலிலேயே கணக்கச்சிதமாக கோலாக்கி இங்கிலாந்தை 1-0 என முன்னிலைப்படுத்தினார்.

புகாயோ ஸாகாவின் பந்துப் பரிமாற்றத்தைப் பெற்ற அந்தனி கோர்டன், பந்தை பெல்லிங்ஹாமிற்கு தூக்கி வீச, அவர் மிக அருகிலிருந்து சுலபமாக கோல் அடித்தார்

ஜாரெல் குவான்சாவிடமிருந்து வந்த பந்தை தலையால் முட்டி கோர்டன் இங்கிலாந்தின் மூன்றாவது கோலைப் பதிவு செய்தார்.

கோர்டன் மற்றும் பெல்லிங்ஹாம் கூட்டணியின் ஆட்டத்தை தொடர்ந்து, ஸாகாவிற்கு கிடைத்த வாய்ப்பை கோலாக்கி முதற்பாதியிலேயே இங்கிலாந்தை 4-0 என அசைக்க முடியாத நிலைக்கு உயர்த்தினார்.

எலியட் அன்டர்சன் மற்றும் ஸாகா இணைந்து உருவாக்கிய அருமையான நகர்வின் முடிவில், கேன் சறுக்கி தனது இரண்டாவது கோலை அடித்து 5-0 என மாற்றினார்.

குரோஷிய வீரர் யோசிப் ஸ்டனிசிச்சின் தவறான பந்துப் பரிமாற்றத்தை இடைமறித்த ஸாகா, கேனிடமிருந்து பந்தைப் பெற்று மீண்டும் ஒருமுறை வலைக்குள் தள்ளி தனது 2ஆவது கோலை அடித்தார். போட்டியின் முடிவில் மாற்று வீரராக வந்த மோர்கன் ரோஜர்ஸ், கோல் காப்பாளரை லாவகமாகத் தாண்டிச் சென்று பந்தை வலைக்குள் தள்ளி 7-0 என்ற பிரமாண்டமான வெற்றியை முழுமை செய்தார்.

## கெய்லின் உலக சாதனையைத் தகர்த்த பிரிட்டோரியஸ்

தென் ஆப்பிரிக்காவின் இளம் அதிரடி வீரர் லுவான்-ட்ரே பிரிட்டோரியஸ், டி20 கிரிக்கெட்டில் புதிய வரலாறு படைத்துள்ளார்.



புளூம்ஃபோன்டெய்னில் நடைபெற்ற கிரிக்கெட் தென் ஆப்பிரிக்கா டி20 சேலஞ்ச் தொடரில் டைட்டன்ஸ் அணிக்காக விளையாடிய அவர், நைட்ஸ் அணிக்கு எதிராக வெறும் 79 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 188 ரன்கள் குவித்து, கிறிஸ் கெய்லின் நீண்டகால சாதனையை முறியடித்தார்.

இதன் மூலம் ஆடவர் டி20 கிரிக்கெட்டில் அதிகபட்ச தனிநபர் ஸ்கோர் என்ற சாதனை பிரிட்டோரியஸ் வசமாகியுள்ளது. 2013-ம் ஆண்டு ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்காக விளையாடிய கிறிஸ் கெய்ல், புனே வாரியர்ஸ் அணிக்கு எதிராக 66 பந்துகளில் 175 ரன்கள் விளாசியதே இதுவரை சாதனையாக இருந்தது. அந்த சாதனையை 13 ஆண்டுகளுக்குப் பிறகு பிரிட்டோரியஸ் முறியடித்துள்ளார்.

20 வயதான பிரிட்டோரியஸ், இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே நைட்ஸ் பந்துவீச்சாளர்களை துவம்சம் செய்தார். 24 பந்துகளில் அரைசதத்தை எட்டிய அவர், அடுத்த 16 பந்துகளில் சதத்தை நிறைவு செய்தார். அதன்பிறகு வேகத்தை மேலும் அதிகரித்த அவர், 58 பந்துகளில் 150 ரன்களை எட்டினார். இறுதியில் 79 பந்துகளில் 188 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

அவரது அதிரடி இன்னிங்ஸில் 15 பவுண்டரிகளும், 13 சிக்சர்களும் அடங்கும். நைட்ஸ் அணியின் அனைத்து பந்துவீச்சாளர்களும் செம சாத்து வாங்கினார்கள். அனைவருமே சராசரியாக ஓவருக்கு 11-க்கும் அதிகமாக ரன்களை வாரி வழங்கினர். பிரிட்டோரியஸின் அதிரடி காரணமாக டைட்டன்ஸ் அணி 20 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 267 ரன்கள் குவித்தது. சிஎஸ்ஏ டி20 சேலஞ்ச் வரலாற்றில் இது இரண்டாவது அதிகபட்ச அணி ஸ்கோராகும். 2022-ம் ஆண்டு இதே நைட்ஸ் அணிக்கு எதிராக டைட்டன்ஸ் 3 விக்கெட்டுக்கு 271 ரன்கள் குவித்ததே முதலிடத்தில் உள்ளது. அந்தப் போட்டியில் டிவால்ட் பிரேவிஸ் 162 ரன்கள் விளாசியிருந்தார்.

தற்போது பிரிட்டோரியஸின் 188 ரன்கள் அந்த சாதனையையும் கடந்து, இந்தத் தொடரில் அதிகபட்ச தனிநபர் ஸ்கோராகியுள்ளது. மேலும், சிஎஸ்ஏ டி20 சேலஞ்ச் வரலாற்றில் அதிகபட்ச ஐந்து டீம் ஸ்கோர்களும் டைட்டன்ஸ் வசமே உள்ளன.

பிரிட்டோரியஸின் 188 ரன்கள் இன்னும் ஒரு சாதனையையும் சமன் செய்துள்ளது. ஆடவர் டி20 கிரிக்கெட்டில் ஒரு இன்னிங்ஸில் அதிக பந்துகளை எதிர்கொண்ட வீரர்கள் பட்டியலில் ஆரோன் ஃபின்ச் மற்றும் மார்கஸ் ஸ்டாய்னிஸுடன் இணைந்து 79 பந்துகள் என்ற சாதனையை அவர் பகிர்ந்துகொண்டுள்ளார். மிக முக்கியமாக, 200 ரன்களை எட்டுவதற்கு பிரிட்டோரியஸுக்கு இன்னும் 12 ரன்கள் மட்டுமே தேவைப்பட்டன. அந்த 12 ரன்களையும் அவர் எடுத்திருந்தால், டி20 கிரிக்கெட்டில் இரட்டை சதம் அடித்த முதல் வீரர் என்ற வரலாற்றுச் சாதனையையும் படைத்திருப்பார்.

2026-27 சீசனில் தனது முதல் போட்டியிலேயே இந்த அதிரடியை வெளிப்படுத்தியுள்ள பிரிட்டோரியஸ், சமீப காலமாகவே அபாரமான ஃபார்மில் உள்ளார். செப்டம்பரில் ஜிம்பாப்வே மற்றும் நமீபியாவுக்கு எதிரான முத்தரப்பு தொடரில் முறையே 94 மற்றும் 101 ரன்கள் எடுத்திருந்தார். சர்வதேச கிரிக்கெட்டில் இதுவரை மூன்று வடிவங்களிலும் சேர்த்து வெறும் 22 போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ள அவர், டி20 கிரிக்கெட்டில் 91 போட்டிகளை நிறைவு செய்துள்ளார். அவரது டி20 ஸ்டிரைக் ரேட் 150.44 என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானை வீழ்த்தி தங்கம் வென்றது இந்திய கிரிக்கெட் அணி!

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இன்று நடைபெற்ற ஆடவர் கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில், பாகிஸ்தானை வீழ்த்தி இந்தியா தங்கப் பதக்கம் வென்றது. இதன்மூலம் 2023 சீனாவின் ஹாங்சோ ஆசிய விளையாட்டு போட்டிகளில் வென்ற தங்கத்தை இந்தியா தக்கவைத்துக் கொண்டது. இந்திய அணியில் அதிகபட்சமாக அபிஷேக் ஷர்மா 61 ரன்கள் மற்றும் திலக் வர்மா ஆட்டமிழக்காமல் 51 ரன்கள் எடுத்தனர். இதன் காரணமாக இந்திய அணி 20 ஓவர்களில் 211 ரன்கள் என்ற வலுவான ஸ்கோரை எட்டியது.

212 என்ற இலக்கை நோக்கி விளையாடிய பாகிஸ்தான் அணிக்கு இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் கடும் நெருக்கடியை அளித்தனர். ஆனாலும், பாகிஸ்தான் அணியின் ஹசன் நவாஸ் சிறப்பாக விளையாடி 96 ரன்கள் குவித்தார். அவர் இறுதிவரை போராடியும் இந்திய அணியின் பந்துவீச்சு, பாகிஸ்தானை சுருட்டியது. இந்தியா சார்பில் அக்சர் படேல், ஷிவம் துபே மற்றும் வாஷிங்டன் சுந்தர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இதன் காரணமாக பாகிஸ்தான் அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 192 ரன்கள் மட்டுமே எடுத்து தோல்வியை தழுவியது.




# இயற்கையாக சாயம் பூசும் அதிசய நதி!



செயற்கை இரசாயனங்கள் இல்லாத, இயற்கையான முறையில் துணிகளுக்கு நிரந்தரமாக சாயம் பூசும் ஒரு வியக்கத்தக்க நதி மத்தியப் பிரதேசத்தில் உள்ள தார் மாவட்டத்தில் பாய்ந்து வருகிறது! உலகப் புகழ்பெற்ற “பாக்“ அச்சுக்கலைக்குப் பின்னால் இருக்கும் இந்த அதிசய நதியின் ரகசியமும், நம் பாரம்பரியக் கைவினைக்கலையின் சிறப்புகளும் உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும்.

இந்தியாவில் இரசாயனங்களைப் பயன்படுத்தாமலேயே துணிகளுக்கு நிரந்தரமாகச் சாயம் பூசக்கூடிய ஒரு நதி இருக்கிறது.

நமக்கு இது சாத்தியமற்றதாக தோன்றலாம். ஆனால் இது முற்றிலும் உண்மை. இந்த யோசனை மத்தியப் பிரதேசத்தில் உள்ள பாக் என்ற கிராமத்து மக்களால் உருவானது. மேலும் இந்த பாக் அச்சுக்களின் மாயாஜாலம், இயற்கையுடனான உறவை, குறிப்பாக பாக் கிராமத்தின் வழியாகப் பாயும் பாகினி நதியை அடிப்படையாகக் கொண்டது.

தார் மாவட்டத்தில் உள்ள பாகின் என்ற சிறிய கிராமத்திலுள்ள இந்த பாகினி ஆறு மற்ற ஆறுகளை விட முற்றிலும் மாறு பட்ட விதத்தில் செயல்படுகிறது. ஆம்!! இந்த ஆறு துணிகளுக்கு வண்ணமளிக்கிறது. இந்த ஆற்றின் நீரில் இயற்கையாகவே கால்சியம் மற்றும் துத்தநாகம் நிறைந்திருக்கும் காரணத்தினால் துணி பட்ட கணமே, சாயங்கள் பிரகாசமாக, அடர்த்தியாக மேலும் உயிர்பெற்றும் மாறுகின்றன. துணிகளும் மென்மையடைகின்றன.

இந்த பாகின் நதியிலிருந்துதான் இந்தியாவின் மிகவும் பிரசித்த பெற்ற இயற்கை ஜவுளிகளில் ஒன்றான “பாக்“ அல்லது “பாகின் பிரிண்ட்“ உருவாகிறது. இந்தக் கைவினைக்கலை தற்போது உலகம் முழுவதும் போற்றப்படுகிறது. ஒரு காலத்தில் இந்திய வரைபடத்தில் ஒரு சிறு புள்ளியாக மட்டுமே இருந்த பாகின் கிராமம், இப்போது இந்த நதிக்காகவும் இந்தக் கலைக்காகவும் உலகளவில் அறியப்பட்டு வருகிறது.

பாகினி நதி நீரில் உள்ள அதிக கனிமச் சத்து, குறிப்பாக அதனுள் அடங்கியுள்ள செம்பு, சாயமிடும் செயல் முறையில் ஒரு இயற்கையான வினையூக்கியாக அல்லது சாயமூன்றியாகச் செயல்பட்டு, செயற்கை இரசாயனங்களின் உதவி இல்லாமலேயே வண்ணங்களை அடர்த்தியாகவும் நீண்ட காலம் நிலைத்திருக்கவும் வழி வகுக்கிறது. இந்த இயற்கையான செயல்முறையானது, துணியில் உள்ள மாவுச்சத்தை நீக்குவதற்காக ஆற்றுக்கற்களில் துணியைக் கழுவும் “காரா“ என்ற முறையுடன் தொடங்குகிறது பின்னர், தாமிரம் நிறைந்த நீரோட்டத்தில் துணி மூழ்கடிக்கப்பட்டு, பிறகு அதை நன்றாக காய வைத்து சாயமிடுவதற்காக தயார் செய்யப்படுகிறது.

இந்த வகை சாய அச்சுக்களின் மிக முக்கியமான அம்சம் கை அச்சுப் பதிப்பு ஆகும். இது புளி, மாதுளைத் தோல், இரும்புத் துரு மற்றும் இலைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தாவரச் சாயங்களைப் பயன்படுத்திச் செய்யப்படுகிறது. சாயம் அச்சிடப் பட்ட பிறகு அலிசரின் மற்றும் தாவடி சாற்றில் அதாவது சிவப்பு அல்லது ஆரஞ்சு படிகம் மற்றும் காட்டாத்தி பூக்களிலிருந்து எடுக்கப்பட்ட சாற்றில் இந்த துணிகள் கொதிக்க வைக்கப் படுகின்றன. இறுதியாக, அந்தத் துணிகளை ஆற்றில் பலமுறை அலசுகிறார்கள்.

ஆறகள் வறண்டு போகும் காரணத்தினாலும் மாசுபடுவதாலும் பாக் அச்சுக்கலையின் எதிர்காலமும் சவால்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. இந்த இயற்கையை தக்க வைக்கும் பொறுப்பு மக்களாகிய நம் கைகளில் தான் இருக்கிறது.

இரசாயன நச்சுகளிலிருந்து விலகி, இயற்கையான முறையில் தயாரிக்கப்படும் ஆடைகளை அணிவதன் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும், இந்தியாவின் பாரம்பரிய கைவினைக்கலையையும் எவ்வித தடையுமின்றி உங்கள் தினசரி வாழ்வில் முழுமையாகப் பெற்றுக்கொள்ளலாம்.

# தானியங்கி ட்ரோன்களை நீருக்கடியில் இயக்கி சீனா கின்னஸ் சாதனை



நீச்சல் குளத்தில் நடத்தப்பட்ட சோதனையில் நூற்றுக்கும் மேற்பட்ட சிறிய ரோபோக்களை ஒரே நேரத்தில் இயக்கி, அதிக எண்ணிக்கையிலான தன்னாட்சி தானியங்கி ட்ரோன்களை இயக்கியதற்கான உலக சாதனையை சீன குழு ஒன்று படைத்துள்ளது

ஷியான் தியான்ஹே மேரிடைம் டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து வடமேற்கு பாலிடெக்னிகல் பல்கலைக்கழகக் குழுவால் ஒரே நேரத்தில் இயக்கப்படும் மிக அதிகமான தன்னாட்சி ட்ரோன்களை இயக்கி உலக கின்னஸ் சாதனையை வெற்றிகரமாக நடத்தியுள்ளனர்.

வடமேற்கு பாலிடெக்னிகல் பல்கலைக்கழகம் வுர்-618 என அழைக்கப்படும் 116 தன்னாட்சி ட்ரோன்களின் இந்த சோதனை ஆகஸ்ட் 29 அன்று நடைபெற்றது என செப்டம்பர் 24 அன்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.



கின்னஸ் உலக சாதனை அதிகாரிகளின் மேற்பார்வையில் 50 மீட்டர் (164 அடிகள்) நீளமும் 20 மீட்டர் (65 அடிகள்) அகலமும் கொண்ட நீச்சல் குளத்தில் இந்த சோதனை நடைபெற்றுள்ளது.. கின்னஸ் அமைப்பினர் இந்த சாதனையை உறுதிப்படுத்தி தங்களது இணையதளத்தில் பதிவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

தன்னாட்சி ட்ரோன்கள் வரிசையாக இயக்கப்பட்டு, மனித தலையீடு ஏதுமின்றி 500 மீட்டருக்கும் அதிகமான தூரத்திற்கு 34 நிமிடங்களுக்கு தன்னாட்சி முறையில் நீருக்கடியில் அணிவகுத்து பயணித்தன. அவை தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட பாதையைப் பின்பற்ற நிகழ்நேரத் தரவைச் (சநயட-வைஅந னயவய) சார்ந்து இயங்கியுள்ளன.

சோதனையில் பயன்படுத்தப்பட்ட TH-618 வாகனங்கள் 61.5 செ.மீ (24.2 அங்குலம்) நீளமும் 20 செ.மீ (7.8 அங்குலம்) அகலமும் கொண்டவை என்று வடமேற்கு பாலிடெக்னிகல் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. இந்த ட்ரோன்கள் 5.14 கிலோ (11.33 பவுண்டுகள்) எடையுள்ளவை, அதிகபட்சமாக 30 கி.மீ (18.6 மைல்கள்) வரை செல்லக்கூடியவை மற்றும் தொடர்ச்சியாக எட்டு மணி நேரத்திற்கும் மேலாக இயங்கக்கூடியவை என்று அது கூறியுள்ளது.

வடமேற்கு பாலிடெக்னிகல் பல்கலைக்கழகமானது நிகழ்நேரத் தொடர்புகளின் சிரமம் மற்றும் சுற்றுச்சூழல் சவால்கள் உட்பட நீருக்கடி வழிசெலுத்தலின் சிக்கல்களையும் இதன் வாயிலாக சுட்டிக்காட்டியுள்ளது எனலாம்

நீருக்கடி இலக்குகளை உணர்தல், தகவல் உணர்தல், ஒலித் தொடர்பு மற்றும் காட்சிப் பார்வை ஆகியவற்றில் இருபது ஆண்டுகளுக்கும் மேலான ஆராய்ச்சியின் மூலம் இந்த சாதனை சாத்தியமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விரிவான கடல் தள வரைபடம் தயாரித்தல் மற்றும் எண்ணெய் மற்றும் எரிவாயு குழாய் ஆய்வு போன்ற ஆராய்ச்சி மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்கள் உட்பட, பல நீரியல்சார் செயற்பாடுகளிற்கு தன்னாட்சி ட்ரோன்கள் உருவாக்கப்பட்டதன் மூலம் அவை மேலும் பல பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருவதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

நூற்றுக்கணக்கான ட்ரோன்கள் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்ளாமல், தங்களுக்குள் பரஸ்பரம் தகவல்களைப் பகிர்ந்து கொண்டு குழுவாகச் செயல்படும் இந்தத் தொழில்நுட்பம், கடல்சார் ரோபாட்க்ஸ் துறையில் மிகப்பெரிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

BEHIND ME MEDIA

# உலக எலெக்ட்ரானிக்ஸ் சந்தையைக் கைப்பற்றும் நாடுகள்

காலையில் நாம் எழுந்தவுடன் பார்க்கும் மொபைல் போன், கணினி, தொலைக்காட்சி, ஸ்மார்ட்வாட்ச் முதல் காருக்குள் இருக்கும் எலெக்டிரானிக்ஸ் சாதனங்கள் வரை, எதுவாக இருந்தாலும் அதன் பின்னால் ஒரு மிகப்பெரிய உலகளாவிய தொழில்துறை வலைப்பின்னல் இருக்கிறது. உலகில் எலக்ட்ரானிக்ஸ் பொருட்களை அதிக அளவில் தயாரிக்கும் நாடுகள் எவை?

சமீபத்திய தரவுகளின்படி, சீனா, உலகின் டிஜிட்டல் ஹார்டுவேர் உற்பத்தித் திறனில் 58.8 சதவீதத்தைக் கொண்டுள்ளது. அதாவது, உலகின் எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி வரைபடத்தில் சீனா மிகப்பெரிய மையமாகத் திகழ்கிறது. அடுத்த இடங்களில் தைவான் 10.2%, தென் கொரியா 6.7%, ஜப்பான் 4.8%, இந்தியா 3.8% ஆகியவை உள்ளன.

1.சீனா – உலகின் மிகப்பெரிய எலெக்ட்ரானிக்ஸ் உற்பத்தி தொழிற்சாலை

உலக எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தியில் சீனாவின் ஆதிக்கம் அபரிமிதமானது. ஸ்மார்ட்போன், கணினி, தொலைக்காட்சி,பிரின்டட் சர்கியூட் போர்டு, எலெக்டிரானிக்ஸ் உதிரி பாகங்கள் என பல்வேறு துறைகளிலும் சீனா மிகப்பெரிய உற்பத்தி தளமாக உள்ளது.

2. தைவான்

பரப்பளவில் சிறிய தைவான், உலகின் மிக முக்கியமான செமிகண்டக்டர் மையங்களில் ஒன்று. குறிப்பாக உயர் நவீன சிப்ஸ் தயாரிப்பில் அதன் பங்கு மிகப்பெரியது. இதனால் ஒரு மொபைல் போன் அல்லது கணினி எந்த நாட்டில் அசெம்பிள் செய்யப்பட்டிருந்தாலும், அதற்குள் இருக்கும் முக்கிய சிப் வேறு ஒரு நாட்டில் குறிப்பாக தைவானில் தயாரிக்கப்பட்டிருக்கலாம்.

3. தென் கொரியா

தென் கொரியா எலெக்டிரானிக்ஸ் உலகில் மற்றொரு மிகப்பெரிய சக்தி. சாம்சங் போன்ற நிறுவனங்களின் மூலம் ஸ்மார்ட் போன்கள், டெலிவிஷன் செட்கள், டிஸ்பிளே போர்டுகள், மெமரி சிப்ஸ் மற்றும் செமிகண்டக்டர் துறைகளில் அந்த நாடு முன்னிலையில் உள்ளது. 2024-ல் தென் கொரியாவின் எலெக்டிரானிக்ஸ் உற்பத்தி சுமார் 162 பில்லியன் டாலர் என மதிப்பிடப்பட்டது.

4. ஜப்பான்

ஒருகாலத்தில் சோனி, பானசானிக், டொஷிபா போன்ற நுகர்வோர் எலெக்டிரானிக்ஸ் நிறுவனங்களால் உலக சந்தையை ஆக்கிரமித்திருந்த ஜப்பான், இன்று தனது கவனத்தை பல உயர்தர எலெக்டிரானிக்ஸ் காம்பொனென்டுகள், சென்சார்கள், செமிகண்டக்டர்கள் துறைகளில் செலுத்துகிறது.

5. இந்தியா

இந்தியா எலெக்டிரானிக்ஸ் துறையில் இப்போது மிகவும் கவனிக்கத்தக்க நாடாக மாறியுள்ளது. 2024–25 தரவுகளின்படி டிஜிட்டல் ஹார்டுவேர் உற்பதியில் இந்தியா 3.8% பங்குடன் ஐந்தாவது இடத்தில் உள்ளது.

6. வியட்நாம் – மொபைல் போன்களின் புதிய மையம்

குறைந்த உற்பத்திச் செலவு, ஏற்றுமதிக்கு ஏற்ற சூழல் மற்றும் பெரிய சர்வதேச நிறுவனங்களின் முதலீடுகள் காரணமாக வியட்னாம் இந்தத் துறையில் வேகமாக வளர்ந்து வருகிறது.

அமெரிக்கா எங்கே?

அமெரிக்கா உலகின் மிகப்பெரிய தொழில்நுட்பம் மற்றும் செமிகண்டக்டர் நிறுவனங்களின் தாயகமாக இருந்தாலும், மொத்த எலெக்டிரானிக்ஸ் துறை உற்பத்தித் திறன் என்று பார்த்தால், அதன் பங்கு சீனா மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளைவிட குறைவாக உள்ளது. 2024 - 25 டிஜிட்டல் ஹார்டுவேர் உற்பதி தரவரிசையில் அமெரிக்கா 2.9% பங்குடன் ஏழாவது இடத்தில் உள்ளது.

புலனாய்வுப் பக்கங்கள்

BEHIND ME MEDIA

# இலங்கை இராஜதந்திர கடல்சார் நெருக்கடியில் உள்ளதாக அமெரிக்க ஊடகம் தகவல்!

ஈரானிற்கு திரும்பி செல்ல முடியாத நிலையில் அந்த நாட்டை சேர்ந்த 20க்கும் மேற்பட்ட எண்ணெய் கப்பல்கள் இலங்கையின் தென்மேற்கு கரையோரத்திற்கு வெளியே நங்கூரமிட்டுள்ளதாக தெரிவித்துள்ள அமெரிக்காவை சேர்ந்த வோல்ஸ்ரீட் ஜேர்னல் இந்த கப்பல்கள் எரிபொருள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன கப்பலில் உள்ளவர்கள் போதிய குடிநீர் மற்றும் உணவு இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் வோல்ஸ்ரீட் ஜேர்னல் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஈரான் எரிபொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் சீனா போன்ற நாடுகளுக்கு சட்டவிரோதமாக எரிபொருளை கொண்டு சென்ற கப்பல்களே தற்போது இலங்கை கடற்பரப்பிற்கு வெளியே நங்கூரமிட்டுள்ளன.

ஈரானின் எண்ணெய் விநியோகத்துடன் தொடர்புடைய கப்பல்களுக்கு சேவைகளை வழங்கவேண்டாம் என அமெரிக்கா உலக நாடுகள் மீது அழுத்தங்களை திணித்து வருகின்றது.

ஈரானின் எரிபொருளை இறக்கிய பிறகு மீண்டும் அவற்றை கொண்டு வருவதற்காக செல்லும் கப்பல்கள் தற்போதுஈரானிய துறைமுகங்களுக்கு செல்ல முடியாத அல்லது செல்ல விரும்பாத நிலையில் உள்ளன.

இவை நங்கூரமிடும் இடமாக இலங்கையின் விசேட பொருளாதார வலயத்திற்கு வெளியே உள்ள கடற்பகுதி காணப்படுகின்றது.

இலங்கை அதிகாரிகள் அந்த கப்பல்களை தொடர்ந்தும் கண்காணித்துவரும் அதேவேளை அந்த கப்பல்கள் தங்கள் கடற்பகுதிக்கு வெளியே இருப்பதால் தங்களது அதிகார வரம்பிற்குள் இல்லை என தெரிவிக்கின்றனர்.

இலங்கையை பொறுத்தவரை இந்த எண்ணெய் கப்பல்களின் பிரசன்னம் இலங்கைக்கு இராஜதந்திர கடல்சார் நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது.



இந்த கப்பல்கள் இலங்கையின் கடற்பரப்பிற்கு வெளியே உள்ளதால் கப்பல்கள் தொடர்பாக அதிகாரம் செலுத்த முடியாத நிலையில் இலங்கை காணப்படுகின்றது. தடை செய்யப்பட்ட கப்பல்களுக்கு இலங்கை நிறுவனங்கள் உதவிகளை வழங்கினால் அவை நிதி மற்றும் சட்ட சிக்கல்களை எதிர்கொள்ளக்கூடும்.

நீண்டநாட்களாக தரித்து நிற்கும் எண்ணெய் கப்பல் பணியாளர்களின் நலனே உடனடி கரிசனைக்குரிய விடயமாக உள்ளது என அமெரிக்காவின் வோல்ஸ்ரீட் ஜேர்னல் தெரிவித்துள்ளது.

---

# பாதுகாப்பு கோரி இலங்கைக்குள் நுழைந்துள்ள ஈரானிய கப்பல்கள்!



ஹோர்மூஸ் நீரிணைக்குள் நுழையும் ஈரானிய கப்பல்கள் மீது அமெரிக்கா தொடர்ந்தும் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் இலங்கையிடம் பாதுகாப்பு கோரி பல கப்பல்கள் எல்லையில் காத்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் கடற்பரப்பினை அண்மித்த பகுதியில் சுமார் 13இற்கும் மேற்பட்ட ஈரானிய கப்பல்கள் நங்கூரமிட்டுள்ளன.

மேலும் பல கப்பல்கள் அந்தப் பகுதியை நோக்கி நகர்ந்து வருவதாக சர்வதேச கடற்படை புலனாய்வுப் பகுப்பாய்வு வெளிப்படுத்தியுள்ளது.

ஹோர்முஸ் நீரிணையில் ஈரானிய துறைமுகங்களுக்கு செல்லும் கப்பல்களுக்கு அமெரிக்க இராணுவம் தொடர்ந்தும் மறுப்பு தெரிவித்து வரும் நிலையில், இந்த பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

அதற்கமைய ஈரானிய கொடியுடன் கூடிய 13 எண்ணெய் தாங்கி கப்பல்கள் உட்பட மேலும் சில ஈரானிய கப்பல்கள் இலங்கையின் சர்வதேச கடற்பரப்பை அண்மித்த பகுதியில் நங்கூரமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கப்பல்கள் மீண்டும் ஈரானிய துறைகளுக்கு சென்று எரிபொருளை பெற்றுக்கொள்ளும் நம்பிக்கையில் இலங்கையை அண்மித்த பகுதியில் நங்கூரமிடப்பட்டுள்ளதாக டேங்கர்ட்ரேக்கர்ஸ் இணை நிறுவனர் சமீர் மதானி தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தக் கப்பல்களுக்கு இலங்கை அரசாங்கம் எந்தவொரு வசதிகளையோ அல்லது உதவிகளையோ வழங்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானிய கப்பல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. எனினும் இலங்கையின் கடற்பரப்பை தாண்டி, சர்வதேச கடலில் அவை நிலைநிறுத்தப்பட்டுள்ளதால், அவற்றுக்காக பொறுப்பை நாடு ஏற்காது என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அமெரிக்க போர்க்கப்பல்களின் தடை காரணமாக, கடந்த ஜூலை இரண்டாம் வாரத்திற்கு பின்னர் ஈரானின் கார்க் தீவிலிருந்து மத்திய கிழக்கு பகுதிக்கு வெளியே உள்ள எந்தவொரு இலக்குக்கும் எண்ணெய் ஏற்றப்படவில்லை.

கடந்த ஆறு மாதங்களில் அமெரிக்க கடற்படைத் தடையினால் 20 இற்கும் மேற்பட்ட ஈரானிய கப்பல்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதுடன், ஈரான் துறைமுகங்களை நோக்கி வந்த 75 க்கும் மேற்பட்ட சர்வதேச கப்பல்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






BEHIND ME MEDIA

## இணையத்தை அதிரவைக்கும் ரஜினியின் ஜெயிலர் - 2 "பிந்தாஸ்" பாடல்



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் வெளியீட்டிற்கு காத்திருக்கும் 'ஜெயிலர் 2' திரைப்படத்தின் பாடல்கள் வெளியாகி அதிக வரவேற்பை பெற்று வருகின்றன. ஜெயிலர் -2 திரைப்படத்தின் பிந்தாஸ் பாடல் வெளியாகி வைரலாகிக் கொண்டிருக்கிறது. இந்தப் பாடல் வெளியான சில மணி நேரங்களிலேயே சமூக வலைதளங்களில் ஏராளமாக பகிரப்பட்டு வருகிறது.

பாடலின் தலைப்பான 'பிந்தாஸ்' வார்த்தைகள் அதன் பொருளுக்கு ஏற்ப கொண்டாட்ட மனநிலையை வெளிப்படுத்தும் வகையில் உருவாகியுள்ளது. இந்த பாடலை ரஜினிகாந்த் ரசிகர்களை கவரும் வகையில் சூப்பர் சுப்பு எழுதி உள்ளார். சமீபத்திய காலமாக ரஜினிகாந்த் திரைப்படங்களுக்கு இசையமைத்து வரும் அனிருத், ரஜினிக்கென்று தனி பாணி இசையமைப்பை பயன்படுத்தி வருகிறார். பிந்தாஸ் பாடலை தீப்தி சுரேஷ் உடன் இணைந்து இசையமைப்பாளர் அனிருத் தனக்கேற்ற வைப்புடன் பாடியுள்ளார்.

இந்த பாடலை இந்தியா மற்றும் சர்வதேச அளவில் பிரபலப்படுத்துவதற்காக , பாடலில் பிரபல பாலிவுட் சென்சேஷனல் நடிகை நோரா ஃபதேகி துள்ளலாக நடனமாட வைத்துள்ளனர். சர்வதேச அளவில் பிரபலமான பல பாலிவுட் பாடல்களில் நோரா ஃபதேகி தோன்றியுள்ளார். இவரது நடன அசைவுகளுக்கு தனி பெரும் ரசிகர் கூட்டம் உலகெங்கும் உள்ளது. பாடலின் வேகத்திற்கு ஏற்ப அவரது வேகமான நடனமும் தென்னிந்திய ரசிகர்களை அதிகம் ஈர்த்துள்ளது. அவர் இந்த திரைப்படத்தின் ஒரு பாடலுக்கு நடனம் ஆடுகிறார் என்பதை திரைப்பட குழுவினர் மிகவும் ரகசியமாகவே வைத்திருந்தனர்.

இன்று வெளியான வீடியோ ரஜினி ரசிகர்களுக்கு ஒரு இன்ப அதிர்ச்சியாக இருக்கிறது. இத்திரைப்படத்தில் மொத்தம் 12 பாடல்கள் இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது படத்தின் காட்சிகளுக்கு கூடுதல் சுவாரசியத்தை சேர்க்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. பிந்தாஸ் பாடல் ஜெயிலர் முதல் பாகத்தில் இடம்பெற்ற காவலா பாடலின் மறு பதிப்பை போல் இருப்பதாக ரசிகர்கள் கருத்தை தெரிவித்துள்ளனர். ஆனாலும், பாடலுக்கு பயன்படுத்தப்பட்ட இசையும் புதிய பின்னணியும், புதிய நடன கலைஞரும் ரஜினிகாந்தின் தோற்றமும் புதிதாக இருப்பதாகவே அவர்கள் கருதுகின்றனர்.

காவாலா பாடலைப் போன்றே இந்த பாடலும் பெரிய அளவில் வெற்றியை பெறும் என்று எதிர்பார்க்கின்றனர். தமன்னாவின் நடனத்தில் வெளியான அந்தப் பாடல் , அப்போது சமூக வலைதளங்களில் மிகப்பெரிய அளவில் பேசப்பட்டது.ரஜினி ரசிகர்களின் மிகப்பெரிய எதிர்பார்ப்பாக ஜெயிலர் -2 திரைப்படம் உள்ளது. நீண்ட காலமாக ரஜினி மற்றும் அவரது ரசிகர்கள் 1000 கோடி ரூபாய் பாக்ஸ் ஆபிஸ் என்ற மைல் கல்லை எட்ட வேண்டும் என்ற காத்திருப்புடன் இருக்கின்றனர்.

## ரஜினி படத்துக்குப் போட்டியாக 'இரண்டு வானம்'?



'ஜெயிலர் 2' படம் அக்டோபர் 15-இல் வெளியாகிறது. அதற்கு அடுத்த வாரம் விஷ்ணு விஷால் - மமிதா பைஜு ஜோடி சேர்ந்துள்ள 'இரண்டு வானம்' ரிலீஸ். முதல் வாரம் ரஜினி படம் வெளியாவது பற்றிச் சட்டைசெய்யாமல் துணிந்து களமிறங்குகிறது 'இரண்டு வானம்' படக்குழு. முதல் காரணம், விஷ்ணு விஷால் - இயக்குநர் ராம்குமார் கூட்டணியில் 2014-இல் வெளிவந்த 'முண்டாசுப்பட்டி', 2018-இல் வெளிவந்த 'ராட்சசன்' ஆகிய இரண்டு படங்களும் பிளாக்பஸ்டர்கள்!

இவர்கள் மூன்றாம் முறையாக இணைந்திருப்பதால் 'இரண்டு வானம்' எல்லா ஏரியாவிலும் நல்ல விற்பனை. இரண்டாவது காரணம் நாயகி மமிதா பைஜு. இந்த நடிப்பு ராட்சசி நடித்து சமீபத்தில் தமிழில் வெளியான படங்கள் எல்லாமே வசூலைக் குவித்துள்ளன. சமீப ஆண்டுகளில் மொத்தம் 150 நாள் படப்பிடிப்பு நடத்தப்பட்ட ஒரே படம் என்று கூறியிருக்கிறார் படத்தின் இயக்குநர் ராம்குமார்.

## துருவ் விக்ரமுக்கு மூன்றாவது படத்தில் விருது!



அறிமுகப் படம், அப்பாவுடன் நடித்த இரண்டாவது படம் ஆகியவற்றில் கிடைக்காத பெயர், மாரி செல்வராஜ் இயக்கத்தில் உருவான 'பைசன் காளமாடன்' மூலம் துருவ் விக்ரமுக்குக் கிடைத்தது. துணிவும் போராட்டக் குணமும் கொண்ட ஒரு கபடி விளையாட்டு வீரன் கதாபாத்திரத்தில் அட்டகாசமாகப் பொருந்தியிருந்தார். கதாபாத்திரத்துக்கு ஏற்ற தோற்றம், தொடர்ந்து ஒடுக்கப்படும் ஒருவனின் உடல்மொழி, வெற்றிக்கான ஓட்டத்தில் சளைக்காமல் போராடும் குணம் என நடிப்பில் அவர் காட்டிய பரிமாணங்கள் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தன.

'நடிப்பில் குட்டி விக்ரம்' என்றும் புகழ்ந்தார்கள். அந்த நேர்த்தியான உழைப்புக்கு அங்கீகாரம் கிடைத்துவிட்டது. தனது மூன்றாவது படத்திலேயே சிறந்த நடிகருக்கான 'சைமா' விருதை வென்றிருக்கிறார் துருவ் விக்ரம்.

## மீண்டும் தமிழ்ப் படத்தில் வித்யா பாலன்



இந்தி நடிகையான வித்யா பாலன், தமிழில் 'நேர்கொண்ட பார்வை' படத்தில் நடித்திருந்தார். இப்போது 'ஜெயிலர் 2' படத்தில் நடித்து வருகிறார். இதையடுத்து அவர் ஆர்.பால்கி இயக்கும் தமிழ்ப் படத்தில் நாயகியாக நடிக்கிறார். சுமார் 17 ஆண்டுகளுக்குப் பிறகு பால்கியுடன் அவர் மீண்டும் இணைந்துள்ளார்.

முன்னதாக கடந்த 2009-ம் ஆண்டு வெளியான 'பா' படத்தில் இருவரும் பணியாற்றி இருந்தனர். இந்தப் புதிய படத்தின் படப்பிடிப்பு தொடங்கியுள்ளதாகப் புகைப்படத்துடன் வித்யா பாலன் தெரிவித்துள்ளார். இப்படத்துக்கு இளையராஜா இசை அமைக்கிறார். இது ஒரு பாடகியின் பயோபிக் என்று தெரிகிறது.

## நவ.20-ல் தனுஷின் 'ஓம்' படம் ரிலீஸ்

தனுஷ் - மம்முட்டி நடிப்பில் உருவாகி இருக்கும் 'ஓம்' படம் நவம்பர் 20-ம் தேதி திரை அரங்குகளில் வெளியாகும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

ஒண்டர்பார் பிலிம்ஸ் மற்றும் ஆர் டேக் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித் திருக்கும் தனுஷின் 55-வது படம் 'ஓம்: சாப்டர் 1'. இந்தப்படத்தை ராஜ்குமார் பெரியசாமி இயக்கி இருக்கிறார். எழிலரசு ஒளிப்பதிவு செய்திருக்கிறார். சாய் அபயங்கர் இசையமைத் துள்ளார்.

இந்தப் படத்தில், தனுஷ், மம்முட்டி யுடன் சாய் பல்லவி, ஸ்ரீலீலா, இந்திரன்ஸ் உள்ளிட்ட பலர் நடித்துள் ளனர். இந்தப் படம் அக்டோபர் 16-ம் தேதி வெளியாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலை யில், அக்டோபரில் ரஜினியின் 'ஜெயிலர் 2' படம் வெளியாக இருப்பதால் தனது 'ஓம்' பட வெளியீடு ஒத்தி வைக்கப்படுவதாக தனுஷ் அறிவித் திருந்தார். அதேபோல சூர்யாவின் 'சீன்' படம் தீபாவளிக்கு வெளியாக இருப்பதால், தன்னுடைய படம் தீபாவளிக்கும் வெளியாகாது எனத் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து அவர், "சினிமா துறையின் ஒட்டுமொத்த நலனைக் கருத்தில் கொண்டு, பெரிய திரைப் படங்கள் புரிதலுடன் ஒவ்வொருவரின் முடிவுகளை மதித்து நடக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.




விரைவில் 'ஓம்' படத்தின் புதிய வெளியீட்டுத் தேதி அறிவிக்கப்படும்" எனத் தெரிவித்திருந்தார். இந்த நிலையில், 'ஓம்' படத்தின் புதிய வெளியீட்டுத் தேதி தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. படத்தின் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றான ஆர் டேக் ஸ்டுடியோஸ் அதன் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் இந்த தகவலைப் பகிர்ந் துள்ளது. மம்முட்டி மற்றும் தனுஷ் துப்பாக்கியுடன் இருக்கும் போஸ்டரை வெளியிட்டு அந்தப் பதிவில், 'இறுதி தாக்குதலுக்கான நாள் நெருங்கிவிட்டது. 'ஓம்' திரைப்படம் 2026 நவம்பர் 26 அன்று உலகமெங்கும் திரையரங்குகளில் வெளியாகிறது' எனத் தெரிவித்துள்ளது.